மங்கையர் மலர்

பிப்ரவரி 87 ரூ 3/—



ஆண்டு மலர்



டிகையின் உற்சாகம்
ன்மடங்கு பெருகிடவே
ங்காகவே அணிந்திடுவீரே
ரதா'ஸின் புதிய டிசைன்களையே.
ன்றும் யௌவனத்துடன் விளங்க
தருணி
பிரகாசம் பொருந்திய அழகிற்கு
தேஜோவதி
சாரதா'ஸ்
(முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600 002
போன் : 87177
N.S.B. ரோடு
திருச்சி-620 002
போன் : 27077







'லக்ஷ்மி'

"லக்ஷ்மி" என்ற பிரபல பெண் எழுத்தாளர் கவராத வாசக, வாசகிகள் இல்லை. மருத்துவக் கல்லூரி மாணவியாக இருந்த நாளிலிருந்து பிரபலமானவர் நடுவில் பல ஆண்டுகள் இந்தியாவில் இல்லை. மீண்டும் தாயகம் திரும்பியவர் கையில் பேனாவை எடுத்த போது, அவருக்கு பகத்தான வரவேற்பு இருக்கத்தான் செய்தது. இறக்கும் நிமிடம் வரை எழுதிக் கொண்டுதான் இருந்தார்.

ஆனால் என்னைக் கவர்ந்தது 'லக்ஷ்மி' என்ற புனைப்பெயருக்குள் ஒளிந்திருந்த பெண்மணியின் பல அருமையான குணப் பரிமாணங்கள்தான். அவரைப் பல சமயங்களில் சந்திக்க நேர்ந்த போதெல்லாம் அந்தப் பெண்மணிக்குள் விகசித்த குணங்களைக் கண்டு வியந்திருக்கிறேன்.

லக்ஷ்மி பல காலமாக நோய்வாய்ப்பட்டிருந்தார். ஒன்று போனால் ஒன்று எனப் பலவேறு உடற்கோளாறுகள். 'ரொம்ப முடிய மாட்டேங்குதும்மா' என்பாரே தவிர அதற்காகச் சலித்துக் கொண்டதில்லை. 'ஐயோ, நான் இவ்வளவு முடியாம இருக்கறப்ப இந்த மாதிரி தனியா இருக்கேனே' என்று தன்னைப் பற்றிச் சுயபச்சாதாபம் கொண்டதேயில்லை.

தன் வாழ்க்கையின் குறைபாடுகளை அவர் வருத்தப்பட்டுக் கொண்டு பேசியதாகவே தெரியவில்லை. சொல்பவையும் ஏதோ செய்தி பாணியில்தான் வரும்.

ஒரு சின்ன வருத்தம் என்றாலே, ஊரைக் கூட்டும் பெண்கள் உள்ள காலத்தில் இவர் எத்தனை போராட்டங்களைத் தன் வாழ்க்கையில் சந்தித்து இருக்கிறார் என்றுதான் தோன்றும்.

பார்ப்பதற்குப் பழங்காலப் பெண்மணி போலத் தோன்றுபவர், எத்தனையோ புதுமையான எண்ணங்களைத் தன் மனத்தில் சுமந்திருந்தார். தன் மகனுக்கு முழுச்சுதந்திரம் கொடுத்து, 'அவன் வாழ்வை அவனேதான் நிர்ணயம் செய்ய வேண்டும்' என்றி

மஞ்சுளா ரமேஷ்

ருந்தார்.

எப்போதும் அவர் வீட்டின் மணி ஒலித்துக் கொண்டேதான் இருக்கும். எழுத்தாளரோ, பதிப்பாளரோ, கதை வாங்க வரும் ஆபீஸ் பையனே எல்லோரிடமும் இன்முகம் தான்.

அவருக்குக் கோபம் வருவது ஒரே ஒரு சந்தர்ப்பத்தில்தான். அது' ஆபாசமானஎழுத்துக்களைப் பார்க்கும்போது' தான். 'ஐயோ இவ்வளவு மோசமா எழுதறாங்களே' எனச் சதா அங்கலாய்ப்பார். எந்த மேடை கிடைத்தாலும் இந்த விஷயத்தைப் பற்றி அவர் பேசாமல் இறங்கியதே இல்லை.

எழுத்துப் பணிக்கும், உடல் வருத்தங்களுக்கும் இடையிலும் கூட அவர் ஆர்வமுடன் மேற்கொண்ட பணி மற்றொன்று உண்டு. அதுதான் சமூக சேவை. அவருடைய உயிர்த்தோழி டாக்டர் சுந்தரிமேனனுடன் சேர்ந்து பல ஊர்களுக்கும் சென்றிருக்கிறார். மருத்துவ முகாம், புற்று நோய்ப் பரிசோதனை முகாம்என பங்கேற்றிருக்கிறார்.

அனைத்திற்கும் மேலாக —


தாய்மையின் கனிவோடு, மலர்ந்த சிரிப்போடு பேசும் அந்த முகத்தை மறக்கவே முடியவில்லை.


உ. பி. மாநிலத்தின் கலாசாரப் பண்பாட்டைத் தமிழகம் அறிய வேண்டி ஒரு கலைவிழா சமீபத்தில் சென்னையில் நடந்தது. தமிழக ஆளுநர் எஸ். எல். குரானா துவக்கி வைக்க, உ. பி. மாநில முதல்வர் வீர்பகதூர் சிங் விழாவிற்குத் தலைமை வகித்தார்.



சமீபத்தில் நடந்த இசை விழாவில் குமாரி யாமினி பிரியதர்சினியின் பரத நாட்டிய நிகழ்ச்சிகள் சென்னை தமிழ் இசைச் சங்கத்திலும், கிருஷ்ண கான சபையிலும் நடந்தன. இவர் கலைமாமணி சரஸா அவர்களின் மாணவி. இரண்டு இடங்களிலும் இவரது நடனம் அருமையாக அமைந்து அவையோரின் பாராட்டுதல்களைப் பெற்றது. யாமினியின் கலை ஆர்வம் மேலும் மேலும் வளர நாமும் வாழ்த்துகிறோம்.







* ஜெயமணி


எளிய பிரசவத்திற்கு:

ஆமணக்கெண்ணெய் 2 தேக்கரண்டி, பூண்டு 2, மஞ்சள் தூள் அரைத் தேக்கரண்டி. முதலில் ஆமணக்கெண்ணெயில் பூண்டையும் மஞ்சள் தூளையும் போட்டுக் காய்ச்சி இளஞ்சூடாக இருக்கும்போது, இடுப்பு, அடிவயிறு, தொடை ஆகியவற்றில் தடவியபின் சுமார் 10 நிமிடங்கள் கழித்து, இளம் சூடான வெந்நீரில் குளிக்கவும். வாரம் இரண்டு அல்லது மூன்று முறை எட்டு மாதங்கட்கு மேற்பட்ட கருத்தரித்த தாய்மார்கள் குளித்து வந்தால் சுகப் பிரசவமாகும். மேலும் கருத்தரித்த தாய்மார்களுக்கு ஏற்படும் கால் உளைச்சலும் நீங்கும்!


— மேஜர்தாசன்.

குழந்தைகள் பால் குடிக்கும் புட்டி அல்லது டம்ளர் போன்றவை அவர்கள் கையில் இருந்து நழுவிக் கீழே விழாமல் இருக்க, அவற்றைச் சுற்றிச் சில ரப்பர் பேண்ட்களைப் போட்டு அவர்களுக்குக் கொடுக்கலாம். குழந்தைகளும் இந்தப் புதுமையை ரசித்துப் பால் குடிக்கும்.

— ஜி. ராமலட்சுமி.



* ஜானகி 19 லிருந்து 1 வரை (நேர்ப் புள்ளி).



* சுமதி ரகுநாதன் 21 புள்ளி 5 வரிசை 5 வரை.

கடி: (Kadi)— 'கடி' என்பது 'மோர்க் குழம்பு' ரகத்தைச் சேர்ந்தது. அதிகம் புளிப்பில்லாத மோரில் (நன்றாகக் கடைந்து வைத்துக் கொள்ள வேண்டும்.) உப்பு, மஞ்சள் பொடி, 3 ஸ்பூன் கடலை மாவு, காயம் இவற்றைக் கலக்கவும். வாணலியில் கடுகு, பச்சை மிளகாய், கறிவேப்பிலை தாளித்து தனியா, சீரகம் சேர்த்துப் பொடித்த பொடியில் ஒரு ஸ்பூன் போட்டுக் குழம்பைக் கொட்டி இரு கொதிகள் வந்ததும் இறக்கவும். பிடித்தமானால் வெல்லம் சிறிய துண்டு சேர்க்கலாம்.

— காயத்ரி.

'மங்கையர் மலரை'ப் படித்து

மனம் திருந்தினேன்!

பரிசு ரூ. 100 பெற்ற கட்டுரை

அக்டோபர் இதழில் வெளியான "குழந்தைகளை ஒப்பிட்டுப் பேசாதீர்கள்!" என்ற தலைப்பில் மனவியல் நிபுணர் காழியப்பன் அவர்களின் கட்டுரை எங்கள் வாழ்க்கையில் இனிமையான பல மாற்றங்கள் ஏற்படக் காரணமாயிற்று.

எனக்கு முதல் பிரசவத்திலேயே இரட்டைப் பெண் குழந்தைகள். குழந்தைகளைப் பற்றிய கட்டுரைகள் எதில் வந்தாலும் தவறாமல் படித்துவிடும் நான் கூடியவரை அவற்றைப் பின்பற்றவும் செய்வேன். குழந்தைகளுக்குப் படிப்புதான் முக்கியம் என்ப



தால் எப்பொழுதும் 'படி, படி' இதுதான் எனது தாரக மந்திரம்.

நான் ஃபேபரிக் பெயிண்டிங் வகுப்புக்கள் நடத்துவதால் அதைப் பார்த்துக் குழந்தைகளுக்கு மிகுந்த ஆசை. நான் விதம் விதமாய் தைப்பதைப் பார்த்துத் தைக்க ஆசை. படிப்பிற்குப் பின்தான் எல்லாம் என்று நானே வீட்டில் வைத்துச் சொல்லிக் கொடுக்கக் கூடியவற்றைக் கூட அவர்களுக்குச் சொல்லித் தந்ததில்லை. இந்தக் கோடை விடுமுறையில் அவர்களுடைய தோழிகள் பெயிண்டிங் கற்றுக் கொள்ள வந்ததால் அவர்களோடு சேர்த்துச் சொல்லிக் கொடுத்தேன். அதுவும் ஸ்கூல் திறந்தபின் இதையே வைத்துக் கொண்டு பொழுதைக் கழிக்கக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில்தான். மிக நன்றாக வருவதைப் பார்த்துச் சந்தோஷப் பட்டேனே தவிர ஊக்கப் படுத்தவில்லை. இரட்டையரில் ஒரு பெண் வண்ணம் தீட்டும் போட்டியில் அகில இந்திய அளவில் 3 வது பரிசு பெற்று, இவ்வூர் பத்திரிகைகளாலும், பள்ளி நிர்வாகிகளாலும் பாராட்டப் பெற்றாள். அவளுக்கு ஒரு கண்ணில் குறை. அதைச் சரியாக்கும் வைத்திய முயற்சிகளில் படிப்பில் கொஞ்சம் அடுத்தவளை விடப் பின்தங்கி விட்டாள். அவளுக்குக் கலைகளில் ஆர்வம் அதிகம். ஆகவே அவற்றை அவள் அதிக நேரம் செய்தால் ஒப்பிட்டோ, குத்தியோ காட்டி மிகவும் சகஜமாக நிறைய தடவை பேசியிருக்கிறேன். இந்த நிலையில்தான் நான் மேலே குறிப்பிட்ட கட்டுரையைப் படிக்க நேர்ந்தது.

அந்தக் கட்டுரைதான் என் கண்ணை முழுவதும் திறந்துவிட்டது என்று சொன்னால் மிகையாகாது. குழந்தைகளுக்கு இயல்பாகவே வரும் பெயிண்டிங் கலையை நன்றாக வளர்க்கத் தீவிர முயற்சி எடுத்துக் கொண்டேன். மனப்பாடம் செய்யாமல் சுயமாக எப்படி எழுதுவது என்று சொல்லிக் கொடுக்க ஆரம்பித்துள்ளேன். இதனால் நேரம் கொஞ்சம் கிடைத்தது. அவர்களைப் பாராட்டி இந்தோ அமெரிக்கன் கிளப்பின் கேரளா கிளை அவர்கள் ஓவியங்களை அனுப்பக் கோரியிருந்தனர். அவ்வோவியங்கள் பலராலும் பாராட்டப் பெற்று யு. கே. க்கு அனுப்பப்பட்டுள்ளனவாம். நம் பாரதப் பிரதமருக்கும் நேருஜி அவர்களின் பிறந்த நாளையொட்டி ரோஜாப்பூ ஒன்றை பெயின்ட் செய்து அனுப்பியதோடு பாடப் பகுதிகளைக் குறைக்கக் கோரியும் கடிதம் எழுதி அனுப்பினர். அவர்கள் பெயின்ட் செய்ததைப் பாராட்டி, கல்வியின் அவசியத்தை உணர்த்தி, அவர்களை வாழ்த்தி நம் பிரதமர் கடிதம் எழுதினார். பல பத்திரிகைகளிலும் அச்செய்தி பிரசுரமாகிக் குழந்தைகளுக்குப் பெருமை தேடித் தந்தது. இவையெல்லாம் ஆக்கத் திறனுக்கு சிறப்புக் கிடைக்க ஆரம்பித்து விட்டதையே குறிக்கின்றதல்லவா?

பள்ளிப் பாடங்களை மட்டுமே 'படி, படி' என்று சொல்லிக் கொண்டிராமல் குழந்தைகளின் ஆர்வம் எதில் இருக்கிறது எனப் பார்த்து அவர்களின் திறமையைப் புரிந்து கொண்டு, சிறு வயதிலிருந்தே அவர்களைச் சிறப்பான முறையில் தயாரிக்க முற்படுவோம்.

— வசந்தலக்ஷ்மி, திருநெல்வேலி.

பிரசுரிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள்:

நான் என்னைப் பற்றி இங்கே முழுவதும்



சொல்லிக் கொள்ள விரும்பவில்லை. நான் எனது வாழ்வின் ஒவ்வொரு நாளும் அழுது கொண்டிருந்தேன். நான் அழாத 'நாளே இல்லை எனலாம். நான் சென்ற 86 ஆம் வருடம் ரம்ஜான் அன்று என் வாழ்வை வெறுத்த நிலையில் உலகமே வஞ்சம் என்று தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்தேன். அப்போதுதான் ஜூலைமாதமங்கையர் மலரில் சில பிரச்னைகள்; சில வார்த்தைகள் என்ற பகுதியில் மஞ்சுளா ரமேஷின் 'ஏன் அழ வேண்டும்?' என்ற கட்டுரை என் கண்ணில் பட்டது.

அதில் 'வாழ்க்கையை அதன் போராட்டங்களுடன் சந்திக்கும் துணிவை நாம் பெண்களுக்கு அளிப்போம். அப்போதுதான் அவர்களுடைய கனவுகளும் லட்சியங்களும் கைகூடும். இது பெண்கள் கண்ணீர் விட வேண்டிய காலமில்லை. காரியத்திலேயே கண்ணாக இருந்து சாதனை புரிய வேண்டிய சகாப்தம்' என்ற கடைசி வரிகள் என் மனத்தைத் தொட்டு இடப்படுத்தியது.

உடனே நான் தற்கொலை முயற்சியை விட்டு விட்டேன். அன்றிலிருந்து இன்று வரை வாழ்க்கையுடன் போராடியாவது வாழ்ந்தே சாதனை புரிய வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். அந்தக் கட்டுரையை என் உயிருள்ள வரை என்னால் மறக்கவே முடியாது.

— திருமதி. சுஹரவர்தீன், இருமேனி.

என் புத்திர சிகாமணிகளுக்கு வயிற்றில் பூச்சித் தொல்லை. அஜீரணத்திற்கு வேப்பங்கொழுந்து அரைத்துத் தந்தால் அதை விழுங்கக் கற்கண்டு, சர்க்கரை கொண்டா என்ற பின் பாட்டு... (ஸ்வீட்



அதிகம் சாப்பிட்டு இருமும்) இருமலுக்கு ஆடா தொடை, சித்திரத்தைக் கஷாயமா? கற்கண்டு தந்தால்தான் குடிப்பேன்... ஹோம் ஒர்க் முடிக்கணுமா? ஒழுங்காய் மீதம் வைக்காமல் இறைக்காமல், சிந்தாமல் சாப்பிட வேண்டுமா? சாக்லேட் தந்தால்தான் ஆச்சு... பர்த்டே, உறவினர் வருகை, சின்ன விசேஷம், ஸ்வீட்ஸ், டாஃபி, பாயசம்... என்று எறும்பு இழுத்துப் போகுமளவு 'இனிப்புப் பைத்தியமாய் இருக்கும் என் குழந்தைகள், அக்கம் பக்கம் வீட்டுக் குழந்தைகள்... யாவருக்கும்... (பல்லைப் பற்றிக் கொஞ்சம்" என்ற கட்டுரையைப் பல முறை படித்துக் காட்டினேன்.

பல்லைப் பராமரிக்க வேண்டிய வகைகளை, ஸ்வீட்களின் ஆதிக்கத்தை என் நாலு வயது மகன் கூடப் புரிந்து கொள்ளும்படி நிதானமாய்ப் படித்துக் காண்பித்தேன். (ஒன்பது வயதாகியும் பால் பல் விழாத சினேகிதியின் குழந்தைக்கு உடனடியாய் பல் டாக்டரிடம் காண்பிக்கும்படி, கட்டுரையின் டாக்டர் கூறியதை எடுத்துக்காட்டிக்கூறினேன். கட்டுரையின் பயனாய்... அக்குழந்தைக்கு நிலைப் பற்கள் கீழே இருந்தும், பற்களை நெம்பி முளைக்கத் தாமதித்துள்ளது என்றும் டாக்டரிடம் காண்பிக்காமலே இன்னும் சில மாதம் இருந்திருந்தால், அந்நிலைப் பற்கள் கீழ் நோக்கி முளைத்து, தாடை எலும்பைப் பாதித்திருக்கும் என்றும் டாக்டர் கூறி மருத்துவ உதவி செய்தார்.)

பல்லைப் பற்றிய கட்டுரை வந்தபின் என் குழந்தைகளும் அவர்களின் சினேகிதிகளும் இருவேளையும் சுத்தமாய்ப் பல் துலக்குகிறார்கள். அதிகம் இனிப்பு சாப்பிடுவதில்லை. இனிப்பு, ஐஸ் போன்றவை சாப்பிட்டதும் 'வாய் கொப்புளிக்கிறார்கள். பிறந்த நாள் என்றால்... சாக்லேட் தந்து கொண்டாடுவதில்லை. பழம் (சீசனுக்குத் தகுந்தபடி) சிறு பென்சில், பலபபம், லெட் பென்... இவற்றைச் சினேகிதர்களுக்குத் தந்து பிறந்த நாள் விழா... பாயசம் உண்டு. ஆனால் ஸ்பெஷல் ஸ்வீட் கிடையாது. கஷாயம், மருந்து சாப்பிடச் சர்க்கரை கேட்பதில்லை.

குழந்தைகளின் ஆரோக்கியமான உடல் வளம் மட்டுமில்லை, மாதாமாதம் ஒன்றரை கிலோ சர்க்கரையும் மிச்சமாகிறது.

— எஸ். கனகவல்லி சாரங்கபாணி,
கூடவாசல்.

மங்கையர் மலர் பத்திரிகை படித்துப் பெண்கள் மட்டும்தான் பயன் அடைய வேண்டும் என்பதில்லை. என் சினேகிதியின் கணவர் அடியோடு மாறிவிட்டார். செப்டம்பர் மாத இதழின் முதல் பக்கத்தில் 'பாலா என்பவர் செய்த பேட்டி 'மனைவியைக் கணவன் அடிக்கலாமா?' என்ற தலைப்பில் வெளியாகி இருந்தது. என் சினேகியின் கணவரோ தொட்டதற்கெல்லாம் கோபம் வரும் குணம் உடையவர். எல்லாக் கோப தாபங்களையும் மனைவி மீதே காண்பிப்பவர். எத்தனையோ பேர் எடுத்துச் சொல்லியும் கேட்காதவர். அப்படிப்பட்டவர் அந்தப் பேட்டியைப் படித்துக் கொண்டிருப்பதைக் கண்டோம்.

மனைவியை அன்றிலிருந்து அவர் அடிப்பதே கிடையாது. திட்டுவதும் ஓரளவு குறைந்து விட்டது என்று என் சினேகிதி கூறினார். சில நாள் கழித்து அவர் நல்ல



வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



காம்ப்ளான் ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றுடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.

சாதாரணமாக 15 அல்லது 16 வயதிற்குள் குழந்தைகளின் வளர்ச்சி பெரும்பாலும் முழுமையடைந்து விடுகிறது. அவர்களுடைய வளர்ச்சிக்கு நேரடியாக உதவுவது புரதம் என்ற சத்துதான். ஆகவே உங்கள் குழந்தைகளுக்கு தேவை காம்ப்ளான்—இப்போது, காம்ப்ளான் சிறந்த புரதம் கொண்டுள்ளது—பால் புரதம் (20%) அது 22 மூலதார சத்துணவுகளும் கொண்டதாகும்.

காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்.



23

மூலதார சத்துணவுகள் திட்டமிட்ட விகிதங்களில்

புரதம்	ரிபோ
கொழுப்பு	ஃப்ளேவின்
கார்போ	நிகோடி
ஹைடிரேட்	னமைடு
கால்ஷியம்	கால்ஷியம்
பாஸ்பரஸ்	பென்டோதெனேட்
சோடியம்	கோலின்
குளோரைடு	பைரிடாக்ஸின் (பி6)
(உப்பு வடிவில்)	வைட்டமின் (பி12)
பொட்டாஷியம்	ஃபாலிக் அமிலம்
இரும்புச்சத்து	வைட்டமின் ஸி
அயோடின்	வைட்டமின் டி
வைட்டமின் 'ஏ'	வைட்டமின் ஈ
வைட்டமின் 'பி1'	வைட்டமின் கே

பால் சேர்த்திடத் தேவையில்லை.



காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூர்ண உணவு

B84. GLC. 120 Tm



பாப்பா வளர்ச்சிக்கான திட உணவுகளில் பாசத்தாய் அளிக்கும் முதலிடம் ஃபாரெக்ஸ்®

தாய், தன் குழந்தைக்கு தேர்ந்தெடுக்கும் முதலான திட உணவு புதிய செழுமையான ஃபாரெக்ஸ். காரணம்:

பாப்பாவின் உடல் நலத்திற்கான புரதமும், ஜீரணத்திற்கு உகந்த கொழுப்புச் சத்தும் சரியான அளவில் கொண்டது.

பாப்பாவுக்கு ஆரோக்கியமான ரத்தத்தை தரவல்ல இரும்புச் சத்துள்ளது.

எலும்பும் பற்களும் வலுவோடு வளர்ந்திட கால்சியமும் ஃபாஸ்ஃபரஸும் 2:1 என்ற அளவில் சேர்க்கப்பட்டது.

தின்னத் தெவிட்டாதது; கலப்பதும் கொடுப்பதும் எளிது.



பால் சேர்க்கத் தேவையில்லை! நீருடன் கலந்து கொடுத்தாலே போதும்.

தாயன்பைக் கூறிடும் தரமிக்க திட உணவு ஃபாரெக்ஸ்®

CLARION/B/GX/15/203

'மூட்'டில் இருக்கும் போது இதுபற்றிக் கேட்டோம். அப்போது அவர்.. 'நூற்றுக்கணக்கானவர் தங்களைப் பார்ப்பது கூடத் தெரியாமல் ஒருவன் தன் மனைவியை அடித்தான் என்னும் போது அது எவ்வளவு வேதனைக்குரிய விஷயம் என்று தோன்றிற்றாம். நானும் அப்படித்தானே இருக்கிறேன் என நினைத்தாராம். அதனால் கோபம் வந்து அடிக்க வேண்டும் என்று ஆத்திரம் வரும் போது மங்கையர் மலர் கட்டுரையில் எழுதியிருப்பது போல் நூற்றுக்கணக்கானவர் தன்னைப் பார்ப்பது போலத் தோன்றுகிறதாம். அதனால் அந்தச் செயலைச் செய்யவில்லை எனக் கூறினார்.

— இந்திரா ஸ்ரீனிவாசன்,
சென்னை — 33.



அது ஒரு நடுத்தர வர்க்க வீடு. அதுவும் பரபரப்பான காலை நேரம். அந்தக் காலை எட்டு மணி டென்ஷனைக் கற்பனை செய்து பாருங்கள்.

'ஐயோ! கேஸ் தீர்ந்துடுச்சு! ஏங்க, இந்த ரீஃபில் சிலிண்டரை மாத்திக் கொடுங்க!' மனைவி கேட்டதும்,

''ரசத்திலே ஒரே உப்பு கரிக்குது. தூத் தெறி'' கையை உதறிக் கொண்டு எழுந்து கொள்கிறான் கணவன்.

'நான் அளவாதானே போட்டேன்? எப்படித் தூக்கலாயிருக்கும்?' மாமியார்க்காரிக்குச் சந்தேகம்.

'நாசமாப் போச்சு. நீங்க வேறே உப்பைப் போட்டீங்களா?' மனைவி எரிந்து விழுகிறாள்.

புளியை அடைப்பது போல அடைத்திருக்கும் அந்த பஸ்ஸின் நெரிசலில் நசுங்கி, சைதாப்பேட்டையில் இறங்கி, நந்தனத்துக்குச் சுரீர் வெயிலில் வேகு வேகென்று நடந்தாலும் லேட்!

அப்போது ஸ்க்ரூ டிரைவரையும் சால்டரிங் அயர்னையும் கையிலே பிடித்தால் சாயங்காலம்தான் கீழே வைக்க முடியும். இரண்டு பஸ் பிடித்து, வீடு வந்து சேர்ந்தால், காலையில் நடந்தவற்றை மறக்காது ஊடல் சாதிக்கும் மனைவி. தூங்கி விட்டிருக்கும் மகன். தர்மபத்தினி சாப்பிடும்போதுதான் முணுமுணுக்க ஆரம்பிப்பாள். எரிச்சல் கபகபவென்று கிளம்பும்.

அப்பாடி! என்று புத்தகமோ, டேப் ரிகார்டரோ கையில் எடுத்துக் கொண்டு ஆற அமர சாய்ந்தாலோ பிலுபிலுவென்று பிடித்துக் கொள்வாள்.

'உட்கார்ந்தாச்சா? இனி பரபிரம்மம்தான். ஒரு நாளைக்காவது சீக்கிரம் வந்து சினிமா டிராமான்னு அழைச்சிட்டுப் போயிருக்கீங்களா? அட்லீஸ்ட் சிரிச்ச முகமாவாவது இருக்கக் கூடாதா? சரி... நான் வேண்டாம். சின்னக் குழந்தை! அது மூஞ்சிய பார்க்கவாவது சீக்கிரம் வரணும்னு தோணுதா? என்ன உத்தியோகம் வேண்டிக் கிடக்கு? ஒன்றரையணா உத்தியோகம்.'

'இப்போ வாயை மூடப் போறியா இல்லையா? சே! ஏண்டா வீட்டுக்கு வர்றோம்னு இருக்கு' ராட்சசி மாதிரி பிடுங்கறியே' பதிலுக்கு அவன் இரைய, மனைவி முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ள... டென்ஷன்... டென்ஷன்...

இந்தக் குடும்பத்துக் கணவனும், மனைவியும் வேறு யாருமல்ல சாட்சாத் நானும் என் பார்யாளும்தான்.

ஆகஸ்ட் மாதத்தில் ஒரு நாள் புதிய மங்கையர் மலரைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தபோது தற்செயலாக அந்தக் கட்டுரை கண்ணில் பட்டது. ''ஹலோ, உங்களுக்குத்தான் இந்தக் கட்டுரை...'' என்று தலைப்பே கவர, என்ன சொல்கிறது இந்தப் பெண் சிநேஹா? முதலில் சுவாரசியமின்றிப் படிக்க ஆரம்பித்தேன். பின்பு அதில் சொல்லியிருந்த கருத்துக்கள் மனத்திற்கு உற்சாகம் தர, நாமும் ஏன் இந்த வாழ்க்கையைக் கொஞ்சம் சந்தோஷ முலாம் பூசிப் பார்க்கக் கூடாது என்று தோன்றியது.

என்றுமில்லாத திருநாளாக ஆறு மணிக்கே எழுந்து சுருக்கக் குளித்து, குழந்தையுடன் சில நிமிடங்கள் செலவிட்டேன்.

'சப்பாத்தியா? ஃபைன்! இன்னும் கொஞ்சம் கூட்டு வை!' என்று கேட்டு வாங்கிச் சாப்பிட்டேன் பாருங்கள், என் மனைவியின் முகத்தில் மத்தாப்பு வெளிச்சம்.

'பணம் ஏதாவது வேண்டுமா?' என்று ஒப்புக்குக் கேட்டு வைத்தேன். (ஆமாம் என்று சொல்லிவிடப் போகிறாளே என்ற பயம் உள்ளூர). ஆணி அடித்து வைத்தது போல நின்று விட்டாள்.

கன்னத்தில் லேசாய்த் தட்டி 'வரட்டுமா?' என்று கேட்கலாமா என்று நினைத்தேன். வேண்டாம்! என் மனைவிக்கு இதயம் பலவீனமாக இருக்கும். இப்போதைக்கு இது போதும். ஆபீஸுக்குப் புறப்பட்டேன்.

சாயங்காலம் கடுகடுவென்று எரிச்சல் எழும்பியதை, சுத்தமாய்த் துடைத்துவிட்டு, சிரித்த முகமாய் உள்ளே நுழைந்தேன்.

பூ, மகனுக்கு லாலிபாப், அம்மாவிற்கு வாழைப்பழம் சகிதமாக நின்ற என்னை ஏதோ விசித்திரப் பிராணியைப் போலப் பார்த்தாள்.

'நீ சாப்பிட்டாயா?' தட்டு போடு. சேர்ந்தே

சாப்பிடலாம்.' யாராவது இவருக்கு பில்லி சூனியம் வைத்து விட்டார்களா? இதென்ன இப்படிப் பேசுகிறீர்? குழம்பிப் போனாள். இரண்டு பக்கெட் தண்ணீர் இறைத்து வைத்தேன்.

எல்லாவற்றிற்கும் டாப்பாக ராத்திரி 'ரொம்ப வேலையா என் செல்லத்துக்கு?' என்று ஒரு வார்த்தை கேட்டேன் பாருங்கள். என்ன மாயமோ? மந்திரமோ? அப்படியே உச்சி குளிர்ந்து போய் விட்டாள். அப்புறம் என்ன?

இப்போதுவீட்டில்ஒரு டென்ஷன் இல்லை. ஒரு கடுமையான இறுக்கம் இல்லை. நிஜமாகவே வாழ்க்கை புதிதான சுவையோடு தெரிகிறது.

தேங்க்யூ ஸ்நேஹா! தேங்க்யூ மங்கையர் மலர்.

— ஆர். சேகர், சென்னை — 35.



குடும்பத்துப் பெண்கள் அனைவருக்குமே எப்போதும் ஒரு தீராத குறை இருந்து கொண்டே இருக்கும். "சே! காலையிலிருந்து ராத்திரி வரைக்கும் உழைக்கிறேன். ஒரு தலைவலி கால்வலின்னு இருக்கயா செத்தையான்னு" கேக்கக் கூட ஆளில்லை. சே, இந்தக் குழந்தைகளுக்காவது கருத்து இருக்கா? ஒவ்வொண்ணும் நானே பார்த்துப் பார்த்துச் செய்ய வேண்டியிருக்கு. ஒரு ஒத்தாசை உண்டா?

இப்படிப் பெருமூச்சு விடும் தாய்மார்கள் வீட்டுக்கு வீடு இருக்கத்தான் செய்வார்கள்.

என் தோழி இம்மாதிரி பெருமூச்சு விடும் ரகம்தான். அவளிடம் என்ன சொல்லித் திருத்துவது? குடும்பச் சுமையும் ஒரு மகிழ்ச்சியான பாரமே. பெண்கள் எதையும் வெளிப்படையாகக் கூறிவிடுவார்கள். ஆண்கள் கஷ்டங்களை மனத்தில் வைத்து அவதிப்படுவார்கள். இதற்கெல்லாம் கவலைப்படலாமா?

இப்படி அவளிடம் கூறித் திருத்தலாம் என்றால் 'போச்சுடா சாமி. எனக்கு சிநேகிதியும் சரியில்லை. நான் யார்கிட்டே சொல்லிப்பேன். என் தலை எழுத்தை?' என்று ஒரு புதுக்கவலையையும் அவள் லிஸ்டில் சேர்த்து விட்டால் என்ன செய்வது என்று யோசித்த போது கைகொடுத்தது 'மங்கையர் மலர்' ஜூலை இதழில் வந்துள்ள 'வாழ்விலே தெளிவு பெற்றேன்' என்ற புத்தகத் தொகுப்புக் கட்டுரை.

புத்தகத்தை எடுத்துக் கொண்டு சிநேகிதியைத் தேடி ஓடினேன். மறுவாரம் பார்க்கில் குழந்தைகளுடன், அவளை அவள் கணவருடன் பார்த்தபோது மகிழ்ச்சியால் மனம் நிறைந்தது.

அவள் என் கைகளைப் பற்றியபடி, "அந்தக் கட்டுரையைப் படித்தபின்தான் உண்மையை உணர்ந்தேன். ஆபிஸிலிருந்து அலுத்து வரும் அவருக்கு நான் என்ன செய்திருக்கிறேன்? வீட்டுச் செலவுகளை ஈடு செய்ய ஓவர் டைம் செய்து விட்டு வரும் அவரிடம் ஓர் இனிமையான பேச்சு பேசியிருக்கிறேனா? எப்போதும் என்னைப் பற்றியே சிந்தனை, குழந்தைகளை விரட்டுவதும் கோபிப்பதும், சீ நான் என்னையே இப்போதுதான் புரிந்து கொண்டேன்!" என்று தழுதழுத்த குரலில் கண்கள் பனிக்கக் கூறினாள்.

எஸ். விஜயா சீனிவாசன், திருச்சி — 14.

அக்டோபர் மாத மங்கையர் மலரில் விமலா ரமணி எழுதிய 'மனமே கோவிலாகி' என்ற குறுநாவல் என்னை மிகவும் பாதித்து விட்டது.

கதையில் வரும் ஜானகி அம்மாள் போல் என் மாமிக்கும் கொலு வைப்பதில் ஆசைகள் அதிகம். கடந்த இரண்டு வருடங்களாக உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அவர்களால் கொலு வைக்க முடியவில்லை. கதையில் வரும் அம்பிகா போல் கொடுமைக்காரியில்லை நான். இருந்தாலும் கொலு வைப்பது ஏனோ பிடிக்கவில்லை. என்னிடம் கொலு வைக்கும்படி கூறுவார்கள். நானும், "என்னால் முடியாது. இத்தனை வருடம் வைத்தீர்கள் அல்லவா? எல்லாம் போதும்" என்று கூறிவிட்டேன்.

நவராத்திரியன்று விரதம் மட்டும் இருப்பார்கள். நவராத்திரிக்குப் பலவிதமான பலகாரங்கள் செய்வேன். 'எல்லாம் நன்றாகச் செய்கிறாய். கொலு வைத்தால் இன்னும் நன்றாக இருக்கும்' என்று சொல்வார்கள். நான் அதைக் காதில் வாங்கிக் கொள்வதேயில்லை.

கதையைப் படித்த பின்புதான் ஜானகி அம்மாள் போல் என் மாமியும் எத்தனை ஆசைகளை மனத்திற்குள் வைத்துக் கொண்டு கொலு வைக்கச் சொல்வார்கள், நாம் அதை மதிக்காமல் பதில் சொல்வோமே என்று நினைத்து ரொம்பவும் மனவேதனைப் பட்டேன்.

கதையை மாமியிடம் படித்துக் காட்டி மன்னிக்கும்படி சொன்னேன். மாமியின் முகத்தில்தான் எத்தனை சந்தோஷம்! "இப்பொழுதுதானடி நீ என் மாட்டுப் பெண்" என்று சொல்லி மனம் விட்டுச் சிரித்தார்கள். இந்த வருடம் எங்கள் வீட்டுக் கொலு அமர்க்களமாக நடந்தது.

— சாந்தி, தேவகோட்டை.



1



2



3

சொல்லுங்கள் பார்க்கலாம்...

1. இந்தப் படத்தில் வைரக் கற்களைப் பார்க்கிறீர்கள். தமிழகத்தில் செயற்கை வைரம் தயாரிக்கும் தொழிற்சாலை எங்குள்ளது? இந்தியாவில் வேறு எங்கெல்லாம் செயற்கை வைரம் தயாரிக்கப்படுகின்றது?
2. குழந்தையுடன் காட்சியளிக்கும் இந்தத் தம்பதிகளை யாரென்று தெரிகிறதா?
3. கபில்தேவ் இந்திய — இலங்கை அணிகளுக்கிடையே நடைபெற்ற மூன்றாவது டெஸ்டின் போது நிகழ்த்திய சாதனை என்ன?
4. கர்நாடக சங்கீத வித்வான்களை கௌரவித்து 'சங்கீத கலாநிதி' பட்டத்தை சங்கீத வித்வத் சபை ஒவ்வோர் ஆண்டும் வழங்கி வருகிறது. இங்கே பாராட்டைப் பெறும் வித்வான் யார்?
5. மலேசிய இளைஞர் லெட்சுமணன். இவர் உலக சாதனை ஒன்றைச் செய்துள்ளார். என்ன சாதனை சொல்லுங்கள் பார்க்கலாம்?
6. பிரபல நாவலாசிரியை லெட்சுமி ஜனவரி 7 ஆம் தேதி இறந்து போனார். இவருடைய நாவல் ஒன்றுக்கு 1985 ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருது கிடைத்தது! அது என்ன நாவல்?
7. உதவி ஜனாதிபதி வெங்கட்ராமன், சென்னை ஹைகோர்ட் தலைமை நீதிபதி சந்துர்கர் ஆகியோர் மற்ற நீதிபதிகள் புடைசூழ எங்கு செல்கிறார்கள்?



4



6

8. தமிழக முதல்வர் எம். ஜி. ஆருடன் கைகுலுக்குபவர் யார்? இவருக்கு அண்மையில் மதுரை பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது. யார் இவர்?

9. அமெரிக்க நாசாவின் இந்தத் தயாரிப்பை என்னவென்று சொல்ல முடியுமா?

1. தமிழகத்தில் திருச்சியில் செயற்கை முறையில் வைரம் தயாரிக்கப்படுகின்றது. இந்தியாவில் ராஜஸ்தானிலுள்ள ஜெய்ப்பூரிலும், குஜராத்திலுள்ள சூரத்திலும் வைரக்கற்களைத் தயாரிப்பதும், பட்டை தீட்டுவதும் குடிசைத் தொழிலாக நடைபெறுகின்றன.

2. பிரபல டென்னிஸ் வீரர் மெக்கன்ரோவும் நடிகை ததும் ஒநில்லுமும். 'கெவின்' என்று குழந்தைக்குப் பெயர் சூட்டியுள்ளார்கள்.

3. 300 விக்கெட்டுகளை வீழ்த்திய பெருமை கபில்தேவுக்குக் கிடைத்துள்ளது. மொத்தம் இதுவரை 7 பேர் உலகில் 300 விக்கெட்டுகளை டெஸ்ட் ஆட்டத்தில் எடுத்துள்ளனர்.

4. சங்கீத வித்வத் சபையின் அறுபதாவது ஆண்டில் சங்கீத கலாநிதி பட்டத்தைகே.வி.நாராயணசாமி தலைமை நீதிபதி சந்தூர்கரிடமிருந்து பெறுகிறார்.

5. தலை முடியை வைத்து ஒரு பஸ்ஸை இழுத்த பெருமை இவருக்கு உண்டு. பஸ்ஸில் இருபத்து ஐந்து பயணிகளும் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

6. 'ஒரு காவிரியைப் போல!'


7. ஹைகோர்ட்டுக்கு இணைப்பகம் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டுவதற்காகச் செல்கிறார்.

8. டாக்டர் கானு, ஜப்பான் டாக்டர்.

9. இராணுவம் மற்றும் அறிவியல் ஆராய்ச்சிக்கான விண்வெளி நிலைய கற்பனை மாடல் இது.

தொகுப்பு:
தாம்பிரவருணி

8


5


7


9


திருமண வேலைகளுக்குத் தயாராகுங்கள்...

திருமண வீடுகளில் ஒன்று அல்லது இரண்டு பேரே எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்து களைத்துப் போவதைப் பார்க்கிறோம். வரும் உறவினர்களில் சிலருக்கு வேலை செய்ய மனமிருந்தாலும் என்ன உதவி செய்வது என்பது தெரியாது. ஏதோ அந்த வேளைக்குத் தோன்றியதைச் செய்வார்கள். திருமணம் முடிந்த பிறகோ 'என்னைக் கவனிக்கவில்லை, உன்னைக் கவனிக்கவில்லை' என ஏகப்பட்ட குறைகள். 'எனக்கு யார் உதவி செய்கிறார்கள்?' என இவர்களின் புலம்பல்.

இவற்றையெல்லாம் தவிர்த்துக் கச்சிதமாகத் திருமண வேலைகள் முடிய உங்கள் பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமானவுடனேயே முதலில் நீங்கள் செய்ய வேண்டியது ஒரு நாற்பது பக்கம் நோட்டை எடுத்துக் கொள்வதுதான். அதில் திருமணத்திற்கு என்னென்ன வேலைகள், யார் யார் என்னென்ன வேலைகளைச் செய்யப் போகிறார்கள், எப்பொழுது எந்த வேலை நடைபெற வேண்டும் என ஒரு பெரிய 'குடும்பக் கலந்துரையாடலு'க்குப் பிறகு எழுதிக் கொள்ளுங்கள். அந்தந்த வேலைகள் ஆனவுடன் அதையும் குறித்துக் கொண்டே வாருங்கள். ஏனெனில் கல்யாண அவசரத்தில் 'தாலி கட்ட மறந்த கதை' என்பது பழமொழியே அல்லவா?

பொதுவாக எல்லாத் திருமணங்களுக்கும் தேவையான சில அம்சங்கள் —

உங்கள் பட்ஜெட்டுக்குள் அடக்கமாக அதே சமயம் திருமணம் நடத்தச் சௌகரியமான சத்திரத்தைத் தேடிப் பிடியுங்கள். மாப்பிள்ளை வீட்டார் தங்குவதற்கும் குளிப்பதற்கும், உறங்குவதற்கும் வசதிகள் உள்ளனவா? முக்கியமாகப் பாதுகாப்புக்கு உகந்ததா என்று கவனித்துவிட்டு அட்வான்ஸ் கொடுக்க வேண்டும். சில சத்திரங்கள் எல்லா வசதிகளைப் பெற்றிருந்தாலும் கார்களையும் வேன்களையும் வாசலில் நிறுத்தி வைக்க இயலாதவாறு சந்துகளை ஒட்டியிருக்கும். நாம் எவ்வளவு பணத்தைச் செலவழித்துத் திருமணம் செய்தாலும் சத்திரத்தை நல்ல சுற்றுப்புறச் சூழ்நிலையுடனும் வசதிகளுடனும் இருக்குமாறு பார்த்துத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

அடுத்ததாகச் சமையல் மிக நன்றாக அமைந்தால் திருமணம் சோபிக்கும். நல்ல சமையல்காரர்களை ஏற்பாடு செய்து அவர்களிடமே சமையலுக்குத் தேவையான சாமான்களை எந்தக் கடையில் தரமான, நியாயமான விலையில் கிடைக்கும் என்று கேட்டறிந்து கொள்ளலாம். சமையல் செய்து மீதியிருக்கும் சாமான்களை அந்த மளிகைக் கடைக்காரர்களே திருப்பியெடுத்துக் கொள்வார்களா என்று விசாரித்துக் கொள்ள வேண்டும். சமையல் நன்றாக அமைந்தால் மட்டும் போதாது. சமைத்து வைத்த டிபன் சாப்பாடு, காப்பியை நேரம் தவறாமலும் சில சமயம் சேர்ந்தாற்போல் எல்லோரும் வராமல் ஏழெட்டு பேராக வந்தாலும் முகம் சுளிக்காமல் கவனித்துப் பரிமாற வேண்டுமென்று சமையல்காரரிடம் கூற வேண்டும். பரிமாறுபவர்களின் இன்முகமும், பணிவும் கல்யாணங்களில் மிக முக்கியம். அவர் கொடுக்கும் லிஸ்ட்படி மளிகை சாமான்கள் காய்கறிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். வெண்ணெய், தயிருக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். இதையெல்லாம் யார் யார் செய்யப் போகிறார்கள் என்பதையும் குறித்துக் கொள்ளுங்கள்.

பந்தல் அலங்காரம், மின்விளக்குகள், நாதஸ்வரம் (மாப்பிள்ளை அழைப்பு உண்டென்றால்) மாப்பிள்ளை அழைப்புக்கான கார், நாற்காலிகளுக்கும் ஏற்பாடு செய்து அட்வான்ஸ் கொடுத்து விட வேண்டும். மாப்பிள்ளை வீட்டாரும் பெண் வீட்டாரும் போய் வர டாக்ஸி அல்லது வேனுக்கு முன்னதாக அட்வான்ஸ் கொடுத்துவிட வேண்டும். வீடியோ அல்லது காமிராக்காரரைப்



பார்த்து அவர் எப்பொழுது வரவேண்டுமென்றும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

வீட்டிலுள்ள பெரியவர்களையும் சாஸ்திரிகளையும் கேட்டுக் கொண்டு திருமணத்துக்கு முதல் நாளிலிருந்து எந்தெந்த நேரத்தில் எவ்வளவு பந்து பூ வேண்டும், மாலைகள் வேண்டுமென்றும் கேட்டறிந்து ஏற்பாடு செய்ய வேண்டும்.

பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் வேண்டிய நகைகளைச் செய்ய ஆர்டர் கொடுக்க வேண்டுமெனில் கால தாமதமின்றி ஆர்டர் கொடுத்து செய்து வாங்கி ஜாக்கிரதையாக லாக்கரில் கொண்டு போய் வைத்து விடலாம். பெண்ணுக்கு வேண்டியபுடைவைகளை செலக்ட் செய்தவுடன் அதற்கான ப்ளவுஸ் துணிகளையும் உடனே வாங்கித் தைக்கக் கொடுத்துவிட வேண்டும். மெத்தை, தலையணைகள் தைக்க வேண்டுமென்றால் முன்னதாகத் தைக்கலாம்.

எவர்சில்வர் வெள்ளிப் பாத்திரங்கள் (தேவையானால் பித்தளைப் பாத்திரங்கள்) வாங்கி அதில் பெயரை வெட்டி வைத்துக் கொள்ள வேண்டும். பட்டுப்பாய், மணைப் பலகை, பாக்கு வகைகள், வேஷ்டி துண்டுகளையும் வாங்கி எல்லாச் சாமான்களையும் ஒரே இடத்தில் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும்.

திருமணப்பெண் மூக்குக்குத்திக்கொள்ள வேண்டும் என சில மாப்பிள்ளை வீட்டார் கூறியிருப்பார்கள். கல்யாண சமயத்தில் மூக்குக் குத்திக் கொள்ளாமல் கொஞ்சம் முன்னதாகவே பெண்ணுக்கு மூக்குக் குத்தி விடலாம். சீர்வரிசைக்கு வேண்டிய பட்சண வகைகளைச் செய்யவும் அவைகளை எடுத்து வைக்கத் தேவையான பாத்திரங்கள் டின்கள், பிளாஸ்டிக் டப்பாக்களையும் முன்னதாகவே தயார் செய்தோ வாங்கியோ வைக்க வேண்டும். பத்திரிகைகளை பிரிண்ட் செய்யக் கொடுத்துவிட்டு வெளியூரிலுள்ள நண்பர்கள், உறவினர்களின் பெயர்களின் லிஸ்ட் தயாரித்து அதைக் கால தாமதமின்றி அனுப்பி விடவேண்டும். திருமணத்துக்குப் பத்து நாட்கள் முன்பாவது உள்ளூர் நண்பர்கள் உறவினர்களை அழைக்க வேண்டும். **திருமண வேலைகளில் எதையுமே பிறகு அல்லது நாளை செய்து கொள்ளலாமென்று ஒத்தி வைக்கக் கூடாது.**

திருமணம் முடிந்து ஊர் திரும்பப் பெண் வீட்டாருக்கோ மாப்பிள்ளை வீட்டாருக்கோ பஸ் அல்லது ரயிலில் ரிசர்வேஷன் செய்ய வேண்டுமென்றால் முன்னதாகச் செய்து வைத்துக் கொள்ளலாம். திருமணத்துக்கென்று வெளியூரிலிருந்து ஏதாவது வாங்க வேண்டுமென்றால் முன்னதாக மறக்காமல் வாங்கி வைத்துவிட வேண்டும். தாம்பூலப் பைகள், பட்சணங்களைப் போட்டுக் கொடுக்கத் தேவையான பாலிதீன் கவர்களையும் வாங்கி வைக்க வேண்டும். மணப்பெண்ணுக்குத் தேவையான மாற்றுப் புடைவைகள், துணிமணிகள், கர்சீப், நாப்கின்ஸ், துண்டுகளைத் தனியாக ஒரு பெட்டியில்

எடுத்து வைக்க வேண்டும். ப்யூட்டி பார்லருக்கும் முன்னதாக தேதி, நேரம் சொல்லி விடலாம்.

வீட்டிலுள்ள வெள்ளி, பித்தளைப் பாத்திரங்கள், நகைகளை மணப்பெண்ணுக்குக் கொடுப்பதாயிருந்தால் அவைகளுக்கு ஒரு மாதம் முன்பே பாலிஷ் கொடுத்து வைக்கலாம்.

கோல மாவு சிவப்புக் காவியை வாங்குவதுடன் இழைகோலம் போட அரிசியை ஊற வைத்து அரைத்து வில்லையாக வெயிலில் காய வைக்கலாம்.

பட்சண வகைகள், தயாரானவுடன் அவைகளுக்கு எறும்பு வராமல் எறும்புப் பவுடரை டின்களைச் சுற்றித் தூவ வேண்டும். திருமணத்துக்கு நாலைந்து நாள் முன் உறவினர்கள், பக்கத்திலுள்ள நண்பர்களுக்குத் திருமண நகைகள் ஜவுளிகளை ஒரே நாளில் காட்டிவிடலாம். திருமணத்துக்கு ஒரு வாரம் அல்லது நான்கு நாட்களுக்கு முன்பு லாக்கரிலிருந்து திருமணப் பெண்ணுக்குச் செய்து வைத்த நகைகளையும் வீட்டிலுள்ளவர்களுக்குத் தேவையான நகைகள், வெள்ளிப் பாத்திரங்களையும் எடுத்து வர வேண்டும். ஒரு பீரோவில் திருமண நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், துணிமணிகள் போன்றவற்றை வைத்துப் பூட்டி ஒருவரே அதன் சாவியை ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ள வேண்டும். சத்திரத்தில் விலை மதிப்புள்ள சாமான்கள், பெட்டிகளை வைக்கப் போகும் அறைகளைப் பூட்டுவதற்காகச் சில பூட்டுச் சாவிகளை வாங்க வேண்டும்.

திருமணத்துக்கு வருபவர்களை வரவேற்க வாசலில் ஒரு பொறுப்பான ஆணையும் பெண்ணையும் நிறுத்தி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். திருமணம் முடிந்து வீடு செல்பவர்களுக்குத் தாம்பூலப் பைகளை வழங்கும் பொறுப்பையும் அவர்களிடமே ஒப்படைக்கலாம். டிபன், சாப்பாடு, நடக்குமிடங்களில் வருபவர்களை கவனிக்கப் பொறுப்பான சில ஆண், பெண் உறவினர்களையோ நண்பர்களையோ ஏற்பாடு செய்ய வேண்டும். அதேபோலத் திருமணம் முடிந்து ஊருக்குச் செல்லும் முக்கியமான உறவினர்கள் நண்பர்களை வழியனுப்பச் சிலரை ஸ்டேஷன் வரை கொண்டு விடும்படியிருக்கும். அதற்கான நபர்களையும் ஏற்பாடு செய்து விட வேண்டும்.

மாப்பிள்ளை வீட்டாரது சாமான்களை ஜாக்கிரதையாக அனுப்பவும், சீர்வரிசை, கல்யாண பட்சணங்கள், பெட்டிகளை 'பாக்' செய்து அனுப்பவும் சிலரை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். சத்திரத்தைக் காலி செய்யும் போது சத்திரத்துக்குரிய சாமான்களை ஒப்படைத்துவிட்டு நமது சாமான்களை ஜாக்கிரதையாக எடுத்து வரவேண்டும்.

இவை எல்லாவற்றையும் குறித்துக் கொண்டு, செய்யப் போகும் நபரின் வேலையையும் குறித்துக் கொண்டு, அவ்வப்போது 'செக்' செய்தால் போதும். திருமணம் அதிகக் குறைகள் இல்லாமல் முடிந்துவிடும்.

— **விசாலாட்சி**



பாஞ்சாலி... பாஞ்சாலி!

தெலுங்கு 'ஸ்வாதி முத்யம்' தமிழில் சிப்பிக்குள் முத்தான போது ராதிகாவின் நடிப்பைப் பலர் பாராட்டி இருக்கிறார்கள்!. 'கிழக்கே போகும் ரயில்' பாஞ்சாலியாக தோன்றியதிலிருந்து இன்று வரையிலான அவருடைய வளர்ச்சி பாராட்டப்பட வேண்டியது. இந்த குணச்சித்திர நடிகைக்குள் இருக்கும் இன்னொரு ராதிகா —

கே: பணத்தை அள்ளிக் கொடுக்கிறது என்பதைத் தவிர இந்த சினிமா வாழ்வில் அப்படியென்ன சுவாரசியம் ராதிகா?

ப: அப்படிச் சொல்லாதீங்க. இது ஒரு நல்ல துறை. நிறைய திறமைகளைக் காண்பித்து நல்லா பிரகாசிக்க முடியும். இரண்டு வருஷங்களுக்கு மேல் நல்ல புகழுடன் இங்கு நிலைத்திருப்பதே ஒரு சாதனைதான். கமல ஹாசனெல்லாம் பாருங்க, படத்துக்குப் படம் எத்தனை வளர்ச்சி! பணம் மட்டுமில்ல, இங்க கிடைக்கிற புகழ் வேறே எங்கேயும் கிடைக்காது! ஆனால் அதுக்கு நாங்க கொடுக்கிற விலையும் ஜாஸ்தி. நேரத்துக்கு சாப்பாடு கிடையாது. தூக்கம் கிடையாது. படப்பிடிப்பு நடக்கிற வரைக்கும் நடிச்சுக்கிட்டுத்தான் இருக்கணும். (அவர் இதைச் சொல்லும் போது இரவு மணி எட்டு.)

கே: ஒரு நடிகையா ஆகிவிட்டதைப் பற்றி என்ன நினைக்கிறீங்க?

ப: முதல்ல அப்படி நடிகைன்னு கூப்பிடறதே எனக்குப் பிடிக்கறது இல்லை. ஒரு பொண்ணு பாங்குல காஷியரா இருந்தாலோ, ஹோட்டல்ல ரிசப்ஷனிஸ்டா இருந்தாலோ அவருடைய போஸ்ட்டைச் சொல்லியாக் கூப்பிடறீங்க? எல்லா வேலையையும் போலத் தான் இதுவும் ஒண்ணு. என்னை ஒரு வேலைக்குப் போகிற பெண்ணாப் பாருங்க. என் சம்பளத்துக்கு நான் அதிகம் வேலை செய்ய வேண்டும். அதனால் விதிக்கப்பட்ட நேரம் இல்லாம நடிக்கறேன்.

கே: படிக்கும்போது உங்கள் ஆசை என்ன? எந்தத் துறையில் முன்னேறணும்னு நினைச்சீங்க?

ப: பெரிய குறிக்கோள் அப்படின்னெல்லாம் ஒண்ணும் கிடையாது. ஒரு நாள் ஒரு டாக்டரைப் பார்த்தா, நாளெல்லாம், "அம்மா நான் டாக்டராகணும்" அப்படின்னு சொல்லிக்கிட்டிருப்பேன். பிளேன்ல போனால் நான் ஒரு ஏர் ஹோஸ்டஸ் ஆகக் கூடாதுன்னு தோணும். மன் ஏஜ் ஆசைகள். கனவுகள் இந்த மாதிரி என்னென்னவோ இருக்கும். அப்புறம் வாழ்க்கையில நிஜமா நடக்கிறது வேறையா இருக்கும். வர்றதை ஏத்துக்க வேண்டியதுதான்.

கே: உங்க தைரியத்திற்கும் திறமைக்கும் நீங்கள் நிர்வாகத் துறையில் பிரகாசித்திருப்பீர்களோ என்னவோ!

ப: அப்படியென்றால் நடிகையாக நான் நன்றாகச் செய்யவில்லை என்று சொல்கிறீர்கள்? இதிலும் நல்ல பெயருடன்தான் இருக்கிறேன். எந்த வேலையில் இருந்திருந்தாலும் இப்படித்தான் பிரகாசித்திருப்பேன். ஆனா இன்னிக்கு இந்தத் துறையில இருக்கிறதாலே தானே நீங்க வந்து பேட்டி கேக்கறீங்க? (சிரிக்கிறார்.)

கே: சுவாதி முத்யம் (தெலுங்கு சிப்பிக்குள் முத்து) படத்தில் நடித்த அனுபவம் பற்றிச் சொல்லுங்கள்.

ப: கே. விஸ்வநாத் ஒரு அற்புதமான


டைரக்டர். அந்தப் படம் ஒரு நல்ல சப்ஜெக்ட். நான் மனம் ஒன்றி நடித்த படம் அது. கமலஹாசனுடன் நடித்தது ஒரு பெரிய அனுபவம். தெலுங்கில் பிரமாதமாக இருந்தது. டப்பிங் சரியாக இல்லாததாலோ என்னவோ இங்கு அவ்வளவு நன்ருக வரவில்லை.

கே: இந்தப் படத்திற்காக அவார்டு எதிர் பார்க்கிறீர்களா?

ப: அவார்டெல்லாம் சாதாரண விஷயமில்லை. ஒரே பாலிடிக்ஸ். படம் ஓஹோ வென்று ஓடுவதும் பாராட்டிய விமர்சனங்களுமே என் நடிப்புக்குக் கிடைத்த அவார்டுதான்.

கே: டிரெஸ்ஸில் நீங்கள் மாடர்ஞக இருப்பது போலவே வாழ்க்கையிலும் ரொம்ப மாடர்னு?

ப: (வருத்தத்துடன்) நிறைய பேர் என்னைப் பற்றி அப்படித்தான் நினைக்கிருர்கள். நான் வெளிநாட்டில் நிறைய இருந்தாலும் அங்கேயே படித்ததாலும் அந்தப் பழக்கவழக்கங்கள்தான் எனக்கு இருக்கும் என்று எல்லோரும் நினைக்கிருர்கள். எனக்கு இந்திய மண், இந்திய கலாசாரம் இவற்றில் நிறைய நம்பிக்கை உண்டு. இந்தத் தமிழ் நாட்டுப் பெண்ணுகைவாழ்வதில்தான் எனக்கு



விருப்பமும்கூட. எனக்கு நிறைய சென்டிமெண்ட்ஸ் உண்டு. எமோஷனலா ஒரு குடும்பப் பெண்ணுக கல்யாணம் செய்துக்கிட்டு வாழ்க்கை நடத்தறதுதான் எனக்கு ரொம்பப் பிடிக்கும்.

கே: தவருக நினைக்கவில்லை என்ருல் ஒரு கேள்வி....!

ப: சொல்லுங்க!

கே: குடும்ப வாழ்க்கையில இவ்வளவு ஆர்வமிருக்கிற நீங்க கிடைச்ச வாழ்க்கையை ஏன் தவறவிட்டீங்க!

ப: சில காரணங்களால நாங்க பிரிஞ்சாலும், பிரதாப் ஒரு நல்ல நண்பர். எனக்கு நிறைய விஷயங்களைச் சொல்லிக் கொடுத்தவர். நல்ல பல புத்தகங்களை எனக்கு அறிமுகப்படுத்தியவர். படிக்கும் என் பழக்கத்தை வளர்த்தவர். நாங்கள் நல்ல நண்பர்களாய் இருந்து புரிந்து கொண்டுதான் திருமணம் செய்து கொண்டோம். விட்டுக் கொடுத்தும் சீராகாத அளவு மன வேற்றுமைகள் முற்றிய பிறகு பிரிந்துவிட்டோம். ஒரு கட்டத்தில் பிரிந்த பின்பும் இன்னும் நல்ல நண்பர்களாய்த்தான் இருக்கிரும். போனில்கூட அடிக்கடி பேசிக் கொள்கிரும்.

கே: குடும்ப வாழ்க்கையைப் பற்றிய உங்கள் எதிர்காலக் கண்ணேட்டம் என்ன?

ப: இந்த சினிமா நிரந்தரம் அல்ல என்பதை நான் நன்ருகத் தெரிந்து வைத்திருக்கிறேன். இந்தப் பகட்டும் பளபளப்பும் எத்தனை நாளைக்கு! குடும்ப வாழ்க்கையின் மீது எனக்கு நிரம்பப் பற்றுதல் உண்டு. குடும்பமா, சினிமாவா இரண்டில் ஒன்று என்ற கட்டம் வரும்போது கண்டிப்பாகக் குடும்பத்தைத்தான் நான் தேர்ந்தெடுப்பேன்.

மறுபடியும் வாழ்க்கையில ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தா சினிமாவை உதறி விடுவேன். முந்தைய அனுபவத்தில் நான் செய்த




Bournvita
நல்ல வளர்ச்சி
போர்ன்விடா பயிற்சி!
அன்னையர், அறிவர்: கேட்பரிஸ் போர்ன்விடா கோகோ, மால்ட், பால் மற்றும் அசல் சீனியின் ஊட்ட நலன்களைக் கொண்டது. போர்ன்விடா குழந்தைகள் மிக விரும்பும் அத் தனிச் சுவையை பாலின் குணத்துடன் அளிக்கிறது.
தினமும் போர்ன்விடா அளிக்கப்படும் குழந்தைகள் வேலையிலும் விளையாட்டிலும் கூர்மையோடிருக்கிறார்கள். அது, அவர்களுக்கு ஆரோக்கியத்தையும் சுறுசுறுப்பையும் அளிக்கிறது. அவர்களுடைய வளர்ச்சிக்கு எல்லா வகையிலும் நலன் அளிக்கிறது.
அதன் தனிச் சுவையுடன் இணைந்திட்ட இன்றைய வளர்ச்சி.
கேட்பரிஸ்
போர்ன்விடா
Cadbury's
Bournvita
MILK
Cadbury's
Bournvita
Rs. 2/-
LESS
MILK
Bournvita
The Tastier Food Drink





சில தவறுகளால் கற்றுக் கொண்ட பாடம். இனிமேல் எச்சரிக்கையாக இருக்க உதவலாம்.

கே: வெளிநாட்டுக்கெல்லாம் போயிட்டு வந்திருக்கீங்க! இந்தப் பெண் விடுதலையைப் பற்றி உங்க அபிப்ராயம் என்ன?

ப: உண்மையில் பெண் விடுதலை, பெண்ணுரிமை அப்படிங்கறதுலயே எனக்கு நம்பிக்கை இல்லை. எக்கச்சக்கமா வரதட்சணை வாங்கறது, அதனால கொலை பண்றது இதெல்லாம் தப்புத்தான். மத்தபடி நம்ப பண்பாட்டுப்படி ஒரு பெண் கணவனோட வாழ்ந்து அவனால கௌரவிக்கப்படறதுதான் அவளுக்குப் பெருமை. அந்த வாழ்க்கையில கிடைக்கிற சந்தோஷமே தனிதான்.

கே: உங்க குடும்பத்தைப் பத்திச் சொல்லுங்களேன்....

ப: ஓ! என்னுடைய குடும்பம் ரொம்ப ஆனந்தமான குடும்பம். நாங்க ரெண்டு பிரதர்ஸும் ஒரு சிஸ்டரும் சேர்ந்தோமனா டைனிங் டேபிள்ல அடிக்கற லூட்டி தாங்காது. அவங்க எல்லாரும் என்மேல வச்சிருக்கிற அன்பைப் பத்திச் சொல்ல




வார்த்தைகளே போதாது. எங்கம்மா... ஓ அவங்க, ஒரு தெய்வம். இவ்வளவு அன்பான குடும்பத்தைக் கொடுத்த கடவுளுக்கு நான் ரொம்பக் கடமைப் பட்டிருக்கேன்.

டைட் ஜீன்ஸும், லூசான டாப்ஸிலும் குட்டைத் தலைமயிரைப் பின்னுக்குத் தள்ளியபடி பேசிக்கொண்டிருக்கும் ராதிகா— பத்தடி தூரத்திலிருந்து பார்த்தால் ரொம்ப மாடர்ன். மகா கர்வி, அலட்சியமானவள் என்றுதான் தோன்றும்.

பக்கத்தில் உட்கார்ந்து பேச ஆரம்பித்தால் நடிகை என்ற அவரது முகத் திரையைத் தாண்டிப் போனால் இன்னொரு ராதிகாவைப் பார்க்கலாம். ஒரு சாதாரண குடும்பம், பக்தி, பாசம் என்கிற ஆசைகள் நிரம்பிய பெண் தான் அந்த ராதிகா.

பேட்டி: கிரிஜா ராகவன்



நமக்கு உகந்த

இன்று மருந்து, மருத்துவர் என்றாலே ஆங்கில வைத்தியம் எனப்படும் 'அலோபதி' தான் அர்த்தம். ஆனால் தன்வந்த்ரியாலும், கஸிருத்தர் முனிவர்யோகிகளால்போற்றிவளர்க்கப்பட்டது நமது இந்திய மருத்துவத் துறை. அதன் சிறப்புக்களை மேலை நாடுகள் உணர ஆரம்பித்துவிட்டன. இன்று தமிழ்நாட்டில் இது ஒரு தனித் துறையாக இயங்குகிறது. அதன் இயக்குநர் ஒரு பெண். திருமதி குத்ஜித் காந்தி, ஐ. ஏ. எஸ்., அவரிடம் இந்திய மருத்துவத்தைப் பற்றிக் கேட்ட போது...



கே: தமிழ்நாட்டு இந்திய மருத்துவத் துறையில் சிறப்பு அம்சம் என்ன?

ப: இந்திய மருத்துவத்துறையில் சித்தா, யுனானி, ஆயுர்வேதம் ஆகிய மூன்றும் அடங்குகிறது. மற்ற மாகாணங்களில் சித்தா, யுனானி, ஆயுர்வேதம் மூன்றில் ஏதாவது ஒன்று அல்லது இரண்டு மட்டும்தான் செயல்படுகின்றன. தமிழ்நாட்டில் மட்டும்தான் இந்த மூன்று துறைகளும் இணைந்து இந்திய மருத்துவத் துறையின் கீழ் செயல்படுகிறது. இன்னும் சொல்லப் போனால், உலகிலேயே இந்தச் சென்னை அண்ணா மருத்துவமனை ஒன்றில் தான் ஒரே கூரையின் கீழ் மூன்று மருத்துவத் துறைகளும் செயல்படுவதை நீங்களே காணலாம்.

கே: ஆங்கில மருத்துவத் துறை (அலோபதி) பற்றி உங்கள் கருத்தைக் கூற முடியுமா?

ப: தயவு செய்து என்னை ஆங்கில மருத்துவர்கள் மன்னிப்பார்களாக. தலைவலிக்கு மாத்திரை சாப்பிட்டால் உடனே நிவாரணம் கிடைத்துவிடுகிறது. என்கிறார்கள். ஆனால் பின்விளைவுகளையும், பக்க விளைவுகளையும் யார் பார்க்கிறார்கள்? ஒரு வியாதி குணமாக மருந்து கொடுத்தால் அதன் பின் விளைவாக வேறொரு வியாதி என்று அது தொடர்கதையாகப் போய்க் கொண்டே இருக்கிறது. மேலைநாடுகளில் ஆன்டிபயாடிக் மாத்திரைகள் கொடுப்பதனால் கூட மருத்துவர்கள் பலர் கூடி நோயாளியையும் கலந்து பேசிய பிறகே கொடுக்கிறார்கள். நம் நாட்டில் அந்த அளவுக்கு முன்னேறவில்லை.

ஒவ்வொரு பெரிய மருத்துவமனையிலும்

கூட்டம் கூட்டமாக வரும் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களின் நிலையை நான் கூற வேண்டியதில்லை. மருத்துவ ரீதியாகவும் சரி, பொருளாதார ரீதியாகவும் சரி, ஆங்கில மருத்துவம் சரியில்லைதான்.

நான் ஒருமுறை அலுவலக வேலையாக விருதுநகர் சென்றிருந்தேன். அப்பொழுது ஓர் எட்டு வயதுச் சிறுவன் என் அருகில் வந்தான். அவன் பல்லைப் பார்த்தால் பல முழுவதும் கறுப்பும், மஞ்சளுமாக ஒரு நிறம். நான் என்னவென்று அவன் தாயிடம் கேட்ட பொழுது, அவனுக்கு உடல் நிலை சரியில்லாத போது டாக்டர்கள் கொடுத்த மருந்தைக்

மருத்துவம்

கொடுத்ததன் விளைவு என்று சொன்னார்கள். ஆனால், இந்திய மருத்துவத்தில் உணவுதான் மருந்து, மருந்துதான் உணவு என்பதுதான் அடிப்படையே. இது பக்க விளைவுகளையோ, பின் விளைவுகளையோ ஏற்படுத்துவதில்லை. விலையுயர்ந்த மருந்துகளும் இங்கு கிடையாது. ஆனால் இதன் பெருமையை மக்கள் உணருவதில்லை.

கே: இந்திய மருந்துகளின் சிறப்பு இத்தனை இருந்தாலும் உங்களுடைய மருந்துகள் ஸாரிடான், ஆஸ்ப்ரோ, கோல்டாரின் போன்றுபிரபலமாகாததன் காரணம்என்ன?

ப: இந்திய மருத்துவத்துறை முனிவர்களாலும், யோகிகளாலும் பின்பற்றப்பட்டு பரம்பரை பரம்பரையாக வந்த தொழில் துறை. அதை தெய்வீகமானதாகக் கருதி மூலிகைகளால் மருந்து தயாரிக்கும் முறையை இரகசியமாகவே வைத்து விட்டார்கள். தவிரவும் மக்களுக்கு மருந்துகளைச் சரியாக உபயோகிக்கத் தெரிய வேண்டும் என்ற எண்ணம் கருதியும், அவர்கள் சொல்லாமல் இருந்திருக்கலாம். மருந்துகளில் அதிக பரிச்சயம் இல்லாதவர் ஒருவர் ஒன்றுக்கு ஒன்று மூலிகையைக் கலக்கப் போய் அதனால் ஆபத்தும் ஏற்படலாமல்லவா? இப்போது இது ஓர் அரசுத்துறையாகி விட்டது. மக்களுக்காக இலவசமாகவும் செயல்படுகிறது. எனவே மக்கள்தான் இதன் அருமையை உணர வேண்டும்.

கே: இங்குள்ள சிகிச்சை முறை பற்றிக் கூற முடியுமா?

ப:மிகவிரைவில்குணமாகக்கூடியமருந்துகளை நான்கு நாட்களுக்கு அல்லது ஒரு வாரத்திற்கு என்று மருத்துவர்கள் கொடுத்துவிடுகிறார்கள். பராலிஸிஸ், வாத நோய்களுக்கு 'பஞ்ச கர்மா' என்று ஆயுர்வேத மஸாஜ் அளிக்கப்படுகிறது. இது அங்கு மருத்துவ மனையிலேயே தங்கி 14 — 15 நாளைக்குப் பெற வேண்டும். சிகிச்சை இலவசமாக அளிக்கப்படுகிறது. நவரஸப் பாயஸம் போன்ற ஆயுர்வேத முறைகள் பின்பற்றப் படுகின்றன. மக்களின் நலமே இந்தத் துறையின் குறிக்கோள்.

இந்திய மருத்துவம் பற்றி ஆங்கில மருத்துவத்தைச் சேர்ந்தவர்கள் என்ன நினைக்கிறார்கள்?

டாக்டர் பவானி மூர்த்தியைக் கேட்ட போது...



"நான் ஆங்கில மருத்துவத்தில் சிறப்புப் பயிற்சி பெற்றிருக்கலாம். ஆனாலும் இந்திய மருந்துகளை, மருத்துவ முறைகளை நான் மிக உயர்வாக மதிக்கிறேன்.

குறிப்பாக சொல்லப் போனால் (விட்டிலிகோ) என்று சொல்லப்படும் தழும்பு நோய் என் தாயின் முழங்கையில் ஆரம்பித்து உடல் முழுவதும் பரவியது. தோல் சிகிச்சை நிபுணர்கள் சுமார் 20 பேருக்கு மேல் காட்டினோம். பணம்தான் தண்ணீராய்ச் செலவழிந்தது. பின் ஒரு நாட்டு மருத்துவரிடம் காட்டிய போது அத்தி இலை, அருகம்புல், துளசி, வில்வ இலை, மா இலை, வேப்ப இலை, தும்பை இலை இவைகளைச் சரிசமமாக எடுத்துச் சோறு வடித்த கஞ்சியில் அரைத்து சிறிய உருண்டைகளாக்கி வெயிலில் வைத்து உலர்ந்த பின் தினமும் சாப்பிடச் சொன்னார். இது கண்கூடான நிகழ்ச்சி. என் அம்மாவை வந்து இப்போது பாருங்கள். பழைய நிலைக்கு மாறி விட்டார்கள்.

எனதுதந்தைஓர் இரத்த அழுத்தநோயாளி. அதே மருத்துவர் என் தந்தையை தினம் ஒரு செம்பரத்தைப் பூ சாப்பிட்டு வரச் சொன்னார். தந்தையின் இரத்த அழுத்தம் இப்போது நார்மல். எனது அண்ணா (அக்யூட் ஆஸ்த்மா) வியாதியால் அவஸ்தைப்பட்டார். தூதுவளை இலையைநெய்யில்வறுத்துச்சாப்பிடச்சொன்னார். ஆடுதொடா இலை கஷாயமும் கொடுத்தார். இப்போது அவர் பூரண குணமாகி விட்டார்.

மஞ்சள் காமாலைக்குக் கீழா நெல்லியை விட மாற்று ஏது? ஆன்டிபயாடிக்ஸ் கொடுத்தால் இரத்தத்தின் எதிர்ப்பு சக்தி குறைகிறது. பல ஆங்கில மருந்துகளின் பின்

விளைவுகள் பயங்கரமானவை. சிலருக்குச் சில மருந்துகள் அலர்ஜியாக இருக்கின்றன.

இந்திய மருந்துகள் மாத்திரைகள் வந்து விட்டால்மிகஎளிதாகஇருக்கும். ஆண்களின் விந்துவில் ஜீவ அணுக்கள் குறைந்திருந்தால் அவை அதிகரிப்பதற்கு (ரோர்டேஜ் அடிஜோயா) என்ற ஆயுர்வேத மருந்தைத் தான் பயன்படுத்துகிறோம். இந்திய மருந்து களுக்கு விளம்பரம் சரியாகத் தரப்படுவ தில்லை. இரண்டாவதாக எம். பி. பி. எஸ்., படிக்கும் போது முதலாண்டில் கெமிஸ்ட்ரி, பிஸிக்ஸ், பயாலஜி என்று பிளஸ் 2 வில் படித்ததையே படிப்பதற்குப் பதிலாக மூலி கைகள், அதன் பயன்கள் பற்றிச் சிறிது அடிப்படை அறிவைக் கொடுத்தால் கூட இது நலமாக இருக்கும்.

பேராசிரியர் எல். டி. சுப்ரமணியம் அறுவை சிகிச்சை நிபுணர்:



ஆரம்ப காலத்தில் சுஸ்ருதரால் ஆரம்பிக் கப்பட்டதுதான் இந்த அறுவை சிகிச்சை முறை. இன்று மிக மிக முன்னேறி விட்டது. இன்று கத்தியும், தையலும் இல்லாமல் லேஸர் ஆயுதங்கள் கொண்டே தழும்பு இல் லாமல் அறுவை சிகிச்சை நடக்கிறது. இதயத் துக்கு ஒருவர், வயிற்றிற்கு ஒருவர், கண் ணுக்கு ஒருவர் என்று ஒவ்வொரு உறுப்பிற் கும் தனித்தனியாக அறுவை சிகிச்சை நிபு ணர்கள் வந்துவிட்டார்கள். இந்திய மருத் துவத்தால் இங்கு பயனேதும் இல்லை. ஆனால் இதயக் கோளாறுகள், மூட்டு வாதம், வாயு, ஜீரண சக்தி நோய்கள், ஆஸ்த்மா, காமாலை, மூல நோய் காய்ச்சல் இவற்றிற்கு இந்திய மருந்தை விடச் சிறந்த மருந்து எதுவும் இல்லை. அதனால் வியாதி வராமல் காப்பது இந்திய மருந்தாகும்.

திருமதி இராதாமணி (குடும்பத்தலைவி)



டாக்டரிடம் போய் எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் காத்திருக்கும் நாம் சிறிய எளிய வீட்டு மருந்துகளைச் செய்து சாப் பிடத் தயங்குகிறோம். என் மாமியார் இருந்த வரை எந்த ஒரு வியாதி வந்தாலும் சுக்கும், மிளகும், இஞ்சியும், பச்சிலையும் கஷாயமும் தான். எந்தத் தொல்லையும் இருந்ததில்லை. இன்று எந்த டாக்டரிடம் போனாலும், டாக்டர் ஃபீஸ், மருந்து பில், என்று வரு மானத்தில் ஒரு பகுதியை ஒதுக்க வேண்டி யுள்ளது. அதோடு விடுகிறார்களா? தும்மி விட்டாலே உடனே ப்ளட் டெஸ்ட், யூரின் டெஸ்ட், எக்ஸ்ரே என்று பணத்திற்கு நல்ல செலவு வைத்து விடுவார்கள்.

இன்று உள்ள டாக்டர்களுக்கெல்லாம் நோயாளிகள் ஒரு பரிசோதனைப் பொருளாகத்தான் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் நம்மிடமுள்ள தவறுதான். சில எளிய மருத்துவ முறைகளையும், வழிகளையும், நம் முன்னோரிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளத் தவறியதன் காரணம். இன்றைய இளம் தலைமுறையினருக்காவது அடிப்படை அறிவு வீட்டு மருத்துவம், சில பச்சிலைகள் பற்றி சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். பிள்ளையாருக்கு இரண்டு அருகம்புல் பறித்து வைக்க வேண்டுமென்றால் இன்னும் கூட நமக்கு அருகம்புல்லுக்கும் சாதாரணப் புல்லுக்கும் வேறுபாடு தெரிவதில்லை. இந்த நிலை மாற வேண்டும்.

வெளிநாட்டினர் கூட இன்று ஹெர்பல் மருந்துகள், ஹெர்பல் காஸ்மெடிக்ஸ் என்று விரும்பி வாங்கும் போது நாம் நம் நாட்டு மூலிகைகள் மருத்துவம் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டாமா?

பேட்டி: பானுமதி நாராயண்

பசும் பாலைக் காய்ச்சி ஒரு கரண்டித் தேன் விட்டுக் கலக்கி தினசரி காலையிலும் இரவிலும் ஒரு டம்ளர் குடித்து வந்தால் சோகை நோய் குணமாகும்.

— எஸ். விஜயா சீனிவாசன்.



மாற்றுதான் என்ன?

பெற்றோரே,

தற்காலத்தில் காலை நேரத்து அவசரம் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். குழந்தைகளைப் பொறுத்தவரை 'காலை நேரம்' ஒரு தலைவலிதான். ஏன் என்றால் படுக்கையை விட்டு எழுந்திருப்பதிலிருந்து இரவு படுக்கும் வரை சந்திப்பது கட்டளைகள், உத்தரவுகள்தானே. பல்துலக்கு, குளி, காலைக் கடன் கழி, இப்படிப் பல.

இதெல்லாம் முடிந்து 'மணியைப் பார்த்தால் நேரம் ஓடியே இருக்கும். பின்னர் கடைசி கட்டம் சாப்பாடு. 'சீக்கிரம் சாப்பிடு' என அவசரப்படுத்துவார்கள். அல்லது பெற்றோரே பலவந்தமாக ஊட்டி விடுவார்கள். அப்படிச் சாப்பிடப் பிடிக்காத நாளில் அவை ஒன்று சேர்ந்து வாந்தி எடுக்கும்.

பல மாதிரியான பள்ளிகளின் நேரம் அவை அழைத்துச் செல்லும் பஸ்களின் நேரம் இப்படிப் பல சூழ்நிலையில் இந்த அவதி. பள்ளிகள் காலை பத்து மணி முதல் நாலு மணி வரை என வைத்தால் குடியா முழுகிவிடும்?

"சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்'' என்பது நமக்குத் தெரியாதது அல்ல. குழந்தைகளின் ஆரோக்கியம் அத்தியாவசியமன்றோ? பலபள்ளிகளில்பெற்றோர்களின் சங்கம் இருக்கிறது. இதை ஆசிரியர்களுக்கு இவர்கள் எடுத்துச் சொல்லலாமே? இந்த ஒன்பது மணி அவசரத்தால் குழந்தைகள் எத்தனை விஷயங்களை 'மிஸ்' பண்ண வேண்டியது இருக்கிறது தெரியுமா?

குழந்தைகளின் ஆரோக்கியத்துக்கு அவசியம் பால். எல்லாவித சத்தும் மிகுந்தது. ஆனால், அதை எங்கு தர முடிகிறது? பலருக்கு வசதி குறைவு காரணமாகக் கொடுக்க முடிவதில்லை. ஆனால் வசதி படைத்தோர் மட்டும் என்ன கொடுத்துக் கிழித்தோம்? பால் சாப்பிட்டால் சாப்பாடு சாப்பிடாது என்ற நிலையில் பால் நிறுத்தப்பட்டு விடுகிறது. சாப்பிடும் அந்த உணவையாவது மென்று தின்ன நேரம் உண்டா? கிடையாது. மிக வற்புறுத்தினாலோ 'போதும்' வயிற்றை வலிக்கிறது என்பது குழந்தைகளின் பதில்.

கீரைகள், பச்சைக் காய்கறிகள், இவைகளின் மகத்துவத்தை டாக்டர்களும் பத்திரிகைகளும்புகழ்பாடுவதென்னவோ உண்மை. ஆனால் நம் அன்றாட உணவில் அவைகளுக்கு இடம் இல்லை. விலை மலிவு, சத்து மிகுந்தது, என்பதெல்லாம் உண்மைதான். ஆனால் கீரையை ஆய்ந்து செய்வதற்கு நேரமில்லை என்பதுதான் உண்மை. சீக்கிரத்தில் அரிந்து விடலாம் என்ற வகையில் சமையற்கட்டில் முதல் இடத்தைப் பிடிப்பவை கத்தரிக்காய், உருளைக்கிழங்கு, வாழைக்காய் இவைதான்.

இன்னும் சொல்லப் போனால், நேரத்தை மிச்சப்படுத்த வற்றல், அப்பளம், ஜாம், போன்றவற்றைஅதிகம்பயன்படுத்துகிறோம். இதனால் சாப்பாட்டின் தரமும் குறைவதைப் பார்க்கலாம்.

நாம் பல அல்லல்பட்டு சம்பாதிப்பதன் நோக்கம் என்ன? நம் குழந்தைகளின் நல்ல வளர்ச்சிக்காகத்தானே தவிர வேறு எதற்கு? ஆனால் அன்றாட வாழ்க்கையில் நடப்பதென்னவோ தலைகீழாகத்தான்.

குழந்தைகளுக்காகத்தான் பள்ளிகளே தவிர பள்ளிகளுக்காகக் குழந்தைகள் அல்ல. வீட்டிலும், பள்ளியிலும், ஆட்டுவிக்கப் பட்ட குழந்தைகள் வீடு வந்து சேரும் போது அசதி, எரிச்சல் இவைதான் மிஞ்சுகிறது. விளையாடும் ஈடுபாட்டின் காரணமாக ஏதோ பேருக்குக் கொறித்து விட்டுப் போய் விடுகிறது. பள்ளிப் பாடம்., ஹோம் ஒர்க் இப்படிப் பலவற்றைச் செய்து முடித்துத் தூக்கம் கண்களைச் சுழற்றச் சாப்பிடக்கூடத் தோன்றாமல் தூங்கிவிடுகிறது. தாய்க்கோ நாள் முழுவதும் அலைவரின் அவசரத்திற்கும் அரக்கப்பரக்க வேலை செய்த களைப்பு, ஒரு பக்கம். குழந்தை சாப்பிட வில்லையே என்ற கஷ்டம், இதர பிரச்னைகள் எல்லாம் சேர்ந்து 'டென்ஷன்' இதனால் அவளுக்குப் பலவித கோளாறுகள். இப்படித்தான் பெரும்பாலான வீடுகள் காலை முதல் இரவு வரை நடக்கிறது. இதற்கெல்லாம் மாற்றுதான் என்ன?

— என். புனிதவதி

தைப் பூசத் திரு நாளிலே...

கதை: சுபயோகம் 'விவேகா'
சித்திரங்கள்: கணேசன்

விண்ணுலகிலும் போராட்டங்கள் உண்டு. பொறாமை, அகம்பாவம் போன்றவற்றிற்குத் தேவர்களும் விதி விலக்கல்ல. சண்டை ஆரம்பிக்கும். முடிவில் சத்தியமே வெல்லும். அதனால் உலகுக்குப் படிப்பினையாக ஒரு தத்துவம் பிறக்கும். அவ்வாறே தேவருலகத்தில் ஒருநாள்—




ஒரு நொடி! உலுக்கியது ஓர் இடி! அனைத்தும் சட்டென்று ஸ்தம்பித்துப் போயின!
என்னது? எப்படி நிகழ்ந்தது இது??!
ஓம் நமோ நாராயணா!
நாரதரே! எங்கள் சக்திகளை நிறுத்தியது யார்?
அங்கே வந்த நாரதர் அவர்களைத் திசை திருப்பினார்.
சொல்கிறேன். அதற்கு முன் ஒரு கோரிக்கை- உங்களுடைய போட்டியால் பாவம், பூமியல்லவா பாதிப்படைகிறது! இதோ, மேலிருந்து பறந்து வருகிறது பாருங்கள் ஒரு துரும்பு! இதிலேயே உங்கள் சக்தியைக் காட்டலாமே!
நாரதர் சொன்னபடி—
வாயுதேவன் காற்றைக் கிளப்பினான்; அடுத்த நொடியே அதிர்ந்தான்.
என்ன?? இந்தத் துரும்புகூட நகரவில்லையே???
வருணனும் அக்னியும் அந்தத் துரும்பை நனைக்கவும் எரிக்கவும் இயலாதவர்களாய், நெஞ்சம் நொறுங்கினார்கள்.
ஐயோ! போயிற்று என் சக்தி!
என் சக்தியும் தொலைந்தது! எப்படி நேர்ந்தது இந்த அவலம்?
துரும்புக்கு முன் நீங்கள் துரும்பானது- கேவலம்!


அன்னை பார்வதி தேவி சற்றே கண்ணிமைத்தாள். காற்று நின்றது, நீரும் நெருப்பும் செயலற்றுப் போயின! ஒரு துரும்பிலே தன் சக்தியின் ஓர் அணுவை மட்டுமே செலுத்தி அன்னையே அதை அனுப்பினாள்! அந்தத் துரும்புதான் இரும்பாகி உங்கள் அகந்தையைத் தகர்த்தது!
உங்கள் சக்தி, உங்கள் சக்தி என்று அகம்பாவம் கொண்டீர்களே! ஒரு துரும்பைக்கூட அசைக்க முடியாத உங்களுக்கென்று ஏது சக்தி? உங்களுக்குள்ளும் ஒவ்வொன்றிலுள்ளும் ஊடுருவியிருக்கும் சக்தி - அந்தப் பராசக்தி! அண்ட சராசரங்கள் அனைத்திலும் வியாபித்திருப்பவள்- அந்த மகா சக்தி!
அறிவு வரப்பெற்ற தேவர்கள் மூவரும் விரைந்தோடி தேவியின் காலடியில் விழுந்து கதறினர்கள்.
மன்னித்தருள வேண்டும் மாதாசிவே!
அன்னை சக்தியே! இழந்த சக்தியை நாங்கள் மீண்டும் பெற வேண்டும்!
உரிய விதத்தில் எங்கள் கடமைகளைச் செய்ய பணித்தருள வேண்டும்!
அவ்விதமே அருள்கிறேன்! வரும் தைப் பூச தினத்தில் நாயகரும் நாமும் எம்முடைய அருள் சக்தியை அதிகரித்துக் கொள்வோம். அன்று எம்மை வழிபட்டு ஆற்றல் பெறுவீர்களாக!


தைப்பூசத்திற்கு ஏதனால் தனிச்சிறப்பு? நம்முடைய ஒரு வருடம்-தேவர்களுக்கெல்லாம் ஒரு நாள். ஆடி முதல் மார்கழி வரையிலான ஆறு மாதங்கள் கொண்ட தட்சிணாயனம், தேவர்களின் ஓர் இரவுப் பொழுது. தை முதல் ஆனி வரையில் ஆறுமாதங்கள் அடங்கிய உத்தராயனம், தேவர்களின் பகற்காலமாகும். எனவே-தை மாதமே, தேவதினத்தின் தொடக்கமாகிய காலைப் பொழுதாகிறது.
சிவ அம்சமான சூரியன் தேவதினத்தின் ஆரம்பமான தை மாதத்தில் மகரராசியில் புத்துணர்ச்சி பெற்றிருக்க-சக்தி அம்சமாகிய சந்திரன் பூசம் நட்சத்திரம் கொண்ட கடக ராசியில் ஆட்சி பலம் அடைந்திருக்க-சூரியனும் சந்திரனும் 180 டிகிரியில் நேருக்கு நேர் சந்தித்துப் பரஸ்பரம் சீபராற்றல் பெறும் விண்ணியல் விந்தை, அன்றைய பௌர்ணமியில் நிகழ்கிறது!
சிவனும் - சக்தியும் -
சிவ சக்தி ஐக்கியமான முருகனும்-
மகத்துவம் அடைகின்ற காலம் அது!
தைப்பூச விரதமிருந்து சிவபெருமானையும், பராசக்தியான பார்வதி தேவியையும், குமரக் கடவுளையும் வழிபடுபவர்கள், அசௌகரியங்கள் நீங்கி, ஆரோக்கியமும் ஆற்றலும் பெறுவார்கள்.
ஓம்..சர்வ மங்களாயை நம:
மணவாழ்க்கையில் மகிழ்ச்சியையும், மாங்கலத்தையும், மக்களுக்கு மேன்மையையும் அளிக்கும் தைப்பூச விரதத்தைப் பெண்மணிகள் கடைப்பிடித்து சுகமும் சுபிட்சமும் அடையலாம்!



ஸ்நேகா பதில்கள்

முப்பது வருடங்களாக என் குடிகாரக் கணவனிடம் இம்சைப்பட்டு இனி தாங்காது என்ற நிலையில், என் இரு மகன்கள், ஒரு மகள், நான் நால்வரும் என் கணவனைத் தனியே விட்டு விட்டு வேறு குடித்தனம் போய்விட்டோம். அவர் ரிடையர்டு ஆனவர். சொந்த வீட்டில் குடித்தனம்.

இப்போது எல்லா உறவினர்களும், நண்பர்களும் நான் செய்தது சரியல்ல, திரும்பவும் வீட்டிற்கே போ என்று கண்டிக்கின்றனர். என் கணவர் எப்படிப்பட்டவர் என்று இவர்களுக்கெல்லாம் நன்றாய்த் தெரியும். இருந்தும் என்னைக் குற்றவாளியாகக் கருதுகின்றனர். என் கணவர் எங்களை வந்து அழைக்கவில்லை. ஆனால் என் கவனிப்பு இல்லாமல் கஷ்டப்படுவதாக அறிகிறேன். நான் திரும்பவும் வீட்டிற்குச் செல்ல என் பிள்ளைகள் சம்மதிக்கவில்லை, மீறிச் சென்றால் அவர்கள் வராததோடு, அவர்களுடைய சம்பளப் பணமும் என்னிடம் தர மாட்டார்களாம். இப்பணம் இல்லாமல் நான் கணவரோடு வாழ முடியாது. மேலும் கணவர் மனம் திருந்தி விட மாட்டார். திரும்பவும் நானும் மகளும் அவருடைய அடி உதைகளுக்கு ஆளாக வேண்டும்.

இந்த நெருக்கடியான நிலையில் நான் என்ன செய்ய வேண்டும்?

ஊர், உறவினர்கள் இது செய்கிறார்கள், நாலு பேர்கள் என்ன நினைப்பார்கள்? என்று நினைத்து நினைத்தே பலர் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்கிறார்கள். மற்றவர்கள் உங்கள் வாழ்க்கையை நிர்ணயிப்பதில்லை. நாளைக்குச் சாப்பாட்டுக்கு இல்லாமல் நின்றால் எந்த ஊர்க்காரர்களும் ஒரு வாய்ச் சோறு போட மாட்டார்கள். எனவே முதலில் இவர்கள் பேசுகிறார்கள், அவர்கள் பேசுகிறார்கள் என்று நினைப்பதையே ஒழியுங்கள்.

அதேபோல பிள்ளைகளுக்காகவும் நீங்கள் பயப்பட வேண்டாம். உங்கள் மனது உங்கள் கணவருக்காக இரக்கப்படுகிறதா என யோசியுங்கள். அதே சமயம் உங்கள் மகளுக்கு இன்னும் திருமணம் செய்ய வேண்டிய கடமையும் பாக்கி இருக்கிறது போல இருக்கிறது. நாளைக்கு அந்தப் பெண் திண்டாடிக் கொண்டு நின்றால் அதற்கும் உங்களைத்தான் குறை சொல்லுவார்கள். எனவே மற்றவர்கள் சொல்வதை விடுத்து, உங்களுக்கு நடைமுறை சாத்தியம் எது என நினைத்து அதன்படி நடக்க முயற்சியுங்கள்.

நான் மிக மென்மையாக வளர்க்கப்பட்டவள். அம்மா செவ்வாய், வெள்ளி பூஜை தவற மாட்டாள். ஆனால் நான் புகுந்த இடம் எதற்கும் 'டோன்ட் கேர்' ரகம். என் கணவருக்குச் சதா நான் படுக்கையறையிலேயே இருக்க வேண்டும். திருமணமாகி இந்த எட்டு மாதத்திலேயே எனக்கு வாழ்க்கை வெறுத்து விட்டது. எப்போதும், உல்லாசமும், கேளிக்கையும், படுக்கையறை இன்பமுமாக இருப்பதுதான் வாழ்க்கையா? நான் எத்தனையோ முறை பேச முயற்சித்தேன். அவர் எதையுமே காதில் போட்டுக் கொள்வதில்லை. மாமியாரும் எதையுமே லட்சியம் செய்ய மாட்டார். சமையற்காரன் சமைத்ததைத் தின்று விட்டு வீடியோ பார்த்து விட்டுத் தூங்கிவிடுவார். இவர் ஒரே பிள்ளை. நிறைய சம்பாதிக்கிறார். நான் யாரிடம் போய்ச் சொல்ல?

பெண்ணுக்கு மாப்பிள்ளை பார்க்கும் போது இவன் படித்தவனா, எத்தனை சம்பாதிக்கிறான் என்றுதான் பார்க்கிறார்களே தவிர நாம் வளர்த்த சூழ்நிலையும், மாப்பிள்ளையின் வீட்டுச் சூழ்நிலையும் பொருந்திப் போகிறதா என யாருமே பார்ப்பதில்லை. இதனால்தான் பல குழப்பங்களும் ஏற்படுகின்றன.

நீங்கள் ஒருவிதத்தில் அதிர்ஷ்டக்காரர். செய்யும் ஒவ்வொரு செயலிலும் தன்னுடைய அதிகாரத்தை, பதவியை நிலைநாட்ட முயலும் மாமியார் இல்லை. ஒதுங்கி உங்களுக்கு வழிவிடுகிறார். முதலில் உங்கள் வீட்டின் சூழ்நிலையை மாற்றுங்கள். சமையற்காரர் முதல் வீட்டு நிர்வாகம் வரை கொஞ்சம் கொஞ்சமாக உங்கள் கையில் எடுத்துக் கொண்டு நீங்கள் மருமகளாகக் காட்டிக் கொள்ளுங்கள். வீடு சகலவிதத்திலும் மாறுவதைக் கண்டு உங்கள் கணவரே வியப்படைந்து, அது அன்பாக மாறும். அதிகம் ஒட்டுதல் இல்லாத தாயினால் வளர்க்கப்பட்ட உங்கள் கணவர் நீங்கள் அபரிமிதமாக அன்பு காட்டினால் உங்களுக்கு அடிமையாகவே மாறுவார். கொஞ்சம் கொஞ்சமாக உங்களுடைய வீட்டைச் சொர்க்கமாக மாற்றுவது உங்கள் கையில் இருக்கிறது.

படுக்கையறை விஷயம் பெரிய விஷயமல்ல. உங்கள் கணவருக்கு இப்போதைக்கு அனுசரித்துச் செல்லுங்கள். மற்றவை மாறும் போது இதுவும் தானே மாறும். தவிரவும் நீங்கள் பக்திமயமாக வளர்க்கப்பட்டு விட்டதால் 'அது பாவம்' என்பது போல் நினைக்கிறீர்கள். திருமணமான புதிதில் எப்போதும் இன்பம் காணத் துடிப்பது பெரிய விஷயமல்ல. 'இந்த இன்பமும்' வாழ்வில் ஓர் அம்சம்தான். பல கணவன்மாரும் அப்படித்தான் இருக்கிறார்கள்.


நான் என் கணவரிடமிருந்து விவாகரத்து வாங்கிக் கொண்டு நாலு வருடங்கள் ஆகி விட்டன. என் பெண்ணை நானேதான் வளர்க்கிறேன். வேலையும் செய்கிறேன். அம்மா வீட்டிற்கும் எதற்கும் போய் நிற்பதில்லை. வீடு, வீடு விட்டால் ஆபீஸ் என்ற இந்த வாழ்க்கை எனக்கு சலித்துவிட்டது. மீண்டும் இருமணமா. அந்தக் கொடிய அனுபவங்கள் மீண்டுமா எனப் பயமாகவும் இருக்கிறது. ஆனால் இந்தச் சலிப்பான வாழ்க்கை விரக்தி யைத்தான் நீடிக்கிறது. பத்து வயதுப் பெண் அவள் பாட்டுக்குப் படிக்கிறாள். வேறென்ன வாழ்க்கை?

உங்களுக்கு ஏற்பட்டிருக்கிற விரக்தி நியாயமானதே. நீங்கள் மறுமணம் செய்து கொள்வதைப் பற்றி யோசித்துப் பாருங்கள். ஒருமுறை கையைச் சுட்டுக் கொண்டுவிட்டதால் மீண்டும் நெருப்பிடமே போகாமல் இருக்க முடியுமா? அதைப் பக்குவமாகப் பயன்படுத்துவதில்தான் இருக்கிறது. உங்களுக்கு நல்ல கணவர் கிடைத்து, ஓர் அருமையான வாழ்க்கையை வாழலாம். உங்களுடைய பெண்ணிற்கும் ஒரு தந்தை தேவைதான்.

அந்த எண்ணம் சரிப்பட்டு வரவில்லையென்றால் இன்றைக்கு நேரத்தைப் பயனுறக் கழிக்க பல சங்கங்கள், சேவை நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் சேர்ந்து அன்புக்கு ஏங்கும் இதயங்களுக்கு ஆறுதல் அளிக்கலாம்.

என் அண்ணன் (வயது 23) ஒரு முரடன். படித்திருந்தும் இருந்தாத சனியன். வீட்டுக்கும் ஊருக்கும் ஆகாதவன். உழைப்பு என்பது எவ்வடிவம் என்பது தெரியாது. நான்கு வேலையும் மூக்குப் பிடிக்க விழுங்கி விட்டு இன்னும் முட்டை, கடலை போன்று வாங்கித் தின்று (அப்பாக் கணக்கில்) வயிறு கொழுக்கிறான். 'அப்பன் சம்பாதிக்கிறான். ஆத்தா சமைச்சுக் கொட்டறா. உனக்கென்னடா கேடு' என்று ஏளனம் செய்வார்கள். 'ஏன்டா ஒனக்கென்னடா நோவுதா?' என்பான் இவன் பதிலுக்கு. இவனை எப்படித் திருத்துவது?

உங்கள் அண்ணன் சிறு வயதிலிருந்தே தவறான முறையில் வளர்க்கப்பட்டு விட்டார் எனத் தெரிகிறது. உங்களுடன் ஒப்பிட்டுப் பேசி அவருக்கு இன்னும் கொஞ்சம் 'காம்ப்ளெக்ஸ்' அதிகமாகி இருக்க வேண்டும். தன்னுடைய குறைகளை மறைக்க இப்படித் தாறுமாறாக நடக்க ஆரம்பித்திருக்கிறார். உங்களால் அவரைத் திருத்த முடியும். வீட்டுக்கு மூத்தவன் எனும் மரியாதையை எல்லோருமே காட்டுங்கள். மனித மனம் 'நீ உயர்ந்தவன்' என்று சொன்னால் தானாகவே உயரும். உங்கள் அண்ணனை அன்பால் திருத்துங்கள். ஒரு மனோதத்துவ மருத்துவரை அணுகி அவருடைய விரிவான ஆலோசனையின்படி கூட நடக்கலாம்.



சாலச் சிறந்த சத்தான சாலட்!

நாகரீகமும் நாக்குருசியும் பெருகிவிட்ட இக்காலத்தில் ஒரு நாளைக்கு நூறு வித சிற்றுண்டி வகைகளை நூறுவிதப் பத்திரிகைகள் தினம் தினம் உருவாக்கித் தருகின்றன. இதைத் தவிர ரெடிமேட் உணவு வகைகளான ஜாம், சீஸ், ஃப்ரூட், ஜீன், டின்ட் ஃபுட், நூடுல்ஸ், ரெடி மிக்ஸ் இத்யாதி, இத்யாதி இருந்தும் மாதமொரு முறை டாக்டரிடம் குடும்பத்துடன் படையெடுப்பு. உடம்பில் ரத்தமில்லை. இரும்புச் சத்து இல்லை. வைட்டமின் இல்லை. கால்சியம் இல்லை. புரோட்டீன் இல்லை என்று ஏதேதோ கூறி மாதமொரு பாட்டில் டானிக்கைக் குடிக்கிறோம்.

சமைத்துச் சாப்பிட்ட உணவெல்லாம் என்னவாயிற்று? சற்று சிந்தித்தால் புரியும். அக்கால முனிவர்களும் வனங்களில் இருந்த ரிஷிகளும் யோகிகளும் பச்சைக் காய்கறி, கனி வகைகளைத் தின்றே காலம் முழுதும் நோயின்றி நூறு வயது வரை வாழ்ந்தனர். அதே காய்கறி கனிகளை நாம் நாக்கு ருசிக்காக கொதிக்க வைத்து வேக வைத்து, ஆற வைத்து, பின் தினம் இரவில் அவற்றைச் சுட வைத்து காய்கறிகளின் உயிரையெல்லாம் சத்தையெல்லாம் கொன்று, அதன் உடலை—வெறும் சக்கையைத்தான் தினம் உண்கிறோம்.

இந்த அழகில் இன்னும் சில மேல் மட்ட விடுகளில் வேலைக்குப் போகும் பெண்கள் ஒரு வார சமையலை ஒரே நாளில் (ஞாயிற்றுக் கிழமையில்) முடித்து, தேதிப்படி சாப்பாட்டு அட்டவணை போட்டு, "பழையது பெட்டியின்" (பிரிட்ஜ்) கதவில் தோரணம் கட்டித் தொங்க விடுகிறார்கள். அதனால் சமைத்த உணவை பல தடவை சமைத்து 10 அல்லது 20 மணி கழித்து உண்கிறோம்.

ரிஷிகளைப் போல் பச்சை காய்கறிகளை அப்படியே தின்ன நம் நாக்குத்தான் வளைந்து கொடுக்காதே. ஸ்டிரைக் செய்யுமே. அதற்கு ஒரே வழி, உண்ணும் உணவின் உயிர்ச் சத்து கெடாமல் அதே சமயம் நாக்குக்கு ருசியுடனும் ஆகாரம் வேண்டுமா? ஒரே தாரக மந்திரம் சாலட்! சாலட்! சாலட்!!

'வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு' என்பது அந்தக் காலப் பழமொழி. 'வைத்தியனுக்குக் கொடுப்பதை காய்கறிக்காரனுக்குக் கொடு!' இந்தக் காலப் பழமொழி.

1. வாரத்தில் இரண்டு நாளாவது சாலட், உணவின் ஓர் அயிட்டமாக இருக்கட்டும். முக்கியமாக உங்கள் கணவர் குழந்தைகள் வீட்டில் இருக்கும் நாளாகப் பார்த்து சாலட் செய்யவும். ஏனெனில் சாலட் வகைகள் செய்து இரண்டு மூன்று மணிக்குள் உண்பது மிகவும் நல்லது.

2. சாலட்டுக்குக் காய்கறிகள் புதிதாக, இளசாக, நீர்ப்பச்சை வற்றாது இருக்க வேண்டுமாதலால் மார்க்கெட்டுக்குச் சென்று வந்த அன்றே அல்லது காய்கறிகள் வாங்கிய அன்றே சாலட் செய்யவும்.

3. சாலட் வகைகளில் நாவிற்கு ருசி தருவதற்காக சில பக்குவங்கள் செய்ய வேண்டும். பொதுவாக எலுமிச்சைச் சாறு, வினிகர், தக்காளிச் சாறு அல்லது துண்டங்கள், நறுக்கிய பச்சை வெங்காயத் துண்டுகள், சோம்பு, ஓமம், பச்சைக் கீரை வகைகள், சீரகம், மிளகுப்பொடி, சீஸ் துருவல், கோவா (பாலில் எலுமிச்சை பிழிந்து திரிந்த பால் கட்டி). இவற்றில் ஏதாவது சிலவற்றை காய்கறிகளின் ருசிக்கேற்ப சேர்க்கலாம்.

4. சாலட்டுகள் வெறும் காய்கறிகளை மட்டும் வைத்துச் செய்ய வேண்டுமென்ற கட்டாயமில்லை. சில காய்கறிகளின் (முள்ளங்கி, கோஸ்) சுவை பச்சையாக உண்ண நன்றாக இருக்காது. அவற்றின் சுவை நாக்குக்கு ஏற்றதாக மாற்ற அவற்றுடன் சில பழ வகைகளையும் இணைத்துக் காய், கனி கலவை சாலட்டாக செய்யலாம்.

5. சாலட்டுகளை மதிய வேளை அல்லது காலை உணவுடன் உண்பது நல்லது. பகல் நேரங்களில் உடலுக்கு அதிக பயிற்சி வேலைகள் இருப்பதால் அவை எளிதில் ஜீரணிக்கும். முள்ளங்கி, வெள்ளரிக் காய்

களில் செய்த சாலட்டுகளை இரவில் உண்டால் சிலருக்கு ஏப்பம், நெஞ்செரிச்சல், வயிற்றில் ஒரு காந்தல் (முக்கியமாக முள்ளங்கி) ஏற்படலாம். எனவே இக்காய்களைப் பகலில் உண்பது நல்லது.

6. புரூட் சாலட்டுகளை இரவில் உண்ணுதல் நல்லது. இவை எளிதில் ஜீரணமாகும். அத்துடன் இரவில் பழங்கள் உண்ணுவதால் மறுநாள் காலையில் எளிதாக மலம் கழிக்க முடியும்.

7. சாலட்டுகள் செய்யும் போது அவற்றுடன் முக்கியமாக ஏதாவது பச்சைக் கீரை வகைகளை நறுக்கிப் போடுவது நல்லது.

கொத்துமல்லி, புதினா, கறிவேப்பிலை, சோம்புக்கீரை, வெங்காயத் தாள் முதலிய கீரை வகைகள் சாலட்டுடன் நன்கு இணையும். நாவிற்கும் ருசி தரும். இக்கீரை வகைகளை கொதிக்க வைத்துச் சமைத்துச் சாப்பிடுவதை விடப் பச்சையாக உண்பது உடலுக்கு அதிகதாது, வைட்டமின் சத்துக்களைத் தரும்.

8. சாலட்டுகள் செய்யும் போது தண்ணீர் விடாத கெட்டிக் காய்கறிகளான காரட், முள்ளங்கி, முட்டைக்கோஸ், பரங்கிக்காய், பீட்ரூட் இவைகளைப் பெரிய துவாரம் (¼" சைஸ் உள்ள துவாரமுள்ள) உள்ள துருவியில், துருவி சுவை கூட்டும் பொருட்கள் கலந்து பரிமாறுவது நல்லது. துருவுவதால் இக்காய்கள் மிளகு, லெம் ஜூஸ் இவற்றுடன் எளிதில் கலந்து சுவை தரும். மென்று தின்னவும் எளிதாக இருக்கும்.

தண்ணீர் விடும் காய்கறிகளான வெள்ளரி, பூசணி இவற்றைத் துருவாமல் சிறு ½ செ.மீ. துண்டுகளாக நறுக்கி சாலட் செய்தால் அவற்றில் நீர்ச்சத்து, வீணாகித் தனியாகப் பிரிந்து நிற்காது. இக்காய்கள் மெதுவானவையாதலால் எளிதில் மென்று தின்னலாம்.

9. சாலட்டுகள் செய்யும் போது அவற்றுடன் ஊற வைத்த பருப்பு வகைகள் (பாசிப் பருப்பு, கடலைப்பருப்பு) அல்லது முளை கட்டிய முழுப் பயறு வகைகள் (பச்சைப் பயறு, கொத்துக் கடலை, சோயா பீன்ஸ்) இவற்றைக் கலந்து செய்தால், பயறு வகைகளின் முழு வைட்டமின் சத்துக்களும் நம் உடலுக்குக் கிடைக்கிறது. உடலுக்கு வேண்டிய புரதமும் இதில் அடங்கி விடுகிறது.

சாலட்டுகளில் இவற்றைச் சேர்க்கும் போது சற்று குறைவாகவே சேர்க்கவும். சிலருக்கு, வயதானவர், குழந்தைகள்) வேகாத, ஊற வைத்த பயறு பருப்பு வகைகள் உணவில் அதிகமானால் ஜீரணமாகாது. வயிற்றுப் போக்கு, வயிற்று உப்புசம் ஏற்படலாம். குடும்பத் தலைவி அவரவர் குடும்ப அங்கத்தினர்களின் உடல்நிலை உணர்ந்து இதன் அளவைக் கூட்டவோ குறைக்கவோ செய்யலாம்.

10. எல்லாவித சாலட் வகைகளிலும் தாராளமாக பச்சைத் தக்காளி, வெங்காயத் துண்டுகள் சேர்க்கவும். தக்காளியால் வேண்டிய இரும்புச் சத்து உடலுக்குக் கிடைக்கும். ரத்த விருத்திக்கும் நல்லது. வெங்காயம் உடலில் பூச்சிகளைக் கொல்லும். நோய் எதிர்ப்புச் சக்தி தரும். தலை முடிக்கும் நல்லது.

11. இத்தனை கஷ்டப்பட்டு சாலட் செய்தவுடன், அதைப் பார்த்து விட்டே முகம் சுளிக்கும் கணவரோ, சாலட்டைக் கண்டவுடன் எழுந்து ஓடும் குழந்தைகளோ உங்களுக்கு இருக்கிறார்களா? கவலையை விடுங்கள். இதே காய்கறிகளைத் துருவியில் துருவி, கெட்டியான, புளிக்காத, சில்லென்ற தயிரில் கலந்து சிட்டிகை உப்பு, சிறிது சர்க்கரை, பிடித்தால் பொடித்த ஏலக்காய், நெய்யில் வறுத்துப் பொடித்த ஜாதிக்காய், வசதியிருந்தால் முந்திரிப் பருப்பு போட்டு, கப்புகளில் போட்டுக் கொடுங்கள். ஒன்றுக்கு இரண்டு கப்பாக உங்களிடம் கேட்டு வாங்கிச் சாப்பிடுவார்கள்.

12. பொதுவாக சாலட் வகைகளை செய்த உடனே சாப்பிடாது. எல்லாக் கூட்டுப் பொருட்களையும் (உப்பு, மிளகு, கீரை, லெம் ஜூஸ் முதலியவை) சேர்த்து நன்கு குலுக்கி மூடி ½ மணி வைத்து விட்டுப் பரிமாறினால்தான் காய்கறி, கனிகள் நன்கு ஊறி, உப்பு, உரைப்புச் சேர்ந்து வாய்க்கு ருசியாக இருக்கும்.

பொதுவாக உங்களுக்குத் தெரிந்தவை



1. காரட் துருவல், 2. தக்காளி, வெங்காய சாலட், 3. வெள்ளரிகோசு மல்லி, 4. வாழைத் தண்டு சாலட். மேலும் சில. இதோ மாதிரிக்குச் சில சாலட்டுகள்:

முட்டைக்கோஸ் சாத்துகுடி சாலட்:

200 கிராம் முட்டைக்கோஸை மிகப் பொடியாக அரிந்து விடவும். ஒரு பெரிய சாத்துக்குடியை உரித்து விதை நீக்கி, சுளை சுளை உதிர்த்து, கோஸுடன் சீராகக் கலக்கவும். 2 டீஸ்பூன் சர்க்கரையைத் தூவி ஒரு டீஸ்பூன் உப்புப் பொடி தூவவும். ஒரு டீஸ்பூன் மிளகு, ஒரு டீஸ்பூன் சீரகத்தை நெய்யில் பொறித்துப் பொடித்துக் கலக்கவும். அரை மூடி எலுமிச்சை சாறு பிழிந்து, இரண்டு டேபிள் ஸ்பூன் கொத்துமல்லித் தழைகளை நறுக்கிப் போட்டு கலவையை நன்கு குலுக்கிவிட்டு அரை மணி சென்று பரிமாறவும். இந்த சாலட்டில் சாத்துக்குடி கலந்திருப்பதால் முட்டைக்கோஸ் வாசனையில்லாமல் சாப்பிடச் சுவையாக இருக்கும்.

பரங்கிக்காய் பப்பாளி சாலட்:

பரங்கிக் காய் தோல் சீவி துருவியில் துருவியது. 200 கிராம். பப்பாளிப் பழம் தோல் சீவி சிறு துண்டுகளாக அரிந்தது — 250 கிராம். இரண்டையும் கலந்து இரண்டு ஸ்பூன் சர்க்கரை தூவவும். ஒரு டீஸ்பூன் உப்பு தூவவும். நெய்யில் இரண்டு டீஸ்பூன் சோம்பை வறுத்துப் போடவும். இரண்டு டீஸ்பூன் மிளகை நெய்யில் பொறித்து பொடித்துப் போடவும். கொத்துமல்லி 3 டேபிள் ஸ்பூன் நறுக்கியது கலக்கவும்.

பூசணிக்காய் தர்பூஸ் சாலட்:

200 கிராம் பூசணி, 200 கிராம் தர்பூஸ் இரண்டையும் தோல் சீவி, சிறு துண்டுகளாக நறுக்கிக் கலந்து வைக்கவும். ஓமம் ஒரு டீஸ்பூன், மிளகு ஒரு டீஸ்பூன், ஒரு மலை ஏலக்காய், ஒரு டீஸ்பூன் சீரகம் இவற்றை நெய்யில் வறுத்துப் பொடித்துக் கலக்கவும். இரண்டு டேபிள் ஸ்பூன் புதினாத் தழைகளை அரிந்து போடவும். தேவைக்கேற்ப உப்பு சேர்க்கவும்.

காலிபிளவர் சாலட்:

காலிபிளவர் உதிர்த்த பொடி — 1 கப்.
வெங்காய கீரை — 1 கப் (நறுக்கியது)
தக்காளி — துண்டுகள் — 1 கப்.
முளை கட்டிய பச்சைப் பயறு — 1 கப்.

மூன்றையும் சீராகக் கலந்து வினிகர் இரண்டுடேபிள்ஸ்பூன் விட்டு, ஓமம் இரண்டு டீஸ்பூன் வறுத்துப் போட்டு. உப்பு, மிளகுப் பொடி, ருசிக்கேற்ப சேர்த்து கலவையைக் குலுக்கி விடவும்.

பூசணிக்காய் சாலட்:

பூசணி துருவியது ஒரு கப், தேங்காய்ப்பூ துருவியது ஒரு கப், பாசிப் பருப்பு ஊற வைத்தது — ஒரு கப். மூன்றையும் சீராகக் கலக்கவும். மூன்று டேபிள் ஸ்பூன் சோம்புக் கீரையை அரிந்து போடவும். உப்பு, மிளகு பொடி ருசிக்கேற்ப சேர்க்கவும். ஒரு எலுமிச்சையின் சாறு பிழிந்து விட்டுக் குலுக்கவும். இதே பக்குவம் வெள்ளரிக்காய் சாலட்டுக்கும் உகந்தது.

மிக்சட் காய்கறி, கனி சாலட்:

பீன்ஸ் — (விதையில்லாத பிஞ்சு பீன்ஸ் அரிந்தது) 1 கப்.
முட்டைக்கோஸ், பூசணி, பரங்கிக்காய், காரட், பீட்ரூட், முள்ளங்கி — 2 கப்.
வெள்ளரி, தர்பூஸ், கொய்யாப்பழம், பப்பாளிப்பழம், வாழைப்பழம்—சிறு துண்டுகளாக நறுக்கியது 2 கப்.
முளை கட்டிய பயறு (அ) பருப்பு வகை 1 கப்.
தேங்காய்த் துருவல் — 1 கப்.
கீரை வகைகள்: புதினா, கொத்துமல்லி, வெங்காயத்தாள், கறிவேப்பிலை — 4 டேபிள் ஸ்பூன் (கலவையாக)
எலுமிச்சைச்சாறு(அ)வினிகர்—3 டேபிள் ஸ்பூன்.
சர்க்கரை — 2 டேபிள் ஸ்பூன்.
ஏலக்காய் — 4 (பொடித்தது).
ஜாதிக்காய் — சுண்டைக்காய் அளவு (வறுத்துப் பொடித்தது).
ஓமம் — 1 டீஸ்பூன்.


காய்கறி, கனி, பயறு, கீரை வகைகளைக் கைபடாமல் குலுக்கிக் கலந்து, மிளகு, உப்பு, ஏலக்காய், ஜாதிக்காய், ஓமம் பொடிகளைக் கலந்து சர்க்கரை தூவி, எலுமிச்சை சாறை விட்டு நன்கு கலந்து அரை மணி நேரம் வைத்து, ஊறியபின் பரிமாறவும்.

மிக்சட் சாலட்டுக்கு மேற்கூறிய எல்லாக் காய்கறிகளும் கட்டாயம் அவசியமில்லை. எது உள்ளதோ அவைகளைக் கலந்து போடலாம். காய்கள் நறுக்கிய அளவுக்கு ஏற்ற சமபங்கு அளவு கனி வகைகள் இருந்தால் சுவை நன்றாக இருக்கும். காய்கறி, கனி வகைகளின் அளவில் பாதி அல்லது கால் பங்கு ஊறிய பயறு வகைகள் இருந்தால் போதும்.

— ஜெயலக்ஷ்மி



சில நினைவுகள்
என்றுமே நிலைத்திருப்பவை.



நூறு ஆண்டுகளுக்கு முன்பாக எடுக்கப்பட்ட இந்த புகைப்படம்
ஐதராபாத்தைச் சேர்ந்த திரு. லாலா தீனதயாள் அவர்களின் கலைக்கூடத்தில் இருந்து

இன்றும் அத்தோற்றத்தைப் பசுமையாக நினைவுகூர வைப்பது
பிளாக் & ஒயிட் படங்களே!

உங்கள் குடும்ப போட்டோ ஆல்பத்தைப்
புரட்டிப் பாருங்கள்!
பல்லாண்டுகளுக்கு முன் எடுத்த பிளாக் & ஒயிட்
படங்கள் இன்றும் கருக்கழியாமல்,
மங்காமல் இருப்பதைக் காண்பீர்கள்.
அதுவே பிளாக் & ஒயிட் படங்களின் சிறப்பு! அறுபது, எழுபது
ஏன் எண்பது வருடங்களானாலும் மங்காது.
சொல்லவும் வேண்டுமா?
காலத்தை வென்றிடும் பிளாக் & ஒயிட் படங்களே
உங்களது தேர்வாக இருக்க முடியும்.

அழியாத நினைவுகளுக்கு
காலத்தால் அழியாத பிளாக் & ஒயிட் படங்கள்!

INDU





இந்து
பிளாக் & ஒயிட்
ரோல் பிலிம்
மற்றும் ப்ரோமைடுகள்.



விபத்து நடந்தால்...

விபத்தை யார்தான் விரும்புவார்கள்? ஆனால் நம் வரை விபத்து அண்டாமல் நாம் கவனத்தோடு வண்டியை ஓட்டினால் கூட எதிரே வரும் ஒரு லாரியோ, பஸ்ஸோ மோதி விடலாம். அல்லது எதிர்பாராத வகையில் நடந்து போகும் ஒருவர் நம் வண்டியின் குறுக்கே வந்துவிடலாம்.

'தவறு யார் மீது? வண்டியை மேலே ஓட்டிச் செல்வதா, அல்லது போலீஸ் வரும் வரை காத்திருப்பதா?' நமக்கோ, அல்லது எதிரே வந்தவருக்கோ உடலில் அடிபட்டால் என்ன செய்வது?' இவை போன்ற பல கேள்விகள் விபத்தை நேரில் சந்திக்கும் வரை எவர் மனத்திலும் எழாது.

நெருப்பு என்றால் வாய் வெந்து விடுமா என்ன? நாம் வண்டி ஓட்டும் போது விபத்து ஏற்பட்டால் கவனிக்க வேண்டிய 10 விஷயங்கள் இதோ:

வண்டியை உடனே நிறுத்தவும்:

விபத்து சிறியதானாலும், பெரியதானாலும் வண்டியை உடனே நிறுத்த வேண்டும். போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல் ஓரமாக நிறுத்த வேண்டும். ஆனால் உயிர்ச் சேதம் இருப்பின் வண்டியை மோதிய நிலையிலேயே போலீஸ் வரும் வரை நிறுத்த வேண்டும். இதனால் போக்குவரத்து பாதிக்கப்படலாம். ஆயினும் அருகிலுள்ளவர்கள் உதவியுடன் எதிரே வரும் வாகனங்களை நிறுத்த வேண்டும். வண்டியின் எஞ்சினை அணைத்து விட வேண்டும். ஏனென்றால் மோதியதால் பெட்ரோல் டாங்க் உடைந்து பெட்ரோல் கசிவு ஏற்பட்டிருக்கலாம். அருகில் எவரும் சிகரெட் பிடிப்பதையும் தவிர்க்க வேண்டும். இவ்வாறு செய்வதால் தீவிபத்து ஏற்படுவதைத் தடுக்கலாம்.

நிதானம் தேவை:

விபத்து ஏற்பட்டால் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை விட வேடிக்கை பார்க்கக் கூடி இருப்பவர்களே அதிகம் கூச்சல் போட்டுக் குழப்பம் விளைவிப்பார்கள். எனவே வண்டியை ஓட்டி வந்தவர் கோபத்தால் படபடவென்று பேசுவதைத் தவிர்க்க வேண்டும். நிதானமாகப் பேச வேண்டும். யார் மீது தவறு என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர் போலீஸார்தான். எனவே அதுவரை பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். வாக்கு வாதம் செய்வதால் நிலைமை இன்னும் மோசமாகும். சரியான சாட்சி கூறுபவர்களும் கூட குழம்பிப் போவார்கள்.

மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும்

நம் வண்டியால் ஒருவருக்கு அடிபட்டால் அவருக்கு முதலுதவி அளிக்கலாம் என்று சட்டம் கூறுகிறது. மருத்துவ சிகிச்சை தேவையானால் அருகிலுள்ளவர்கள் உதவியுடன் மருத்துவமனைக்கும் எடுத்துச் செல்லலாம். இதற்கு விதிவிலக்கான ஒரு சூழ்நிலை உண்டு. நடந்து செல்லும் ஒருவர் மீது வண்டி ஓட்டி வந்தவர் மோதிவிட, பொது ஜனங்கள் அந்த ஓட்டுநர் மீது தாக்குதல் செய்யத் தொடங்கினால் அந்த ஓட்டுநர் அருகிலுள்ள காவல் நிலையத்திற்கு ஓடித் தப்பிக்கலாம். பிறகு போலீஸிடம் உண்மையை விளக்கலாம். அடிபட்ட ஒருவரை மருத்துவமனைக்கு வண்டி ஓட்டி வந்தவர் எடுத்துச் செல்வதாகக் கூறுகிறார். ஆனால் அந்த நபர் மருத்துவ உதவி தேவையில்லை என்கிறார். இந்நிலையில் ஓட்டி வந்தவர் என்ன செய்ய வேண்டும்? அடிபட்டவர் மருத்துவ சிகிச்சை தேவையில்லை என்பதை எழுத்து மூலம் எழுதி வாங்கிக் கொண்டு அதை அருகிலுள்ள காவல் நிலையத்திலும் தெரிவிக்க வேண்டும்.

கைவசம் இருக்க வேண்டியவை:

ஒரு விபத்தில் ஒருவருக்கு காயம் ஏற்பட்டாலோ அல்லது மூன்றாவது நபர் ஒருவரின் பொருளுக்குச் சேதம் ஏற்பட்டாலோ விபத்து நடந்த 24 மணி நேரத்திற்குள் போலீஸுக்குத் தெரிவிக்க வேண்டும். டிரைவிங் லைசென்ஸ், ரெஜிஸ்டிரேஷன் சர்டிபிகேட் ஆகியவற்றைப் போலீஸ் கேட்கும் போது காட்டத்தயாராகஇருக்கவேண்டும்.கைவசம் இல்லாவிட்டால் பரவாயில்லை. போலீஸ் 10 நாட்கள் தரும். அதற்குள் அவற்றைக் காட்ட வேண்டும்.

பிரெட் சிலைசு மீது வெண்ணெய் தடவி சிறிதளவு எள் பொடியோ கறிவேப்பிலைப் பொடியோ சேர்த்து சான்ட்விச் செய்து பாருங்கள். மிகவும் சுவையாயிருக்கும்.

— ரம்யா.

எப்போது போலீஸை நாடலாம்?

விபத்தில் மூன்றாவது நபர் பாதிக்கப்படாத வரையில் இரு டிரைவர்களும் தங்கள் பெயர், முகவரி, ரெஜிஸ்டிரேஷன் எண் இவற்றைப் பரிமாறிக் கொள்ள வேண்டும். போலீஸிடம் தெரிவிக்க வேண்டியதில்லை. காரின் சொந்தக்காரர் வேறொருவராக இருப்பின் அவர் முகவரியையும் கொடுக்க வேண்டும். மேற்கூறிய விவரங்கள் பரிமாறப்படாவிட்டால் அருகிலுள்ள காவல் நிலையத்தில் விபத்து பற்றி நேரிலோ கடிதம் மூலமோ தெரிவிக்க வேண்டும். தன் வண்டி இடித்ததால் எதிராளியின் வண்டியில் லேசான கீறல் ஏற்பட்டதைக் கண்ட ஒருவர் அதைப் பெரிதுபடுத்தாமல் போய்விட்டார். ஆனால் எதிராளி அவர் மீது வழக்கு தொடுத்ததால், அவர் பல முறை கோர்ட் செல்ல நேர்ந்தது. எனவே பொய்யாக வழக்குத் தொடுப்பதற்கு எதிராளிக்கு வாய்ப்புக் கொடுக்காமல் கவனமாக இருக்க வேண்டும்.

குறித்துக் கொள்ள வேண்டியவை:

சாட்சியங்களின் பெயர்கள், முகவரிகள், விபத்து நடந்த சமயம் கடந்து சென்ற வண்டிகளின் ரெஜிஸ்ட்ரேஷன் எண்கள், விபத்து நடந்த இடத்திற்குப் போலீஸ் அதிகாரி வந்தால் அவர் பெயர், அவர் பணிபுரியும் காவல் நிலைய எண், இவற்றைக் குறித்துக் கொள்ள வேண்டும். இவைகளை இன்சூரன்ஸ் கம்பெனி உங்களிடம் கேட்கும். மேலும் விபத்து நடந்த சூழ்நிலையையும் குறித்துக் கொள்ள வேண்டும். என்ன தேதி, எந்த நேரம், இடம் சூழ்நிலை பற்றிய விபரம், தட்பவெப்ப நிலை, சாலையின் தன்மை, போக்குவரத்துச் சாலையிலுள்ள டிராஃபிக் விளக்கு, இரு கார்களும் எந்தெந்த திசையை நோக்கிச் சென்றன. என்ன வேகம் இவற்றைக் குறிப்பதுடன், முடிந்தால் மோதிய கார்களின் நிலையையும் ஒரு படமாக வரைய வேண்டும். இதற்காக எப்போதும் கைவசம் சிறிய நோட்டுப், பென்சில் வைத்திருப்பது நல்லது.

இப்படிச் செய்வதால் என்ன பலன்? 1. பல மாதங்கள் சென்றபின் நீதிமன்றத்தில் விபத்தை விவரிக்கும் போது ஞாபகம் வைத்துக் கொள்ள உதவும். 2. இன்சூரன்ஸ் கம்பெனிக்கு உடனேயே எல்லா விவரங்களையும் கொடுக்கலாம். பம்பாயில் ஒருவர் விபத்து நடந்த இடத்தின் அமைப்பைப் படமாக வரைந்து வைத்திருந்ததால் தான் நிரபராதி என்பதை அவரால் கோர்ட்டில் நிரூ


ஐடெக்ஸ்
சாஸ்திரிய முறையில் தயாராகும்
ஐடெக்ஸ் மை கண்களுக்கு
குளுமையூட்டி பாதுகாக்கிறது
எவ்வித தீங்கும் விளைவிக்காது
ஐடெக்ஸ் 48 ஆண்டுகளாக
உங்கள் நம்பிக்கையின்
மகத்தான சின்னம்
EYETEX
Eyetex
அரவிந்த் லாபரட்டரீஸ் சென்னை 600 033

உங்கள் குழந்தைக்கு
அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்



திட உணவின் முதற் சுவையிலிருந்தே.

நான்கு மாதங்கள் ஆகும் பொழுது உங்கள் குழந்தைக்கு பாலுடன் கூட திட உணவும் தேவை. அவனுக்கு ஸெரிலாக்கின் அனுகூலங்களைப் புகட்ட இதுவே உகந்த வேளை.

போஷாக்கு அனுகூலம்: ஒவ்வொரு தடவை ஸெரிலாக் ஊட்டும் பொழுதும் உங்கள் குழந்தைக்குத் தேவையான புரத சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின் மற்றும் தாது ஆகிய எல்லா போஷாக்கு சத்துக்களும் அவனுக்கு கிடைக்கின்றன. அனைத்தும் குழந்தையின் விசேஷ தேவைக்கு ஏற்றபடி சரியான விகிதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

சுவையில் அனுகூலம்: ஸெரிலாக் நலம் தரும் போஷாக்குடன் நல்ல சுவையும் கொண்டது. ஸெரிலாக் சுவை என்றாலே குழந்தைகளுக்கு கொள்ளை ஆசை.

தயாரிப்பதில் அனுகூலம் : ஸெரிலாக் குழந்தை உண்பதற்கேற்ப முன்கூட்டியே பதமாக்கப்பட்டுள்ளது. கொதிக்கவைத்து ஆறிய வெது வெதுப்பான நீரில் கலந்தால் போதும். நொடியில் தயார் ஸெரிலாக் உணவு.

உங்கள் குழந்தைக்கு சரியான விகித சத்து கிடைக்கவும், சுகாதார முறையில் கலக்கவும், டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.

இலவச ஸெரிலாக் புத்தகம் பெற
இம்முகவரிக்கு எழுதவும் :
ஸெரிலாக்,
தபால் பெட்டி எண் : 3
புது டில்லி 110 008.



ஸெரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை

Nestlé

பிக்க முடிந்தது.

கவனித்துச் செயல்படுங்கள்:

விபத்து நடந்த இடத்திற்கு வந்து போலீஸ் அதிகாரிகள் பல குறிப்புகள் எழுதிக் கொள்வார்கள். எதிராளி குடித்திருப்பது போலத் தோன்றினல் அதைக் குறித்துக் கொள்ளும்படி போலீஸைக் கேட்டுக் கொள்ள வேண்டும். அதேபோல் மோதிய வண்டி சரியான நிலையில் இல்லாதிருப்பினும், அதிகச் சுமையோடு வந்திருப்பினும் இவற்றையும் போலீஸ் அதிகாரியைக் குறித்துக் கொள்ளச் சொல்ல வேண்டும். எதிராளியின் வண்டியைச் சோதனை செய்ய அனுமதி உண்டு. ஆனல் எங்கே என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

விபத்தில் எவருக்கேனும் அடிபட்டு அவர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப் பட்டால் அவர் பெயர், அவர் சிகிச்சை பெறும் மருத்துவமனையின் பெயர் இவைகளை விசாரிக்க வேண்டும். டிரைவரின் நிலை, வண்டியின் நிலை இவை பிற்பாடு கோர்ட்டில் வழக்கு நடத்தும் போது உதவும் சாட்சிகள். சிகிச்சை பெறுபவர் பற்றி மருத்துவர் தரும் மருத்துவ அறிக்கையும் முக்கியமானது. இதைப் பற்றியும் அறிந்திருக்க வேண்டும்.

இனி விபத்து நடந்த பிறகு செய்யக் கூடாத சில விஷயங்களும் உள்ளன. அவை:

வக்கீல் வரட்டும்:

விபத்து நடந்த இடத்திற்கு போலீஸ் வந்தால் அவரிடம் உங்களது பெயர், முகவரி மற்றும் லைசென்ஸ் எண் இவை மூன்றை மட்டும் கொடுத்தால் போதும். ஏதேனும் வாக்கு மூலமாகக் கொடுக்கும்படி போலீஸ் கேட்டால், 'எனது வக்கீலைக் கலந்தாலோசித்த பிறகு கூறுகிறேன்' எனச் சொல்லி விடலாம். அதுவரை எந்த விவரமும் கூற வேண்டாம்.

இன்சூரன்ஸ் கம்பெனி கைகொடுக்கும்:

தவறு செய்தது நீங்களாகவே இருந்தால் கூட அதைப் பொது இடத்தில் ஒப்புக் கொள்ள வேண்டாம். இப்படிக் கூறுகிறது இன்சூரன்ஸ் கம்பெனி. இது எதனல் என்றல் நீதிமன்றத்தில் வழக்கு நடக்கும் போது இப்படிக் கூறிய சில வார்த்தைகளால் வழக்கு உங்களுக்கு எதிராகத் திரும்பக் கூடிய அபாயம் உண்டு.

அடிபட்டால் என்ன செய்வது?

விபத்தில் உங்களுக்கு அடிபட்டிருக்கலாம். ஆனல் யாராவது "அடி பட்டிருக்கிறதா?" என்று வினவினல் ஒப்புக்கொள்ள வேண்டாம். மருத்துவர் சோதித்துக் கூறும் வரை எதுவும் கூற இயலாது என்று சொல்லி விடலாம்.

விபத்து என்பது இரு பிரிவினருக்கும் வருத்தத்தைக் கொடுக்கும் நிகழ்ச்சிதான். ஆயினும் இருவருமே நல்லவர்களாக இருப்பதில்லை. நம் பாதுகாப்பிற்காக நாம் முன் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியது அவசியம். அதே சமயம் மற்றவரிடமும் மனிதாபிமானம், கருணை உடையவராக இருக்க வேண்டும். அதற்காக ஏமாளியாக, வெகுளியாக இருந்து வம்பில் மாட்டிக் கொள்ளவும் வேண்டாம்.

ஆதாரம்:

ரீடர்ஸ் டைஜஸ்ட்

— லக்ஷ்மி சங்கர்

கலர் மெழுகுவர்த்திகளை கொளுத்தி வைக்கவும். ஒரு வாய கன்ற பாத்திரத்தில் தண்ணீரை எடுத்துக் கொண்டு அதில் எரியும் மெழுகுவர்த்தியைச் சாய்த்துப் பிடித்தால் அதிலிருந்து ஒழுகும் திரவம் — தண்ணீரில் இருந்து சிறிய வட்டமான அழகான பொட்டு போன்ற மணிகள் கிடைக்கும். அது போல் கலர் கலராக மணி தயார் செய்து கொள்ளவும். ஓர் அட்டையில் வெள்ளை பேப்பர் ஒட்டி அதன் மீது பறவைகள் (அ) பூ வடிவம் மற்றும் நமக்கு விருப்பமானவற்றை வரைந்து அதன் மீது கோந்து தடவி, கலர் மணிகள் கொண்டு ஒட்டி விடவும். இந்தப் படத்தை உங்கள் வரவேற்பறையில் மாட்டி விடுங்கள். இதைப் பார்க்கும் உங்கள் விருந்தினர்கள் எதைக் கொண்டு செய்தீர்கள் என கேட்டு ஆச்சரியப்படுவார்கள்.

— பாலா.

உறைபட்டிக் குளிரிலும் உழைப்பைச் சிந்தி உருளையும், கோஸ்மாயப் பிறக்க வைத்து சாக்கிலே கட்டி, ஊர்களுக்கனுப்பும் ஏழை விவசாயி ஏங்குவதென்னவோ ஒருவேளைச் சோற்றுக்கு. பட்டும், ஜரிகையும் பார்த்துப் பார்த்து, நிறமும், இழையும் நேர்பட நெய்து பட்டுச் சேலைகள் பல உருவாக்கும்பாட்டாளி மனைவி அணிவதோ கசங்கிய கந்தையே. அதிகம் விலை போகும் இப்பொருட்களை உண்டாக்குபவர்களின் கதியே இவ்வாறென்றால் ஒரு சிலர் மட்டுமே விலை கொடுத்து வாங்கும் கலைப் பொருட்களை வடிப்போரின் நிலை?

குறைந்த ஊதியம், மூலப் பொருட்களுக்கான பணத்தைக் கடனாக வாங்கி, அதன் வட்டி விஷமாக ஏறும் சுமை, வாங்குபவர்கள் இல்லாது சில சமயம் செய்த பொருட்கள் தேங்கிப் போகக் கூடிய அபாயம்.

இவற்றுக்கெல்லாம் மேலாகச் செய்யும் வேலை — மணிகள் கோர்த்தல், பிரம்பு, மூங்கில் இவற்றால் அழகிய பொருட்கள் படைத்தல் போன்ற எளிய வேலையாயிருந்து அதைச் செய்பவர்களும் படிப்பறிவில்லாத பாமரப் பெண்களாக இருந்துவிட்டால் இடைத் தரகர்களின் பாடு கொண்டாட்டம் தான்.

கச்சாப்பொருட்களைத்தாங்களே வாங்கிக் கொடுத்துவிட்டு, வேலைக்குக் கூலி என்ற பெயரில் மிகக் குறைந்த தொகையைக் கொடுத்துவிட்டுப் பின்பு அப்பொருட்களை மிக அதிக லாபத்துக்குக் கடைகளில் விற்று விடுவார்கள்.

இந்தப் பரிதாப நிலையை நீக்கி இப்பெண் கைவினைக் கலைஞர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கவும், நீடித்த வருவாய் கிடைக்கவும், தேவையான மூலப் பொருட்கள் தட்டாமல் வாங்கவும், இடைத் தரகர்களின்றி நேரடியாக இவர்கள் பொருட்களை விற்பனை செய்து இவர்களுக்குப் பொருளாதாரத் தன்னிறைவு தருவதற்காக அமைக்கப்பட்டது 'சீவா' (**Self Employed Women's Association** — சுய வேலை வாய்ப்புப் பெற்ற பெண்களின் அமைப்பு) இதன் அமைப்பாளர் திருமதி ஈலா பட் மெகசேசே பரிசு பெற்றவர். பார்லிமென்ட் மெம்பராகக் கௌரவிக்கப்பட்டவர். குஜராத் கைவினைக் கலைஞர்களின் கைவண்ணத்தில் உருவான கலைப் பொருட்கள் கண்காட்சிக்காகச் சமீபத்தில் சென்னை வந்திருந்தபோது இவர் 'சீவா' வில் கடந்த காலப் போராட்டங்களையும் நிகழ் காலச் சாதனைகளையும் சுவைபட நினைவு கூர்ந்தார்.

குஜராத்தில் நெசவுத் தொழிலில் இயந்திரங்களின் ஆதிக்கம் அதிகமாக, அதிகமாக, அவ்வாலைகளில் வேலை பார்த்த பெண்கள் வேலை இழந்தனர். பூ வேலை, **block-printing**, மணிகளைக் கோர்த்தல், பிரம்பு, மூங்கிலால் சிறுசிறு பொருட்களை உருவாக்குதல் இவை போன்ற சிறு தொழில்களில் இப்பெண்கள் ஈடுபட ஆரம்பித்தனர். இவர்களுடைய குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளுதல், இவர்களுக்காகத் தையல் வகுப்புகள் நடத்துதல் போன்ற சிறு அலுவல்களுக்காக 1972ல் 'சேவா' ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் அப்போதையப் பெண் பணியாளர்களின் பரிதாபமான நிலையைப்பார்த்த திருமதி ஈலா பட் 'சீவா' இயக்கம் ஒரு பெரும் பணியைத் தன் தோள்களில் ஏற்றுச் செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார். உதாரணமாக ஒரு நாளைக்குப் பத்துப், பனிரெண்டு மணி நேரம் வயலில் கடுமையாக உழைத்த ஒரு பெண் பெற்ற கூலி நான்கே ரூபாய்கள். இருபது படுக்கை விரிப்புகளில் வண்ண வடிவங்களை அச்சிட்ட ஒரு பெண் பெற்றதும் அதே நான்கு ரூபாய்கள். இந்த கூலிக்கு வேலை செய்ய மறுத்தால் உடனே அப்பெண்ணுக்குமூலப்பொருட்கள் மறுக்கப்பட்டன. இந்த நிலை மாற வேண்டுமென்றால் அப்பெண்களே, தங்களுக்காக ஓர் இயக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு அதனடியில் செயல்பட்டால்தான் மதிப்பும் மரியாதையும் கிடைக்குமென்பதை உணர்ந்தார்.

அதற்கு முதல்படியாக வட்டிக்குக் கடன் வாங்கும் பழக்கத்திலிருந்து விடுபட 'சீவா மகிளா வங்கி' 1973ல் துவக்கப்பட்டது. 'கையெழுத்துக் கூடப் போடத் தெரியாத பெண்களா வங்கியின் டைரக்டர்கள்' என்ற ஏளனச் சிரிப்புக்குப் பதிலாக இரவோடிரவாக அப்பெண்கள் அனைவரும் தம் கையெழுத்தைப் போடப் பழகினர். இன்று அது ஐயாயிரத்துக்கு மேற்பட்ட அங்கத்தினர்களுடன் செழித்து வளர்ந்திருக்கிறது. கணக்கு வைத்திருக்கும் பெண்களைத் தவிர வேறு யாரும் அவர்கள் கணவன்மார் உட்பட அக்

கணக்கிலிருந்து பணத்தைப் போடவோ, எடுக்கவோ முடியாது.

சிறு தொழில்களை முறையாகப் பயிற்றுவிக்கும் அமைப்பும் கூடவே தோன்றியது. முன்பே கொஞ்சம் தொழில் தெரிந்தவர்களும், தெரியாதவர்களும் இந்த அமைப்புக்களில் சேர்ந்து, மாதாமாதம் ஒரு சிறு தொகையையும் ஊதியமாகப் பெற்றுக் கொண்டு ஏதாவது ஒரு சிறு தொழிலை முறையாகக் கற்றுக் கொள்ளலாம்.

1982ல் லண்டனில் நடைபெற்ற இந்தியக் கலைவிழாவில் கலந்து கொண்டு இங்கிலாந்து ராணிக்கு 'ராதாகிருஷ்ண' உருவத்தைப் பூ வேலையால் செய்து பரிசளித்ததைப் பெருமையுடன் நினைவு கூர்கிறார் 'தேஜிபென்' என்ற எளிய பெண்மணி.




இவ்வாறு அன்று விதைக்கப்பட்ட முளை இன்று கிளைகிளையாகச் செழித்து வளர்ந்திருக்கிறது. ஒருநாளைக்கு முன்பு நான்கு ரூபாய்க்கு வேலை செய்து காலமெல்லாம் நொந்த பெண்கள் இன்று 20 ரூபாய் வரைச் சம்பாதிக்க வகை செய்கிறார்கள். மூஸ்லிம் பெண்களும், மலை ஜாதிப் பெண்களும், தாழ்த்தப்பட்டவர்களும் இங்கு கைவினைக் கலைஞர்களாகி ஒற்றுமையுடன் ஓங்கி வளர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தெருவில் குப்பை பொறுக்கும் பெண்களையும் விட்டு வைக்கவில்லை இவர்கள். அவர்களுக்காகவும் 'சுஜாதா' 'சௌந்தர்யா' என்று இரு அமைப்புகள் வைத்து அலுவலகங்களிலிருந்தெல்லாம் கழிவுக் காகிதங்கள் பொறுக்க ஏற்பாடு செய்து ஒரு நாள் நான்கு மணி நேரம் வேலை செய்தாலும் ஒரு மாதத்திற்கு 200 ரூபாய் ஊதியம் கிடைக்க வழி செய்திருக்கிறார்கள.

'சேவா' புரிந்துகொண்டிருக்கும் இச்சாதனைகளையெல்லாம்விட, இக்கண்காட்சியில் கலந்து கொண்ட, சிறு தொழில் வினைஞர்களின் கண்களில் சுடர் விட்ட தன்னம்பிக்கையே திருமதி பட்டின் மிகப் பெரிய சாதனையாகத் தோன்றுகிறது. தமிழ்நாட்டில் ஆங்காங்கே இயங்கும் பல மாதர் அமைப்புக்கள் இவர்களை வழிகாட்டியாகக் கொள்ளலாம். இவர்களைப் போல இமாலயச் சாதனைகளைப் புரியலாம்.

பேட்டி: **நிர்மலா சக்கரவர்த்தி**





நான் புதிய காமதேனு கூட்டுறவுச் சிறப்பங்காடியிலேயே எல்லாப் பொருட்களையும் வாங்குகிறேன். ஏன் தெரியுமா?

ஒன்றா...இரண்டா! பத்துக் காரணங்கள் உண்டு!

1. தரமான பொருட்கள் கிடைக்கும்.
2. பொருட்கள் ஒழுங்காகவும் கவர்ச்சியாகவும் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. பொருட்களை எளிதில் தேர்ந்தெடுக்கலாம்.
3. பொருட்கள் சரியான எடை, அளவில் உள்ளன. பணத்துக்கேற்ற பொருள் கிடைக்கும்.
4. நியாயமான விலை—பேரத்திற்கு இடமே இல்லை.
5. விரைவில் நவீன முறையில் பட்டியல் தயாரிக்கும் கருவிகள் உண்டு.
6. எப்போதும் தேவையான பொருட்கள் தயாராக இருப்பில் உண்டு.
7. புதிய காய் கனிகளும் கிடைக்கும்.
8. வாகனங்களை வசதியாக நிறுத்தலாம்.
9. சுவையான தின்பண்டங்கள் ஏராளம்.
10. காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி—ஆதரிக்க வேண்டியது; இது ஒருவருக்கொருவர் நன்மையடையும் முயற்சியும் கூட!

புதிய காமதேனு கூட்டுறவுச் சிறப்பங்காடி

'வானவில்' அருகில்—தேனாம்பேட்டை
சென்னை-18.

புதிய காமதேனு—ஞாயிறு விடுமுறை
பழைய காமதேனு—வெள்ளி விடுமுறை

பாலைப் பாதுகாப்பது எப்படி?



பாலை, கெட்டு விடாமல் வைத்து அடுத்த வேளைக்குப் பயன்படுத்துவது மிகக் கடினமானது. சுத்தமான, பவுடர் கலக்கப் படாத பாலாக இருந்தாலும் கெடாமல் வைத் திருப்பது பிரச்னையே. சுத்தமான, கலப் படம் செய்யப்படாத பால் கிடைப்பது அரி தாகிவிட்ட இக்காலத்தில் பிரச்னையின் தீவி ரம் அதிகரித்துள்ளது.

ஃபிரிட்ஜில் பால் வைத்தால் கெடாமல் இருக்கிறது என்பது உண்மை. ஃபிரிட்ஜில் வைத்தாலும், குறிப்பிட்ட சில மணி நேரங் களுக்குமேல் வைக்கப்பட்ட பாலைப் பயன் படுத்தக் கூடாது.

கோடைக்காலத்தில், காலை, மாலை இரு வேளைகளிலும், பால் வாங்குவது நல்லது. கூடிய வரையில், பழைய பால், புதிய பால் இரண்டையும் கலக்காமல் இருப்பது நல்லது. உடனே பயன்படுத்துவது என்றால் கலக்க லாம்.

பாலைக் கெடாமல் வைத்திருக்க வேண்டு மென்றால், பால் வைக்கப்படும் பாத்திரம் நன்றாகச் சுத்தம் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். சிலர், பால்காரன் வாசற்கத வைத் தட்டும் வரை, பால் பாத்திரத்தைத் தயார் செய்து வைப்பதில்லை. கதவைத் தட் டும் போதுதான், அவசரம், அவசரமாகப் பால் வாங்க வேண்டிய பாத்திரத்தைச் சுத்தம் (அரைகுறையாக) செய்து பால் வாங்கி விடு கிறார்கள். இன்னும் சிலர் பால் வைக்கும் பாத்திரத்தைப் பாலுக்கு மட்டும் உபயோகிப் பதில்லை. பால் மீதி ஆனால் அதே பாத்திரத் தில் தயிர் உறை ஊற்றிவிடுவதுமுண்டு. இம் மாதிரியான காரணங்களில், பால் விரைவில் கெடுவதற்கு வாய்ப்புள்ளது. பால் பாத்தி ரத்தை நன்றாகத் தேய்த்துக் கழுவிச் சுத்தம் செய்த பிறகு பாத்திரத்தில் நிறைய நீர் ஊற்றிக் கொதிக்க விடுவது நல்லது. அல்லது, பாத்திரத்தை நன்றாகக் கழுவி நல்ல வெயிலில் வைத்து மறுபடியும் கழுவு வது நல்லது.

பால் பாத்திரத்தைக் கழுவிவிட்டுத் துணி யால் துடைக்கக் கூடாது. ஏனென்றால் துணி சுத்தமாக இல்லாவிட்டால் பாத்திரத்துக் குள் கிருமிகள் உற்பத்தி ஆகலாம். கைவிட்டுச் சரியாகக் கழுவ முடியாத பாத் திரத்திலோ அல்லது சீசாவிலோ, பாலை வைக்கக் கூடாது. பால் செம்பு அல்லது சீசாவைக் கழுவும்போது அவைகளின் உள் பாகத்தில் அடியில் பால் ஒட்டிக் கொள்ளா மல் இருக்கிறதா என்று கவனிப்பது நல் லது.

பாலை, வாங்கியவுடன் காய்ச்சி விடுவது நல்லது. உபயோகிக்க எடுக்கும் போது மறுபடியும் காய்ச்சி உபயோகிப்பது நல் லது. பாலைக் காய்ச்சிய உடன் பயன் படுத்தப் போவதில்லை என்றால், ஃபிரிட்ஜில் வைப்பதற்கு முன்னால் நன்றாகக் குளிரச் செய்து பிறகு வைக்க வேண்டும். தெர் மோஸ் ஃபிளாஸ்க்கிலும் வைக்கலாம். ஃபிரிட்ஜ் தெர்மோஸ் ஃபிளாஸ்க் இல்லா விட்டாலும்,

பாலைப் பாதுகாக்க இதோ ஓர் எளிய முறை: ஒரு பாத்திரத்தில் நீர் நிரப்பி, பால் வைத்திருக்கும் பாத்திரத்தை அதில் வைக்க வும். பால் பாத்திரத்தை ஒரு சுத்தமான துணியைப் போட்டு மூடவும். இத்துணியின் நுனி, பாத்திரத்திலுள்ள நீரைத் தொட்டுக் கொண்டிருக்க வேண்டும். பால் மிகச் சூடாக இருந்தால், பாத்திரத்திலுள்ள நீரை அடிக்கடி மாற்ற வேண்டும்.

பால் வைத்திருக்கும் பாத்திரத்தை எப் போதும் மூடியே வைக்க வேண்டும். சிலர் பால் வாங்கியவுடன், காய்ச்சும் வரை, பால் பாத்திரத்தைத் திறந்தே வைத்திருப்பார்கள். காய்ச்சாத பால், வெகு வேகமாகக் கிருமி

கொசுவலையில் ஓட்டை விழுந்து (கிழிந்து) விட்டால் அதன் மீது ஒரு ஸ்டிக்கரை ஒட்டி விடுங்கள்.

— பாலா.

களை ஈர்க்கும் சக்தியுடையது. அதிகம் வெப்ப காலமாக இருந்தால், பாலில் ஒரு சிட்டிகை, சோடா பை கார்பனேட் போட்டுக் காய்ச்சுவது பாலைக் கெடாமல் பாது காக்கும்.

ஒருவேளை நம் கவனக்குறைவால் பால் புளித்துப் போய் விட்டாலும், பாலைக் கொட்டிவிட வேண்டாம். அடுப்பில் வைத்து பாலில் உள்ள நீர் வற்றும் வரை நன்றுகக் கிளறவும். பிறகு சர்க்கரை கலந்து ஒரு தடவை கிளறி இறக்கவும். இது மிகச் சுவை யான தின்பண்டம்.

பால் திரிந்து விடாமல், கொஞ்சம் அதிக நேரம் தங்கிவிட்ட பாலாக இருந்தால், அதைக் காய்ச்சி அதில் எலுமிச்சை ரசம் பிழியவும்., பிறகு இப்பாலை ஒரு துணியில் சிறிய மூட்டையாகக் கட்டித் தொங்கவிட்டால், அதிலுள்ள நீரெல்லாம் வடிந்துவிடும். இத்துணி மூட்டையைத் தொங்க விடும் போது அடியில் ஒரு பாத்திரத்தை வைத்து வடியும் நீரைப் பிடித்து, இந்நீரை, பருப்பு வேக வைப்பதற்கோ அல்லது காய்கறி வேக வைப்பதற்கோ பயன்படுத்தலாம்.

நீர் வடிந்த பிறகு, துணியில் கட்டியாகத் தங்குவது பால் கட்டி. இதைத் துணியிலிருந்து எடுத்து இரண்டு தட்டையான தட்டுக்கள் இடையில் வைத்து அதன்மேல் பாரமான எதையாவது வைக்கவும். பிறகு அதை எடுத்துப் பார்த்தால் பால் கட்டி, தட்டின் மேல் பரவலாக இருக்கும். அதை, வில்லை கள் போட்டு, அந்த வில்லைகளைக் காய்கறியோடு சேர்த்துப் பொறியல் செய்யலாம். மசாலாக் குழம்பிலும் சேர்க்கலாம். வாணலியில், கடுகு வெங்காயம், பச்சை மிளகாய் தாளித்துப் பிறகு அதோடு பால் வில்லைகளைச் சேர்த்துத் தேவையான உப்பு சேர்த்து சிற்றுண்டி தயாரிக்கலாம். இது சிறு பிள்ளைகளுக்கு மிகவும் பிடித்த பண்டமாகும்.

இன்னொரு முறை: நிதானமாக, மெதுவாக எரியும் அடுப்பில் பாலை வைத்து அது கெட்டியாகும் வரை கிளறிக் கொண்டே இருக்க வேண்டும். கெட்டியான பிறகு அதில் சர்க்கரை சேர்த்துக் கிளறவும். பிரெட் துண்டுகள் இருந்தால், இவைகளையும் சேர்த்துக் கிளறி தின்பண்டம் தயாரிக்கலாம்.

சில சமயங்களில் எதிர்பாராத விதமாக பால் மீந்து வருவதுண்டு. பாலை அதிக நேரம் வைத்துக் கொள்ள முடியாததால், அதைத் தயிராக மாற்றிவிடுவது நல்லது. வெப்பமான காலங்களில், பாலில் உறை ஊற்ற மிகச் சிறிய அளவு தயிரே போதுமானது. உறை ஊற்ற எடுத்துக் கொள்ளப்படும் தயிரோ, மோரோ பழையதாக இருக்கக் கூடாது. பழையதாக இருந்தால் தயிர் ருசியாக இருக்காது.

பால் மீந்துவிட்டால், ரொட்டி தயாரிக்க மாவு பிசையும்போது, தண்ணீருக்குப் பதிலாகப் பாலைப் பயன்படுத்தலாம். இந்த முறையில் தயாரிக்கப்பட்ட சப்பாத்தி, பூரி, சமோசா போன்றவை மிகவும் ருசியாக இருக்கும்.

— ராஜி



'முடி' காப்போம்!!



நாளொன்றுக்கு ஆரோக்கியமான நிலையிலுள்ள நபர் இழக்கும் தலைமுடி 30 லிருந்து 50 வரை. ஒவ்வொரு நாளும் நமது முடி 0.2 லிருந்து 0.5 மில்லிமீட்டர் வளர்கிறதாக வல்லுநர்களின் கணக்கு.

ஆரோக்கியமாக முடி வளர்க்க நாம் என்ன செய்யலாம்? தினசரி ஷாம்பு உபயோகிக்கக் கூடாது. வாரம் ஒரு முறை போதும். தை பிறந்தால் எது பிறக்குமோ என்னமோ பேன் நிச்சயம் பிறக்கும் வியர்வையால். தலையைக் குழந்தைகள் இறுக்கமாகக் கட்டி விடச் சொல்லுவார்கள். நாமும் குழந்தைகளின் பேச்சைக் கேட்டுத் தேர் இழுக்கும் பலம் கையில் வைத்து அழுத்திப் பின்னுவோம். பின்னல் விறைத்து நிற்கும்.

மயிர்க் காம்புகள் அறுந்து மறுநாள் சீப்பில் முடிகள் அத்தனையும் வரும். இறுக்கத்தின் புழுக்கம்–பேன் தானகவே புழுக்கும். பேனுக்கு வேண்டிய அழுக்கு. வியர்வையில் உண்டாகிவிடும்.

பேன் இருந்தாலும் முடிக்கு ஆபத்துத் தான். குழந்தைகள் தன் கை போதாமல் அடுத்தவர் கைகளை இழுத்துச் சொறிந்து கொள்ளும்,பாவம். சுலபமான முறைகளால் பேனை ஓடஓட விரட்டலாம். நல்லெண்ணெய் பேனுக்கு விரோதி. எண்ணெய் தேய்க்கும் போது தடவி வாருங்கள். சாராயம் குடித்த மாதிரி பேன்கள் சீப்புகளில் வரும்.

துளசிச்சாறு ரொம்பவும் நல்லது. காரத்தில் பேன்கள் விஷம் சாப்பிட்ட மாதிரி ஆகிவிடும். ஒன்றுமே வேண்டாம்! துளசியை மூட்டைக் கட்டி வெள்ளைத் துணியில் கட்டித் தலையணை யாக வைத்துக் கொண்டு பாருங்கள். காரத்தில் பேன் இறங்கும்.

இவையெல்லாம் பேனைக் கொல்லவே தவிர பேன் வராமல் தடுக்க அல்ல! தலைமயிருக்கு ஆபத்து இராது. முடியைச் சுத்தமாக, காற்றோட்டமாக வைத்திருத்தல் சாலச் சிறந்தது. பேன் வருமுன் தடை செய்ய இதை விடச் சிறந்த வழி இல்லை. பெரிய பெண்கள் தலையில் கூட சில சமயம் உற்று நோக்கினல் "ஓடு பேன் ஓட ஒரு பேன் வர" என்றுவரிசையாகவரும். மூக்குப்பொடியைப் படிகாரத்தில் கலந்து தடவலாம். அபாயமில்லாத வழி.

தலை அலசும்போது மென்னீரில் (ஸாஃப்ட் வாட்டர்) அலச வேண்டும். சில வீடுகளில் கிணற்று நீர்தான் கிடைக்கும். என்ன செய்யலாம்? உப்புநீரில், ரொட்டி சோடாவைக் கலந்தால் மென்னீராகும்.

தலைமுடி அலசிய பிறகு ஈரம் போக உலர விடுங்கள். துண்டினல் துடைத்துத் தட்டி விரல்களால் நீவி உலர விடுங்கள். கொஞ்சம் சாம்பிராணி போடுங்கள். இது முடி உதிர்வதைத் தடுக்கும். ஈரத்தலையினல் நரம்பு மண்டலம் பாதிக்கப் படாது. சிலர் ஈரத்துண்டைத் தலையில் கட்டிக் கொண்டே காரியம் செய்வார்கள். இது தவறு. ஈரம் தலையில் தங்குவது முடிக்கு மட்டுமல்ல நரம்புகளுக்கும் வலு அல்ல. கொஞ்ச நாளில் கழுத்து வலி வரும்.

சாதாரண ஜலதோஷம், உள்ளுறுப்புக்களில் நோய்கள், ஜீரண மண்டல நோய் இவை கூட தலைமயிர் உதிரக் காரணமாகும். எனவே கவனமாக இவை அண்டாமல் காப்பது தலையாய கடமை,முடிக்கு!

இப்போதெல்லாம் குழந்தைகள் நிறையப் படிக்கிறார்கள். உடல் சூடு அடைகிறது. இதுவும் தலைமயிர் உதிரக் காரணம். இதற்குச் சின்ன எளிய வழி. விளக்கெண்ணெய் (வாசமற்றது, மருந்துக் கடைகளில் கிடைக்கும்.) படுக்கப் போகுமுன் ஒரு ஸ்பூன் சூடான அரைகப் பாலில் விட்டுக் குடிக்கச் சொல்லுங்கள். சிறந்த வைத்தியம் பாட்டி வைத்தியம். அனுபவ முறையில் இதைப் போல் எதுவுமில்லை சூடு தணிக்க என ஆணித்தரமாகச் சொல்லலாம். வாரம் இரு முறை போதும்.

பேயன் பழத்தை வாங்கிச் சிறு துண்டு

களாக (வட்டமாக நறுக்கவும்) சீனக் கற்கண்டு. ஒரு டஜனுக்கு நூறு கிராம். லவங்கம், ஜாதிக்காய், ஏலக்காய் இவற்றைத் தட்டி பேயன் பழத் துண்டில் போடவும். விளக்கெண்ணெய்ப் பழம் முழுகும் வரை விடவும். தினம் இரண்டு ஸ்பூன் சாப்பிடுங்கள். தலைமயிருக்கு நல்லது. உள்வெப்பம் நிச்சயம் தணியும். சிறந்த அனுபவ முறை. சிறந்த மலமிளக்கியும் கூட. தற்போது டாக்டர்கள் கூற்று எப்படியோ. ஆனால் இம்முறை தலைமயிர் கறுத்து நீண்டு, கொட்டாமல் இருக்க வழி செய்கிறது.

முக்கியமாக ஆரோக்கியமான வாழ்க்கை முடி உதிர்வதைத் தடுக்கும். இக்காலத்தில் பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை அனைவருக்கும் அனாவசியக் கவலை, இக்காலத்தில், 'டென்ஷன்' அதிகம். 'மார்க்' வருமா? எந்தக் காலேஜில் இடம் கிடைக்கும் என்பது. போன்ற பிரச்னைகளில் திருப்பதி போகாமலே தலை மொட்டை ஆகி விடுகிறது. இவையெல்லாம் இல்லாமல் மனத்தை விசாலமாக வைக்க வேண்டும்.

அடுத்தது - கடையில் வாங்கும் சிகைக்காய்ப் பொட்டலங்கள். கால் வாசி பவுடரில் முக்கால்வாசி விபூதிக் கலப்பு. விபூதி அல்லது சாம்பல் உதவியினால் மயிர்க்கால்கள் வேரற்று விடும். எனவே சோம்பல் பாராமல் சிகைக்காய் வாங்கி, பயிறு (தோல்), வெந்தயம், புழுங்கல் அரிசி, கொஞ்சம் கலந்து அரைத்து வைத்துக் கொண்டால் தலைமயிர் 'கம்'மென்ற மணமாகவும் இருக்கும். பேன் வர அஞ்சும். வாரம் ஒருமுறை ஷாம்புவுக்குப் பதில் சிகைக்காய் கொஞ்சம் எடுத்து வெந்நீரில் வெந்தயத்துடன் ஊற விட்டுக் கல்லுரலில் அரைத்தால் வழவழ வென்று வரும். தலையில் தேய்த்தால் சுகமாகவும் இருக்கும். இன்னும் சுலபமான முறை செம்பருத்திப் பூவை வெந்நீரில் ஊற விட்டுக் கசக்கித் தலையில் தேய்த்துப் பாருங்கள். சுகம் தெரியும்.

தேங்காய் எண்ணெயில், மருதோன்றி இலை, கீழாநெல்லி, நெல்லிமுள்ளி மூன்றையும் அரைத்து வடைகளாகத் தட்டி நிழலில் உலர்த்திப் போடுங்கள். கண்ணுக்கும் குளிர்ச்சி. முடியும் உதிராமல் இருக்கும்.

அடுத்தது தலை வறட்சி. பொடுகு என்று இதைச் சொல்வோம். தோல் வறண்டு சீப்போடு வெள்ளையாக வரும். இதுவும் முடி உதிரக் காரணம். வெள்ளை மிளகு, கசகசா இவற்றைக் கொஞ்சம் ஊற வைத்து நைசாக அரைத்துப் பசும்பாலில் கலந்து தலையில் தேய்த்து அரை மணி நேரம் ஊறுங்கள்.

கண்களில் 'ஜில்'லென்று உணர்ச்சி தெரியும். பொடுகு நாளடைவில் மறையும். ஊறிய பிறகு தலையை நீரினால் அலசவும்.

சில பெண்கள் ஒரு தலைமயிர் நரைக்க ஆரம்பித்த உடனே 'டை' போட ஆரம்பிப்பார்கள். அது கடைசியில் பாதி தலைமயிர் தேங்காய் நார் கலர், பாதி வெளுப்பு, பாதி கறுப்பு என்று 'த்ரீ இன் ஒன்' கலராக மாறுகிறது. ஏனெனில் சிலருக்கு டை ஒத்துப் போவதில்லை. சிலருக்குத் தொடர்ந்து செய்ய நேரமே இருப்பதில்லை. அதைவிட நரைக்க விட்டு விட்டால் ஒரே வெளுப்பாகக் கொஞ்சம் நன்றாகவாவது இருக்கும்.

சிலர் தலைமுடி செம்பட்டையாக இருக்கும். இதற்கு மருதோன்றி இலையை வெந்தயத்துடன் அரைத்து நல்லெண்ணெயோடு காய்ச்சுங்கள். கசண்டு தங்கியபின் எடுத்து வைத்துத் தடவினால் சிறந்த பலன் உண்டு. நல்லெண்ணெய் தலைமயிர் கறுப்பு உண்டாக்கும். தேங்காய் எண்ணெய் முடி வளர்க்க உதவும். விளக்கெண்ணெய் உச்சந்தலை சூட்டை இறக்கும். மூன்று எண்ணெய்களையும் கலந்து, கண்விழித்துப் பல் துலக்கியதும் முகம் திருத்தும் முன் வகிட்டின் நேர் தடவி அழுத்தமாக ஆள்காட்டி விரலால் தடவுங்கள். பலன் அனுபவத்தில் புரியும்.

பிறக்கும் போதே தலைமயிரும் பிறக்கிறது. நம்மோடு கடைசி வரை இருக்கவே முடியும் நினைக்கிறது. அதை நாம் அலட்சியம் செய்யாமல் ஆரோக்கியமாகப் பாதுகாக்க வேண்டாமா? அன்றாடம் தலையை வியர்வைக் குளத்தில் மூழ்கடிக்காமல் காற்றோட்டமாக வையுங்கள். மின்விசிறிக் காற்றும்; தலைமயிர் கொட்டக் காரணம். கூடிய வரை சுற்றுப்புற, மர நிழல், சுகாதாரமான காற்றினால் தலைமுடிக்கு வலு கொடுங்கள்.

சித்ரா

பிள்ளையார் சதுர்த்திக் கொழுக்கட்டை மாவு கிளறத் தெரியாதா? பச்சரிசியை நன்றாக ஊற வைத்து வெண்ணெய் போல, நீர்க்க அரைத்துக் கொள்ளவும். ஒரு ஸ்பூன் எண்ணெய் விட்டு, கிளறினால் மாவு நன்றாக முலை ய வரும்.

— காயத்ரி.

வெல்லப் புட்டு, களி, உக்காரை போன்றவை உதிரியாக இல்லாமல், சற்று சேர்ந்தாற்போல் (சிறு கட்டிகளாக) வந்துவிட்டால், மிக்ஸியில் ஆறிய பிறகு போட்டுச் சுற்றினால் உதிரியாகிவிடும்.

கொழுக்கட்டை மாவு கட்டி தட்டிப் போனாலும் சற்று ஆறிய பிறகு மிக்ஸியில் சுற்றினால் வெண்ணையாகச் சேர்ந்து வரும்.

— காயத்ரி.



இவர்கள் விமர்சிக்கிறார்கள்



('86 — ஆம் ஆண்டு மங்கையர் மலரின் பன்னிரண்டு இதழ்களையும் இங்கே விமரிசிப்பவர்கள் —): லேனா தமிழ்வாணன் — பத்திரிகையாளர், எஸ். லலிதா — மானேஜர், கலா — மாணவி, சீதாலக்ஷ்மி — அலுவலகத்தில் பணி புரிபவர், லலிதா தியாகராஜன் — குடும்பத் தலைவி, ராஜம் — குடும்பத் தலைவி.

லேனா தமிழ்வாணன்: பொதுவா சினிமாக்குன்னு எடுத்துக்கிட்டா அறுபத்தேழு பத்திரிகைகள் இருக்கு. சிலது வருது. சிலது வந்து நின்னு போகுது. ஆனா பெண்கள் பத்திரிகை ரொம்பக் குறைவா இருக்கு. மத்த பத்திரிகைகள்ல பெண்களை அட்டையில் போடவும், வியாபார ரீதியாகவும்தான் பயன்படுத்திக்கிறாங்க. பெண்களுக்குன்னு வர்ற பத்திரிகைகளிலே சிறந்தது மங்கையர் மலர்னுதான் நான் நினைக்கிறேன்.

கலா: ஒரு பொண்ணு கல்யாணமாகி புகுந்த வீட்டிற்குப் போனால் சந்தோஷமாக இருக்கிறது யார் கையில இருக்குன்னு மூணு பேரைக் கேட்டிருக்கிற போது மூணு பேருமே, 'நாமபொறுமையா' இருக்கணும்னு சொல்லியிருக்காங்க. இது ஒவ்வொருத்தருடைய வாழ்க்கை நிலைகளைப் பொறுத்தது. பொறுமையா இருந்தும் வாழ்க்கையை ஜெயிக்க முடியாமப் போனவங்க எத்தனை பேர் இல்லை?

லலிதா: இந்த மாதிரி பலதரப்பட்டவங்களுடைய கருத்துக்களைப் போடும் போது பொருளாதார நிலையில கீழ்மட்டத்துல இருக்கறவங்க கிட்டேயும் கேட்கலாம். கறிகாய்க்காரி, பால் காரி இப்படி...

கலா: அந்த மாதிரி போட்டிருக்காங்க. ஆப்பம் சுடற ஆயாவையும், பாக்கெட் பால் கொண்டு வந்து கொடுக்கும் பெண்ணையும் கூட பேட்டி எடுத்திருக்காங்க.

ராஜம்: சில தொடர்கதைகள் ரொம்ப நல்லாயிருக்கு.

லலிதா: சில சின்னச் சின்ன டிப்ஸ் ரொம்ப நல்லா இருக்கு. ஃப்ரிட்ஜை எப்படி

வச்சுக்கறது. கறிகாய் கெடாமல் எப்படி வச்சுக்கறதுங்கற மாதிரி சின்ன விஷயங்கள் ரொம்ப உபயோகமா இருக்கு. நான் இதப் பார்த்து நிறைய தெரிஞ்சுக்கறேன்.

கலா: ''ஆனா சமையல் குறிப்புக்கள்ல வர்ற பொருட்கள் ரொம்ப காஸ்ட்லியா இருக்கு. நடுத்தரக் குடும்பத்துப் பெண்கள் உபயோகிக்கிற மாதிரி இருந்தா...?''

லலிதா: (இடைமறித்து) ''இல்லே, இல்லே. ரொம்ப காஸ்ட்லி ஐட்டம் போட்டா மாதிரியே தெரியலே. நான் இதுல வந்த பல சமையல் குறிப்புக்களைச் செய்திருக்கேன். எல்லாம் வாங்கக் கூடிய லெவல்லதான்



இருக்கு. என் பசங்க கூட, 'இது என்ன மங்கையர் மலர் ஐட்டமா?' ன்னு கேட்டுச் சாப்பிடுவாங்க...

ராஜம்: எங்கள் ஊர் உற்சவம்னு ஒண்ணு போட்டுக்கிட்டு இருந்தாங்க. அதை ஏனோ இப்ப நிறுத்திட்டாங்க. கோயிலைப் பத்தி நிறைய தெரிஞ்சுக்க முடிஞ்சுது. முதுமை ஒரு சுமையல்லன்னு ஒரு கட்டுரை படிச்சேன். வயசானவங்களுக்கு ரொம்ப இதமான விஷயம்.

கலா: சமையலறைக் குறிப்புகள், சில ரொம்ப நல்லா இருக்கு.

லலிதா: ஆமாம். மருதாணித் தைலம் செய்யறது கூட நான் அதைப் பார்த்துத்தான் செய்தேன்.

ராஜம்: காஸ் ஸிலிண்டர் பத்தி ஒரு விஷயம் ரொம்ப உபயோகமா இருந்தது.

லேனா தமிழ்வாணன்: இந்த 'பிட்' விஷயத்தையெல்லாம் தனியா ஒரு 'காலமா' போடலாம். அப்பதான் கிழிச்சு பைண்ட் பண்ண வசதியா இருக்கும். பொதுவா மங்கையர் மலர் பத்திரிகையெல்லாம் வெளியே விசைக்கு வரதில்லே. எல்லோருமே அப்படியே பத்திரமா வச்சுக்கிறவங்கதான். இருந்தாலும் சில விஷயங்கள் தனியா எடுத்து வச்சுக்கற மாதிரி இருந்தா சௌகரியம்தான்.

லலிதா தியாகராஜன்: இந்தப் பத்திரிகைய மாசம் பூரா வச்சுப் படிச்சுக்கிட்டேதான் இருக்கேன்.

லேனா: ''ஆமாம். எங்க வீட்லேயும் அதே கதைதான். நான் கிட்டத்தட்ட ஐநூறு ரூபாய்க்குப் புத்தகங்கள் வாங்கறேன். எந்தப் புத்தகமானாலும் புது மெருகு கலையாம நான் தான் மொதல்ல படிப்பேன். ஆனா மங்கையர் மலர் மட்டும் எனக்கு மாதக் கடைசியில தான் கிடைக்கும். எங்கம்மாவும், மலைவியும் மாதம் முழுக்க வச்சுப் படிச்சிட்டு கடைசியில தான் கொடுப்பாங்க.

கலா: எங்களை அடக்கி வைக்காதீர்கள்னு 'டீன் ஏஜ்' பசங்க சொல்ற மாதிரி ஒரு கட்டுரை நல்லா இருந்தது. இதைப் படிக்கிற எத்தனையோ பெற்றோர்கள் பசங்களை எப்படி நடத்தறதுன்னு தெரிஞ்சுப்பாங்க.

சீதாலக்ஷ்மி: இதை. இளைஞர்கள் இப்படி இப்படி இருக்கணும்னு ஒரு பக்க விஷயமாகவே வந்தா நல்லா இருக்கும்.

லேனா: பொதுவாகவே இளைஞர்கள் எவ்வளவு பெரியவங்க எவ்வளவு வேண்டியவங்களா இருந்தாலும் அறிவுரை சொன்னா டக்குனு எடுத்துக்க மாட்டாங்க. ஆனா அதுவே புத்தகத்திலே போட்டால் படிச்சுட்டு மனசுலே உணர்றாங்க. அச்சுல ஏற்ற விஷயங்களுக்கே எப்பவும் மதிப்பு ஜாஸ்தி. அதனால இப்படிப்பட்ட நுணுக்கமான உணர்வு சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கு

மங்கையர் மலர் ஒரு நல்ல தோழியா இருக்குன்னே சொல்லலாம்.

கலா: இளம் பெண்களை எடுத்துக்கிட்டா அங்க போகாதே இங்கே போகாதே, அவளோட பேசாதேன்னு ஏகப்பட்ட கட்டுப்பாடு. இதனால அவ மனசு எத்தனை வருத்தப் படுதுன்னு எழுதணும்.

லேனா: அதாவது பெரியவர்களின் அதிகமான கட்டுப்பாட்டினால் சிறிய உள்ளங்கள் சிறுத்துப் போகின்றனங்கறதைப் பெரியவர்கள் உணர்கிறாற்போல எழுதணுங்க நீங்க.

சீதாலக்ஷ்மி: அதைத்தான் குழந்தைகளின் பிரச்னைகள் சிறப்பிதழ்ல முழுக்க முழுக்க 'டீல்' பண்ணியிருக்காங்க. எனக்குத் தெரிஞ்சு பல பேர் அதைப் படிச்சுட்டு மனசுல உணர்ந்திருக்காங்க.

ராஜம்: ''ஏன், நானே என் குழந்தைகளை அதிகமாக் கண்டிக்கறதை விட்டுட்டேன். அவங்களையும் நம்ப தோழனா, தோழியா 'ட்ரீட்' பண்ணி வழிக்குக் கொண்டு வரணும்னு புரிஞ்சுக்கிட்டேன்...''

லேனா: இதை 15 நாளைக்கு ஒருமுறை கொண்டு வர்றதைப் பத்தி அவங்க யோசிக்கலாம். எப்படியும் ரொம்ப மதிப்பு உள்ள பத்திரிகை.

எஸ். லலிதா: அரசியல் விஷயங்களையும் தொகுத்து ஒரு பக்கம் 2 பக்கம்னு எழுதலாம். பெண்கள் அதிகம் பேப்பர் படிப்பதில்லை. இதன் மூலம் நாட்டு நடப்பைத் தெரிஞ்சுப்பாங்க இல்லையா?

கலா: 'சொல்லுங்கள் பார்க்கலாம்' பகுதியே அதுதான். போன மாசம் நடந்த அரசியல், மத, விளையாட்டு விஷயங்களைத் தர்றாங்க!

சீதாலக்ஷ்மி: சினிமா விஷயங்கள் நிறைய இல்லை. போட்டால் ரேவதி பத்தி போட்ட மாதிரி நிறைய பக்கங்கள் போட்டுடறாங்க.

ராஜம்: இந்தப் பத்திரிகைக்கு சினிமாவே வேண்டாம்.

லேனா: நான் நினைக்கறது என்னன்னா, சாதாரணமா எல்லோருமே விரும்பறது அரசியலும் சினிமாவும்தான். இது இரண்டுமே இப்படி ஒதுக்கப்பட வேண்டாம். இன்னும் கொஞ்சம் சினிமா விஷயங்கள் முடிந்தால் செய்யலாம்.

சீதாலக்ஷ்மி: கதையெல்லாம் — ரொம்பப் பெண்கள்னா கஷ்டப்படறாங்க, கண்ணீர் வடிக்கறாங்கனு மாதிரியே வருது. சில பெண்கள் நிஜ வாழ்க்கையில ரொம்பப்

வேப்பங் கட்டி!

இப்படி என்றால் என்ன தெரியுமா? வேப்பிலை வைத்து அரைப்ப கசக்கும். வேப்பிலை வைத்து அரைப்ப தற்கா? என யோசிக்க வேண்டாம். இதை உணவுக்குத் தயிர் சாதத்துக்கு ஊறுகாய் போல் தொட்டுக் கொண்டு சாப்பிட்டால் ஏக ருசியாக இருக்கும். பசியின்மை, ஜீரணக் கோளாறு, ஆறு மாத அன்னத்துவேஷம் அனைத்தும் போக்கும் தன்மை உள்ளது.


தேவையான பொருட்கள்:

இளம் நாரத்தை இலை — நார், காம்பு நீக்கியது — 1 கைப்பிடி அளவு.
இளம் எலுமிச்சை இலை — நார், காம்பு நீக்கியது ஒரு கைப்பிடி அளவு.
மிளகாய் வற்றல் — 1 கைப்பிடி அளவு.
ஓமம் — ஒரு டேபிள் ஸ்பூன்.
பெருங்காயம் — ஒரு டீஸ்பூன் பொடித்தது.
உப்பு — தேவையான அளவு.

செய்முறை:

முதலில் மிளகாய் வற்றல், ஓமம், பெருங்காயம், உப்பு இவற்றை நன்கு மசிய இடிக்கவும். அதனுடன் நாரத்தை இலை, எலுமிச்சம் இலை இவற்றையும் போட்டு நன்கு மசிய இடிக்கவும். அதன்பின் அதை எடுத்து எலுமிச்சம் பழம் சைஸ் உருட்டி உருட்டி ஒரு பாட்டிலில் போட்டு வைத்துக்கொண்டு தேவையான போது சாப்பிட்டு வர மிக ருசியாக இருக்கும். இரண்டு மாதங்கள் வரை கெடாது. உருட்டி வைப்பதால் ஈரத்தன்மை இருக்கும். அதனால் புதிதாக இருக்கும்.

— லக்ஷ்மி துரைஸ்வாமி.



People around the world are using stainless steol pressure cookers,

... because a stainless steel pressure cooker

- has the shine and strength which no other material has,
- is longer lasting and easy to maintain
- cooks faster and saves upto 30% fuel
- can withstand very high pressures and thus is totally safe.

Stainless Steel is the most hygienic metal used for kitchen ware.

In India, Butterfly offers a carefull blend of International and traditional Indian design to suit the need of every Indian housewife. --And has the backing of 40 years expertise in the manufacture of quality stainless steel kitchenware.

Butterfly

STAINLESS STEEL PRESSURE COOKER

Go for the International trend Go for Butterfly....



Available in 3, 5, 6, 7.5, 10 & 12 lts capacity.

Save on the cost of Lid
Buy Pressure Cooker and Pan together

MANUFACTURED BY :
GANGADHARAM ENTERPRISES
147, Karapakkam Village Old Mahabalipuram Road, Madras-600 096. Ph: 552587, 555127, 412091.

MATRIX GE 86/1

பொல்லாதவங்களா, இமிராவெல்லாம் இருக்காங்க. அந்த மாதிரி கதைங்க வந்தா ஒருக்கால் அவங்க படிச்சுத் திருந்தலாம் இல்லையா?

லேனா: இவங்க கருத்தை நானும் ஒத்துக்கறேன். பெண்கள் கஷ்டப்படறதையே எப்பவும் எழுதினால் அதன் மூலம் ஆண்கள் எல்லோருமே மோசமானவர்கன்னு ஸ்தாபிக்கறீங்க. அது எனக்கு உடன்பாடு இல்லை.

எஸ். லலிதா: எல்லாக் கதையும் அப்படின்னு சொல்ல முடியாது. ''துன்பம் நேர்கையில்''ங்கற கதை வேற மாதிரிதான் இருக்கு.

லேனா: இதுல எனக்குப் பிடிச்ச இன்னொரு விஷயம் திறமையுள்ளவர்கள் யாரா இருந்தாலும் வெளிச்சம் போட்டுக் காட்டறாங்க. சாதாரணமா மத்த பத்திரிகைகள்ல 'பளிச்' னு இருக்கற இளம் பெண்களைத்தான் பேட்டி எடுப்பாங்க. ஆனா அந்த மாதிரி அழகு, வயசு இந்த வித்தியாசங்களை இவர்கள் பார்க்கறது இல்லை. எங்கேயோ வெளியூர்ல இருக்கிற கோலம் போடற ஒரு பெண்ணைப் பற்றிக் கூடச் செய்தி வெளியிட்டிருந்தாங்க.

லலிதா தியாகராஜன்: டிசம்பர் சீசன்ல சங்கீத விமர்சனமே செய்யறதில்லையே, ஏன்?

லேனா: பெண்கள் இசையோட அதிகம் சம்பந்தப்பட்டவங்க. அதப் பத்திப் போடக் காணோம்.

லலிதா தியாகராஜன்: சில மருத்துவக் குறிப்புகள் ரொம்ப உபயோகமா இருக்கு. டாக்டரைக் கலந்து ஆலோசிச்சு நிறைய போடறாங்க.

லேனா: ஒருசமயம் இப்படித்தான்...... கல்கண்டுல பூண்டு வைத்தியம் ஒண்ணு போட்டிருந்தோம். அதுல அளவு எவ்வளவுன்னு போடலை. ஒருத்தர் ஏதோ அவர் நினைச்ச அளவுல செஞ்சு சாப்டுட்டு சண்டைக்கே வந்துட்டார். மருத்துவக் குறிப்புக்கள் வெளியிடறப்ப ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும்ங்கிற அனுபவம் எனக்கு வந்தது. இவங்க ரொம்ப வெற்றிகரமா பல மருத்துவக் குறிப்புக்களை வெளியிடறதைப் பாராட்டத்தான் வேணும்.

கலா: ஆமா. அந்தத் துறை சிறப்பு மருத்துவரைக் கேட்டுப் பல பேட்டிகள் வந்திருந்தன. எத்தனையோ மருத்துவ சம்பந்தமான விஷயங்களை நாங்க தெரிஞ்சுக்கிட்டோம்."

லேனா: ஆண்கள் பகுதின்னு ஒண்ணு பார்த்தேன். மாலன் பேட்டி நல்லா இருந்தது.

சீதாலக்ஷ்மி: இந்தப் பகுதியில உங்கள் மனைவியைப் பற்றின்னு சில ஆண்கள் கிட்ட கேட்டிருந்தாங்க. ஒருத்தராவது ''திருப்தி''ன்னே சொல்லலை. அதனால இந்தப் பகுதியே வேண்டாம்னு நினைக்கிறேன்.

லேனா: நீங்க அப்படிச் சொல்லக் கூடாது. என்னைக் கேட்டிருந்தா நான் ரொம்ப உயர்வா பேசியிருப்பேன்...''

(சிரிப்பு)

லேனா: குழந்தைகளுக்கான நல்ல பழக்க வழக்கங்கள் மத சார்பான விஷயங்கள் இதையெல்லாம் விஷயம் தெரிஞ்சவங்களைக் கேட்டுப் போடலாம்.

கலா: ஸ்போர்ட்ஸும் நிறைய போடணும்.

எஸ். லலிதா: சில விளையாட்டுக்களைப் பத்தியெல்லாம் எப்படி ஆடறதுங்கற மாதிரியெல்லாம் போடலாம்.

லேனா: அதிகமா தமிழ்நாட்டுப் பெண்களைப் பத்தித்தான் போடறாங்க. பக்கத்து மாநிலப் பெண்களைப் பத்தியும் எழுதலாம்.

(மேலும் பல வாசகர்களின் அனுபவங்கள் வேறு பக்கத்தில்...)

தொகுப்பு: கிரிஜா ராகவன்

புகைப்படங்கள்: **சுபா**

சோற்றுக் கற்றாழையை எடுத்து நடுபாகத்தில் கீறி அதில் வெந்தயம் 100 கிராம் அளவு திணித்து ஒரு நாடாவால் கட்டி வைத்து விடவும். (மேலிருந்து கீழாகக் கீற வேண்டும்) மறுதினம் வெந்தயம் நன்கு முளை விட்டு இருக்கும். இந்த வெந்தயத்தை வெயிலில் காய வைத்துத் தேங்காய் எண்ணெயில் ஊற வைத்துத் தலைக்குத் தடவி வந்தால் தலை முடி வளரும். நரைக்காது.

— எஸ். விஜயா சீனிவாசன்

புடைவையின் ஓரங்களில் எவ்வளவு சோப்புப் போட்டுத் தேய்த்தாலும் அழுக்கு போகவில்லையா? ஒரு ஸ்பூன் ஷாம்புவை ப்ரஷ்ஷில் நனைத்துத் தேயுங்கள். அழுக்கு மறைந்து அந்த இடம் பளிச்சென்று இருக்கும்.

— எஸ். மஞ்சுளா.

எங்களை 'ஒருமாதிரி' பார்க்காதீர்கள்!

மஞ்சுளா ரமேஷ்



நாலு சுவருக்குள் பாதுகாப்பான குடும்பம், அரவணைக்க பெற்றோர், அல்லது கணவர்.... ஏதோ ஒவ்வொருவருக்கும் பிரச்னைகள் இருக்கத்தான் செய்யும். வாழ்வில் ஏற்ற இறக்கங்கள்தான் எல்லோருக்கும்... ஆனால் இவற்றினின்று முற்றிலும் வேறுபட்ட வாழ்க்கையுடைய பெண்கள் எப்படியெல்லாம் வாழ்கிறார்கள்.

வேலூரிலுள்ள 'அரசினர் மகளிர் பிற்காப்பு இல்லம்' என்ன செய்கிறது? அது சீர்திருத்தப் பள்ளிகள், மகளிர் காப்பகங்களிலிருந்து வரும் பெண்களுக்கான இல்லமா? அவர்களின் வாழ்க்கை எப்படி இருக்கும்? 'அப்ரூவ்ட் ஸ்கூல்ஸ்' அண்டு விஜிலன்ஸ் சர்வீஸின் இயக்குநர் திருமதி கிரிஜா வைத்தியநாதனை அணுகியபோது வெகு ஆர்வத்தோடு இதைப் பற்றிப் பேசினார்.

"நீங்கள் கண்டிப்பாக இப்படிப்பட்ட இல்லங்களைப் போய்ப் பார்க்கணும். பொதுவாக மக்களுக்கு ஓர் அபிப்பிராயம் இருக்கிறது — இப்படிப்பட்ட இல்லங்களில் இருப்பவர்கள் எல்லோரும் தவறு செய்தவர்கள், வாழ்க்கை நெறியில் தவறினவர்கள் இல்லையென்றால் சிறைத் தண்டனை அனுபவித்தவர்கள் என்று. ஆனால் பல அனாதைச் சிறுமியர்கள் (16 வயதிற்கு மேற்பட்டவர்கள்) இங்கு வருகிறார்கள். அவர்களுக்கு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்த நாங்கள் பாடுபடுகிறோம்' என்றார்.

வேலூர் அரசினர் பிற்காப்பு இல்லத்தின் தலைவி இந்திராணியின் அனுபவங்கள் சுவையானவை:

"நான் சென்னை, மயிலாப்பூர், ஈரோடு, திருச்சி, மதுரை என பல ஊர்களில் இப்படிப்பட்ட இல்லங்களில் வேலை பார்த்திருக்கேன். ஆனால் மதுரையில் (மகளிர் காப்பகம்) என்னுடைய அனுபவங்கள் ரொம்ப வித்தியாசமானது, ஏன் பயங்கரமானதுன்னுகூடச் சொல்லலாம்.

ஒரு பெண், சாராயக் கும்பலின் தலைவியை ஒருமுறை கொண்டு வந்து ஒப்படைத்தார்கள். மல்லிகா என வைத்துக் கொள்வோமே! (உண்மைப் பெயர் வேறு). அவள் ஆறடி உயரம். நிஜார் சட்டைதான் போடுவாள். தலையை முண்டாசுக் கட்டிக்கொண்டு பார்க்கவே பயமாக இருக்கும். அவளுடன் அவள் அடியாட்கள் ஆறு பெண்களையும் வளைத்துப் பிடித்துக் கொண்டு வந்திருந்தார்கள்.

இல்லத்தில் எல்லோரும் சாப்பாடு வாங்க க்யூவில் நிற்க வேண்டும். இவள் நிற்க மாட்டாள். இவளுடைய அடியாட்கள் இவளுக்காக வாங்கி வருவார்கள். ராத்திரியானால் அவளுக்குக் கைகால் அமுக்கி விடுவார்கள்! ஒருமுறை அவளைக் கூப்பிட்டு,

"ஏம்மா, இது எல்லோரும் சமமா இருக்க வேண்டிய இல்லம். நீயேன் சாப்பாடு வாங்க மாட்டேங்கறே? நான் உன் அம்மாபோல. உனக்கு வாங்கக் கஷ்டமா இருந்தா சொல்லு. நான் கொண்டு வரேன். முரண்டு பிடிக்கிற குழந்தைக்கு அம்மா செய்ய மாட்டாளா?" என்று கனிவாகச் சொன்னதும் 'ஓ'வென்று அழுது விட்டாள். நான் கூட இதை எதிர்பார்க்கலே. அப்புறம் அவள் தன் 'பந்தா'வை விட்டுவிட்

டான். இந்த மாதிரியான காப்பகங்களிலுள்ளவர்கள் திருத்தப்பட வேண்டியதுதான் இந்த இல்லத்தின் முக்கிய நோக்கம்.

இந்த அனுபவங்களுக்கெல்லாம் நேர் மாறானது வேலூரிலுள்ள இல்லம். இந்த இல்லத்திலுள்ளவர்கள் சீர்திருத்தப் பள்ளி



மற்றும் மகளிர் காப்பகங்களில் சிறிய பயிற்சி பெற்றவர்கள். எனவே இவர்கள் அன்பே உருவான பெண்கள். தாங்கள் இருக்கும் இடத்தைச் சுற்றிக் கொத்தி, காய்கறி, மரங்களைப் போட்டிருக்கிறார்கள். இவர்களுக்குச் சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் மகளிர் காப்பகங்களில் வழங்கப்படும் உணவு விகிதாச்சாரம் போல் இங்கு வழங்கப்படுவதில்லை என்பது ஒரு குறையாயுள்ளது.

ஆனால் அங்கே இருக்கும் பெரும்பாலான பெண்கள் தாய் தந்தை அற்றவர்கள். சமீபத்தில் அப்படிப்பட்ட அனாதைப் பெண்ணுக்குச் சிறப்பாகத் திருமணம் நடத்தி வைத்ததை பெருமையுடன் குறிப்பிட்டனர் இல்லத்தினர்.

"இந்த மாதிரி பிற்காப்பு இல்லங்களிலே பல தரப்பட்ட பெண்களும் இருக்காங்க. தந்தை இறந்துட்டதால தாயால வளர்க்க முடியாம போய்க் கொண்டு வந்து விடப்படும் பெண்கள், அனாதையாக வேறு வழியின்றி வந்து சேரும் பெண்கள், சிறைத் தண்டனை முடிந்து விடுதலையாகி வரும் பெண்கள், விபசாரக் குற்றத்தில் பிடிபட்ட பெண்கள்.... இப்படி எத்தனையோ வகை... ஆனால் எல்லோரையும் ஒரே இடத்தில் வளர்க்கிறார்கள். இதனால்தான் 'பிற்காப்பு இல்லம்' என்றாலே பொதுமக்கள் என்னவோ மாதிரி பார்க்கிறார்கள்..."

என்றார் இந்த இல்லத்திற்குத் தன் காந்தி நகர் மகளிர் மன்றம் மூலம் பல உதவிகளைச் செய்து வரும் திலகவதி ராமையா.

மகளிர் மன்றங்கள் திரும்பத் திரும்ப இலவச மருத்துவ முகாம், துணி வழங்குதல் எனச் செய்வதைவிட இப்படிப்பட்ட இல்லங்களைத் தத்து எடுத்துக் கொள்ளலாமே எனத் தோன்றியது. இப்பொழுது பலரும் செய்து வரும் சேவைகள் நல்லதுதான். ஆனால் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட இப்படிப்பட்ட அபலைப் பெண்களை அன்போடு அரவணைத்துக் கொள்வது எத்தனை பெரிய சேவை! குற்றம் செய்தவர்களை மீண்டும் மீண்டும் சொல்லிக்காட்டியே, அவர்களை திருந்தவிடாமல் செய்யும் சமூகத்தின் கண்களில் படப் பயப்பட்டுக் கொண்டு அவர்கள் மறைந்து கொள்கிறார்கள். அவர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டி நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க, படித்த, சிந்திக்கத் தெரிந்த மகளிர் மன்றங்கள் முன்வரலாமே!

அங்கிருந்த ஒரு சிலோன் அகதிப் பெண்ணின் அனுபவம் பயங்கரமானது...

"நாங்க கொழும்பு பதுலே தேயிலைத் தோட்டத்தில வேலை பார்த்துக்கிட்டு இருந்தோம். அம்மா, அப்பா, ரெண்டு அண்ணன் மாரு, தங்கச்சி, நான் எழுபத்திரண்டுலே கலவரம் கூடுதலா ஆனவுடனே அம்பது குடும்பங்க இந்தியாவுக்கு வந்தோம். எங்களை ஆந்திராவுல காப்பித் தோட்டத்துக்கு அனுப்பிச்சாங்க.

அங்க என்னோட அம்மா, அப்பா, ரெண்டு அண்ணன்மாருக்கும் காலரா வந்துடிச்சி. ஆஸ்பத்திரியில சேக்க மாட்டேனுட்டாங்க. மருந்த மாத்திரம் கொடுத்தாங்க. நான் அதை கொடுத்தேன். ஆனா கொறையல்ல. ஒவ்வொரு நாளும் விடிஞ்சு எழுந்து பார்த்தா ஒருத்தர் பொணமா கெடப்பாங்க. மிஞ்சினது நானும், தங்கச்சியும்தான் வீடெல்லாம் ஒரே நாத்தம். வீட்டுக்குள்ள காலு வைக்க முடியாது.

இதையெல்லாம் பாத்த அதிர்ச்சியில நான் புத்திக் தடுமாறிப் போயிட்டேன். என்னையும், தங்கச்சியையும் திருச்சி ஹோமுக்குக் கொண்டு வந்தாங்களாம். எனக்கு அது ஒண்ணுமே தெரியாது. எங்க பாத்திரங்க, அம்மா நகைங்கல்லாம் என்ன ஆச்சுன்னும் தெரியல. கொஞ்ச நாள் கழிச்சு வேலூருக்கு அனுப்பினாங்க. இங்கே எனக்குக் கொஞ்சம் பரவாயில்ல. கண்ணு பார்வையும் போனதுல கண்ணாடி கொடுத்தாங்க..."

இப்போதும் அந்தப் பெண்ணின் முகம் பேயறைந்தாற்போலத்தான் இருக்கிறது.

தந்தை அல்சரில் இறக்க, விதவையான தாய் புகுந்த வீட்டால் சகலமும் ஏமாற்றப்பட, தன் அழகுக் குழந்தைகள் இருவரையும் இங்கு விட்டுவிட்டு, அண்ணன்மார்களிடம் 'இடிசோறு' சாப்பிடுகிறாள்...

நான்தான் வாழ்க்கையில நெறி தவறி விட்டேன், என் பெண்ணாவது நல்லவிதமாக வளர்ந்து நல்ல கணவனை அடையட்டுமே எனக் கண்ணீரோடு பிரிந்து வாழ்கிறாள்...

இப்படிப் பல வாழ்க்கைச் சரித்திரங்கள் அங்கே கண்ணீரில் எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

"இங்க பொறுத்தவரைக்கும் நான் இந்தக் குழந்தைங்களுக்கு நிறைய செய்ய முடியுது. இங்க இருக்கற டி.எஸ்.பி.யும், கலெக்டரும் ரொம்ப அன்பானவங்க. போனவாரம் ஒரு அனாதைப் பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணிவைப்ப எத்தனை பரிசுங்க வந்து குவிஞ்சுச்சு. போலீஸ் ஆபீஸர்ஸ் எல்லாம் வந்து வாழ்த்தினாங்க. அந்த மாதிரியே இன்னும் ரெண்டு அப்பாமூக்கு இல்லாத குழந்தைங்களுக்குக்கூட கல்யாணம் செய்யணும்னு பாக்கறேன். ஆண்டவன் கிருபை நல்லவிதமாகவே இருக்கும்... திருமணச் செலவுக்கு ரூ 100/–. திருமணம் முடிந்தபின் சீதன பணமாக ரூ 1000/– அரசால் வழங்கப்படுகிறது" என்கிறார் இந்திராணி.

உணர்ச்சிவசப்பட்டுத் தவறு செய்யலாம்; பெற்றோர்களின் தவற்றினால் பிள்ளைகளும் தவறுகளைத் தொடராம்; சந்தர்ப்பவசத்தால் குற்றவாளியாகலாம். ஆனால் நல்ல சூழ்நிலையில் அன்பான இதயங்களின் மத்தியில் இவர்களை வைக்கும்போது குற்றவாளிகளும் அன்பாளிகளாகவே ஆகிறார்கள். முகங்களிலும், மனங்களிலும் வேற்றுமையைக் காண முடிவதில்லை.

நல்லவையே நடக்க காலம்தான் துணை புரிய வேண்டும்.

இப்படிப்பட்ட பெண்களுக்கு சமூகத்தில் நல்ல வேலை கிடைப்பதில்லை. சில பெண்கள் அரசு தையல் தேர்வில் பயிற்சி பெற்றுள்ளார்கள், சில பெண்கள் மேட்ரன், வார்டன் அல்லது விற்பனை உதவியாளராக நியமனம் செய்யும் தகுதி பெற்றுள்ளார்கள். இருப்பினும் இவர்கள் சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் மகளிர் காப்பகங்களில் இருந்தவர்கள் என்ற ஒரே காரணத்தால் தனியார் ஏன் சில அரசு நிறுவனங்கள் கூட இவர்களை வேலையில் நியமனம் செய்ய அஞ்சுகிறார்கள். சந்தர்ப்ப சூழ்நிலை காரணத்தால் சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் தவிர நிரந்தரக் குற்றவாளிகள் அல்லர். எனவே சமூக நல நோக்கு கொண்டவர்கள் இவர்களின் புனர் வாழ்வுக்கு முன்வந்து நிரந்தர உதவி செய்ய வேண்டும்.

புகைப்படங்கள்:

விடிவெள்ளி ஆறுமுகம்

இம்மாத இல்லத்தரசி போட்டி

பொருள்: மாநில உணவு   கடைசி தேதி: 15·2·87

சமையல் கூப்பன்

.... என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும், எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

அறிமுகப்படுத்துகிறோம்
உங்கள் பெண்மையின் மென்மைக்கு
ஒரு இதமான அனுபவம்



உங்கள் பரிபூரணப் பாதுகாப்புக்காக
முழுக்க, முழுக்க விஸ்கோஸினால்
உருவாக்கப்பட்ட ஓரே சானிடரி நாப்கின்
ஸோஃபைன். பெயரிலேயே வெளிப்படும்
இதன் மென்மை.

இயற்கையான விஸ்கோஸ் இழைகளால்
உருவாக்கப்பட்ட ஸோஃபைன், மிக
அதிக உறிஞ்சும் தன்மை உடையது.
மேலும் உங்கள் மிருதுவான சருமத்திற்கு
மிக ஏற்றது.

மிக மெல்லியது ஸோஃபைன். இனி 'அந்த'
நாட்களிலும், நீங்கள் விரும்பும் உடைகளை
அணியலாம். கவலையின்றிச்
செயலாற்றலாம்.

10 நாப்கின்கள் அடங்கிய அழகிய
அட்டைப்பெட்டியில் ஸோஃபைன்,
இப்பொழுது, சென்னையிலும், பாண்டிச்-
சேரியிலும் மட்டுமே கிடைக்கிறது.

இது ஒரு 2M Consolidates தயாரிப்பு.

Sofine
சானிடரி நாப்கின்கள்!

ஸோஃபைன் — அணிந்திருக்கும் நினைப்பையே மறக்கச் செய்யும்.

Mfrs: 2M Consolidates, P. B. No. 1328, Madras — 600 016.


Distributors: Jaypar Agencies, 106, Sir P. S. Sivasami Salai,
Madras — 600 004. Ph: 76502.
Persuaders Marketing, 10, Montieth Lane, Egmore,
Madras — 600 008. Ph: 812663 P.P.

Trade enquiries invited





கறியோ (காய்) கறி!



கொத்தவரங்காய் இடித்த கறி

தேவையான பொருட்கள்: கொத்தவரங் காய் ½ கிலோ, வெங்காயம் 100 கிராம், பச்சை மிளகாய் 10, புளி கொட்டைப் பாக் களவு, எண்ணெய் 4 தேக்கரண்டி, தாளிக்க கடுகு, கறிவேப்பிலை, திட்டமாக உப்பு.

கொத்தவரங்காயை இருபக்கமும் கிள்ளி நார் எடுத்துக் கொள்ளவும். வெங்காயத்தை உரித்து நறுக்கிக் கொள்ளவும். கொத்தவரங் காய், பச்சை மிளகாய், வெங்காயம், உப்பு, புளி சேர்த்து உரலில் நசுக்கின மாதிரி இடித்துக் கொள்ளவும். அடுப்பில் சட்டியை வைத்து எண்ணெயை ஊற்றிக் கடுகு தாளித்து இடித்தகொத்தவரங்காய்விழுதைப் போட்டு மூடியால் மூடி வைத்து தணலை கம்மியாக வைத்துக் கொண்டு இரண்டு தரம் மூடித் திறந்து கலக்கி விடவும். நன்கு வெந்து உதிர் உதிராக ஆனதும் கறிவேப்பிலை கிள்ளிப் போட்டு இறக்கவும்.

பாகற்காய் எண்ணெய் கறி

தேவையான பொருட்கள்: பிஞ்சு பாகற் காய் ¼ கிலோ, எண்ணெய் 50 மிலி, புளி கொட்டைப் பாக்களவு, பொட்டுக் கடலை மாவு 6 டீஸ்பூன், தேங்காய்த் துருவல் 4 டீஸ் பூன், மிளகாய்ப் பொடி 1 டீஸ்பூன், திட்ட மாக உப்பு தாளிக்கக் கடுகு, கறிவேப்பிலை.

பாகற்காயை காம்பு நறுக்காமல் மத்தியில் கத்தியால் பிளந்து விதைகளை அகற்றவும். புளியைத் திக்காக கரைத்துக் கொண்டு அத் துடன் பொட்டுக் கடலை மாவு, தேங்காய்த் துருவல் மிளகாய்ப் பொடி உப்பு சேர்த்து கடுகு, கறிவேப்பிலை தாளிக்கவும். பின் இந்தக் கலவையை பிளந்த பாகற்காயினுள் திணித்து அடுப்பில் அகலமான சட்டியை வைத்து எண்ணெய் ஊற்றித் திணித்த பாகற் காய்களை ஒவ்வொன்றாக அடுக்கித் தணலைக் கம்மியாக வைத்துக் கொண்டு மூடி வைக்க வும். பின் பத்து நிமிடம் கழித்து மூடியைக் திறந்து காய்களைப் புரட்டி விடவும். பின் மூடி வைக்கவும். காய் கைக்கு மிருதுவாக ஆனதும் இறக்கவும்.

முருங்கைக்காய் எள்ளு கறி

தேவையான பொருட்கள்: முருங்கைக் காய் 4, எள்ளு கழுவினது 2 டீஸ்பூன், மிள காய் வற்றல் 5, கரைத்த புளி 1 டீஸ்பூன், எண்ணெய் 4 தேக்கரண்டி, தாளிக்க கடுகு, கறிவேப்பிலை, திட்டமாக உப்பு.

செய்முறை: முருங்கைக்காயைக் குழம் பிற்கு நறுக்குவது போல் நறுக்கி உப்பிட்டு வேக விடவும். வேக வைத்த பாதி துண்டு களைப் பிளந்து அதிலுள்ள சதைப் பகுதியை சுரண்டி எடுத்து வைத்துக் கொள்ளவும். பாதியை முழுத் துண்டங்களாக வைத்துக் கொள்ளவும். எள்ளையும், மிளகாய் வற்றலை யும் சிறிது எண்ணெய் விட்டு வறுத்துப் பொடி செய்து கொள்ளவும். அடுப்பில் வாணலியை வைத்து எண்ணெய் ஊற்றி கடுகு தாளித்து முருங்கைக்காய் துண்டுகளை யும், விழுதையும் போட்டு புளி ஊற்றிச் சிறிதே உப்பு சேர்த்துக் கலக்கி கறிவேப்பிலை கிள்ளிப் போட்டு எள்ளுப் பொடியை தூவி இறக்கவும்.

கொத்துமல்லி கத்தரிக்காய்

தேவையான பொருட்கள்: பிஞ்சு கத்தரிக் காய் ½ கிலோ, பச்சை கொத்துமல்லி 4 கட்டு, தேங்காய் 1 மூடி, பச்சை மிளகாய் 6, எண் ணெய் 4 தேக்கரண்டி, தாளிக்க கடுகு, ஒரு கொத்து கறிவேப்பிலை, திட்டமாக உப்பு.

செய்முறை: கத்தரிக்காயை காம்பு நீக்கி நான்காக நறுக்கிக் கொள்ளவும். நறுக்கிய கத்தரிக்காயை ரொம்பவும் குழைய விடாமல் சிறிது வேக வைத்து வடிகட்டவும். தேங் காயைத் துருவி, கொத்துமல்லித் தழையை சுத்தப்படுத்திப் பச்சை மிளகாய் உப்பு சேர்த்து நைசாக அம்மியில் அரைத்துக் கொள்ளவும். அடுப்பில் வாணலியைப் போட்டு எண்ணெய் ஊற்றிக் கடுகு தாளித்து அரைத்த விழுதைப் போட்டு நசுக்கு வதக்கி வெந்த கத்தரிக்காய்த் துண்டுகளைப்

மங்கையர் மலர்

அடுத்த இதழில்...

'ஆய்வரங்கம்'

தொடங்குகிறது.

முதல் அரங்கத்தில் நுழைபவர்கள்–

பிரபல பள்ளி முதல்வர்களும், பெற்றோர்களும்.



போட்டு மறுபடி வதக்கி இறக்கவும்.

சீரக வெண்டைக்காய்

தேவையான பொருட்கள்: பிஞ்சு வெண்டைக்காய் ¼ கிலோ, மிளகாய் வற்றல் 5, சீரகம் ½ டீஸ்பூன், தேங்காய் ½ மூடி, தாளிக்கக் கடுகு, உளுத்தம் பருப்பு, எண்ணெய் 4 தேக்கரண்டி, ஒரு கொத்து கறிவேப்பிலை, இட்டமாக உப்பு.

செய்முறை: வெண்டைக்காயை காம்பு நீக்கி விரல் அளவு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். நறுக்கிய காயைச் சிறிது வேக விடவும். தேங்காயைத் துருவி மிளகாய் வற்றல், சீரகம், உப்பு நைசாக அரைத்து வெந்த வெண்டைக்காயில் பிசிறி விடவும். அடுப்பில் எண்ணெய்ச் சட்டியை வைத்து எண்ணெய் ஊற்றிக் கடுகு உளுத்தம்பருப்பு தாளித்து, பிசிறி வைத்துள்ள காயைப் போட்டு நன்கு வதக்கி கறிவேப்பிலை போட்டு இறக்கவும்.

சேப்பங்கிழங்கு ரோஸ்டு

தேவையான பொருட்கள்: உருண்டை சேப்பங்கிழங்கு ¼ கிலோ, கடலை மாவு 5 டீஸ்பூன், அரிசி மாவு 1 டீஸ்பூன், மிளகாய்த் தூள் 1 டீஸ்பூன், உப்பு 1 டீஸ்பூன் (பொடித்தது) எண்ணெய் 100 மி.லி. தாளிக்க கடுகு.

செய்முறை: சேப்பங்கிழங்கைப் பாதியாக நறுக்கி ஒரு வேக்காட்டில் வேக வைத்து தோல் நீக்கவும்., ஒரு கிண்ணத்தில் கடலை மாவு, அரிசி மாவு, மிளகாய்த் தூள், உப்பு சேர்த்துத் தாளித்துக் கொட்டி வேக வைத்த கிழங்கை மாவில் புரட்டி எடுக்கவும். பின் அடுப்பில் எண்ணெய்ச் சட்டியை வைத்து எண்ணெய் ஊற்றி நாலு நாலு கிழங்குகளாகப் போட்டுச் சிவக்க வறுத்து எடுக்கவும். இது சூடாகச் சாப்பிடச் சுவையாக இருக்கும்.


முருங்கைக் கீரை வடைகறி

தேவையான பொருட்கள்: துவரம் பருப்பு, ¼ லிட்டர், தேங்காய் 1 மூடி, முருங்கைக்கீரை 1 கட்டு, மிளகாய் வற்றல் 10, எண்ணெய் நூறு மி.லி., இட்டமாக உப்பு, தாளிக்க கடுகு, கறிவேப்பிலை.

செய்முறை: கீரையைக் காம்பு நீக்கி உருவிக் கொள்ளவும். துவரம் பருப்பை ஊற வைத்துக் கழுவி மிளகாய் வற்றல் தேங்காய் சேர்த்துக் கொர கொரப்பாக, கெட்டியாக அரைத்துக் கொள்ளவும். அத்துடன் முருங்கைக் கீரையைச் சேர்த்து இட்லி தட்டில் ஈரத்துணியைப் போட்டுச் சிறு உருண்டைகளாக உருட்டி ஆவியில் வேக விடவும். வெந்ததும் அடுப்பில் எண்ணெய்ச் சட்டியை வைத்துக் கடுகு, கறிவே.-பிலை தாளித்து, வெந்த உருண்டைகளைப் போட்டு மீதி எண்ணெயையும் விட்டு ரோஸ்டாகத் தணலைக் கம்மியாக வைத்துக் கொண்டு வறுத்து எடுக்கவும். இது வெறுமனே சாப்பிடவும் சுவையாக இருக்கும். ரசச் சாதத்துடன் சாப்பிடவும் சுவையாக இருக்கும்.

— இராஜேஸ்வரி

இரத்த தானம்



தானங்களில் சிறந்தது எது என்று கேட்டால் இரத்த தானம் என்று தயங்காமல் பதில் அளிக்கலாம். ஒரு மனித உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும்போது அனைத்து மருந்துகளை யும் மருந்துக் கடையில் வாங்கிக் காப்பாற்றிவிடலாம். ஆனால் இரத்தம் தேவைப்பட்டால்? இதை செயற்கை முறையில் தயாரித்து பாட்டில்களில் அடைத்து மருந்துக் கடைகளில் விற்க முடியாது. எனவே இரத்தம் தேவைப்பட்டால் அதைக் கொடுக்கக் கூடியது இன்னொரு மனிதன்தான். ஒரு மனிதன் தன் உயிரைக் காத்த இரத்தத்தையே தான் பெற்ற மிக அரிய பரிசாகக் கருதுகிறான். இத்தகைய இரத்தத்தை எவ்வித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் ஒருவர் தானமாகத் தருவது என்பது எவ்வளவு உயர்ந்த செய்கை? வேறு வழியில்லை என்ற நிலையில் இன்று உலகிலுள்ள அத்தனை தேர்ந்த விஞ்ஞானிகளும், மருத்துவர்களும் இரத்தத்திற்காக மனித குலத்திடம் கையேந்தி நிற்கிறார்கள்.

இத்தகைய இரத்ததானத்தைப்பற்றிச் சென்னையில் அடையாறிலுள்ள வாலண்டரி ஹெல்த் சர்வீஸ் உடல்நிலையைச் செமிப்பு வங்கிக்குப் பொறுப்பு வகிக்கும் டாக்டர் திரு ஜெ. பாலசுப்ரமணியம் அவர்கள் பல அரிய, பயனுள்ள விவரங்களை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்.

கேள்வி: டாக்டர், ஏன் இரத்ததானம் செய்ய வேண்டும்?

ப: இரத்தம் என்பது வெறும் சிவப்பு நிற திரவம் அல்ல. அதை ஒரு உயிருள்ள திரவம் என்றே குறிப்பிட வேண்டும். முன்னேறிவிட்ட விஞ்ஞான உலகில் பலவித சிக்கலான அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. அவற்றிற்குத் தேவையான இரத்தம் போதிய அளவு கையிருப்பு இல்லை என்பது வேதனைக்குரிய விஷயம். எனவே இரத்தத்தைத் தானமாகக் கொடுக்க வேண்டியது மனித குலத்தின் கடமை என்றே கூறலாம்.

கே: எந்தெந்த சந்தர்ப்பங்களில் இரத்தம் தேவைப்படும்?

ப: விபத்துக்கள் நேரும்போது மிகுதியாக இரத்தம் சேதமாவதால் இவர்களின் இரத்தத் தேவைக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. அடுத்து மகப்பேறு சமயம் இரத்த சேதம் ஏற்பட்டு உயிருக்கு ஆபத்து விளையும் அபாயம் நேரிடும். எனவே இத்தகைய சூழ்நிலை அடுத்த இடத்தை வகிக்கிறது. இவற்றைத் தவிர ரத்த சோகை, அறுவை சிகிச்சை, இருதய மாற்று அறுவை சிகிச்சை, மூளை அறுவை சிகிச்சை போன்றவற்றிற்கும் இரத்தம் தேவைப்படுகிறது.

கே: இரத்த தானம் செய்ய வருபவர்களுக்கு என்னென்ன சோதனைகள் செய்கிறீர்கள்?

ப: தானம் செய்பவரின் உடல் ஆரோக்கியம் முதலில் சோதிக்கப்படுகிறது. அவர் ஆரோக்கியமானவராக இருப்பின் அவர் இரத்தம் என்ன பிரிவு என்பதையும், ஆர். ஹெச். ஃபேக்டரையும் கண்டுபிடிப்போம். இது எளிய சோதனை மூலம் கண்டுபிடிக்கப்படுகிறது. மஞ்சள் காமாலை, பால்வினை நோய்க்கா...



சோதனைகளும் செய்யப்படுகின்றன.

கே: இரத்த தானம் செய்பவர்களின் அடிப்படைத் தகுதிகள் யாவை?

ப: இரத்த தானம் 18 வயது முதல் 58 வயது வரை உள்ளவர்களே செய்ய வேண்டும். அதுவும் 18 முதல் 21 வயது வரை உள்ளவர்களின் பெற்றோரின் சம்மதம் தேவை. 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் இரத்தக் குழாய் கடினமாகிவிடுவதால் இழுவிசையை இழந்துவிடும். இதனால் ஒருவர் இரத்தம் கொடுத்துக் கொண்டிருக்கும்போதே திடீரென இரத்த அழுத்தம் மிகவும் குறைந்துவிடும். இதனால் அவர் உயிருக்கே ஆபத்து விளையலாம். அடுத்து இரத்தம் தானம் செய்பவரின் எடை 45 கிலோவிற்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

கே: என்னென்ன நோய் வந்தவர்கள் இரத்த தானம் செய்யும் தகுதியை இழக்கிறார்கள்?

ப: இது ஒரு முக்கியமான கேள்வி இதற்கு நான் சற்று விளக்கமாகப் பதில் அளிக்க வேண்டியுள்ளது. முதலில் நிரந்தர தகுதி இழப்புக்குக் காரணம் என்ன என்று பார்ப்போம். மஞ்சள் காமாலை நோய் எப்போதாவது வந்திருந்தால்கூட அந்த நபர் எப்போதும் இரத்தம் கொடுக்கக் கூடாது. காரணம் அவர் இரத்தத்தில் மஞ்சள் காமாலை நோய் அணுக்கள் ஒரு சிலவாவது இருக்கும். அதே போல் பால்வினை நோய் உடையவர்களும் இரத்தம் எப்போதும் கொடுக்கக் கூடாது.

அடுத்து சில நோய்கள் காரணமாக தற்காலிகத் தகுதி இழப்பு நேரலாம். டைபாயிடு நோய் குணமாகி ஆறு மாதங்கள் வரையிலும், சிக்கலான அறுவை (**Major operation**) சிகிச்சைக்குப் பின் ஆறு மாதங்கள் வரையிலும் இரத்தம் கொடுக்கக் கூடாது. பல் பிடுங்கியவர்களும், ஏதாவது நோய்க்காகத் தடுப்பு ஊசி போட்டுக் கொண்டவர்களும் ஆறு வாரங்கள் வரை இரத்ததானம் செய்யக் கூடாது.

இரத்த சேமிப்பு வங்கி — சில சுவையான தகவல்கள்

1. 1901ம் ஆண்டுதான் முதன் முதலில் இரத்தப் பிரிவுகளைக் காணும் முறை கண்டுபிடிக்கப்பட்டது.

2. இரண்டாம் உலகப்போருக்குப் பிறகுதான் உலகின் பல்வேறு நாடுகளில் இரத்த சேமிப்பு வங்கிகள் தொடங்கப்பட்டன.

3. இந்தியாவில் முதன்முதலில் இரத்த சேமிப்பு வங்கியை ஆரம்பித்தவர் சென்னையைச் சேர்ந்த டாக்டர் கே.எஸ். ரங்கநாதன் அவர்கள். கிங் இன்ஸ்டிட்யூட்டில் 1935ல் ஆரம்பித்தார்.

4. ஆரம்ப காலங்களில் கைதிகளிடமிருந்தே இரத்தம் சேகரிக்கப்பட்டது. ஒருமுறை இரத்தம் கொடுத்தால் தண்டனைக் காலத்தில் ஒரு வாரம் குறையும்.

5. லண்டனில் ரீஜினல் டிரான்ஸ்ஃபியூஷன் சென்டர்தான் உலகிலேயே மிகச் சிறப்பாக இயங்கும் வங்கி. ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு வங்கி அமைத்து அங்குள்ள மக்களிடமிருந்தே இரத்தத்தைச் சேமித்து, அங்குள்ள மருத்துவமனைகளின் தேவையை பூர்த்தி செய்கிறார்கள். இங்கு 18% இரத்தம் அதிகப்படியாக கையிருப்பில் இருப்பதால் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் கொடுத்து உதவுகிறார்கள்.

6. வெளி நாடுகளில் பாலிலிருந்து பால் பொருட்களைத் தயாரிப்பதுபோல் இரத்தத்தைப் பிரித்து சிவப்பு அணுக்களை உறைய வைத்தும், பிளாஸ்மாவை பொடியாக்கியும் சேமிக்கின்றனர். சிவப்பணுக்களை இரத்த சோகைக்காரர்களுக்கும், பிளாஸ்மாவை பல்வேறு சிகிச்சைகளுக்கும் பயன்படுத்துகிறார்கள்.

7. வெள்ளையர் உடம்பில் கறுப்பர் இரத்தம் ஏறலாமா? இதைத் தடுக்கவும் வழி இருக்கிறது. அமெரிக்காவில் சிலர் தங்களுக்கு இரத்தம் தேவைப்பட்டால் தங்கள் இரத்தமே செலுத்தப்பட வேண்டும் என்று விரும்பி முன்னதாகவே சில பாட்டில் இரத்தத்தை − 20° சென்டிகிரேடில் பல ஆண்டுகளாக பாதுகாத்து வருகின்றனர்.

பாலசுப்ரமண்யம்




அமிர்தாஞ்சன் லிமிடெட்
90 வருடங்களுக்கு மேல் குடும்பங்களில் பயன்பட்டு
வரும் நம்பகமான மருந்துகளைத் தயாரிப்பவர்கள்.
அமிர்தாஞ்சன் பெய்ன் பாம்
தலைவலி, வாய்வு பிடிப்பு
வலி, சுளுக்கு, தசைவலி
முதலியவற்றிற்கு
AMRUTANJAN
அமிர்தாஞ்சன் டெர்மல் ஆயின்ட்மென்ட்
சொறி சிரங்கு படை முதலிய
சரும உபாதைகளுக்கு
Amrutanjan
dermal Ointment
அமிர்தாஞ்சன் விளக்கெண்ணெய்
தூய்மையானது, வாசனை
ஏதுமில்லாதது.
AMRUTANJAN
CASTOR OIL
ஸ்வாஸ் மின்டஸ்
SWAS
அமிர்தாஞ்சன் இன்ஹேலர்
மூக்கடைப்பு, சளி,
மூக்கொழுகல், தும்மல்,
தலைபாரம் முதலிய
வற்றிற்கு
AMRUTANJAN
INHALER
அமிர்தாஞ்சன் கிரைப் மிக்ஸர்
குழந்தையின் ஜீரணக்
கோளாறு, பல் முளைக்கும்—
பொழுது ஏற்படும் உபாதைகள்
முதலியவற்றிற்கு
AMRUTANJAN
ஸலோ:பென் வலி நிவாரண மாத்திரை
தலைவலி, ஃப்ளு,
உடல்வலி, பலவலி
முதலியவற்றிற்கு
அனோலியம் கோல்ட் ரப்
ஜலதோஷம்,
இருமலிலிருந்து
நிவாரணம் பெற வீரியமுள்ள
சக்தி வாய்ந்த மருந்து
Anoleum
இந்தியாவிலும்
வெளிநாடுகளிலும்
புகழ் பெற்றவை
அமிர்தாஞ்சன்
லிமிடெட்
சென்னை - 600 004
கிளைகள் :
பம்பாய், புதுடில்லி, கல்கத்தா
ஹைதராபாத், பெங்களூர்,
காஸியாபாத்.

இரத்த தானத்தில் ஒரு சாதனை

மனைவி எண்ணெய்ச் சுத்திகரிப்புச் சாலையில் பணிபுரிவதாலோ என்னவோ அன்பு ரமேஷ் தன் உடம்பு இரத்தத்தையும் அடிக்கடி சுத்தமாகப் புதுப்பித்துக் கொள்கிறார். இந்த இளைஞர் இதுவரை இருபத்தியெட்டு முறை இரத்ததானம் செய்து சாதனை புரிந்துள்ளார். இதில் இருபத்தியாறு முறை இருதய மாற்று அறுவைச் சிகிச்சைக்காக பல்வேறு மருத்துவமனைகளில் பல்வேறு நபர்களுக்கு இரத்தம் கொடுக்க நேரில் சென்றிருக்கிறார். இவர் தாயார் முதலில் இவரைத் தடுத்தாலும் தந்தை, மனைவி ஆகியோரின் ஆதரவு உண்டு என்கிறார்.

"என்னால் தேசிய ஒருமைப்பாடே ஏற்பட்டிருக்கிறது" என்று புதிர் போட்டு, தானே அவிழ்த்தார். "பஞ்சாபி, குஜராத்தி, ஆந்திராக்காரர், பெங்காலி என்று பல மாநில மக்கள் உடம்பில் என் இரத்தம் ஓடுகிறது" என்று சிரிக்கிறார்.

என் உதவி பெற்ற பலர் இன்னும் கடிதம் எழுதுகிறார்கள் என்று கத்தை கத்தையாய் கடிதங்களைக் காட்டுகிறார்.

"அப்போ சேவை என்பது தங்கள் இரத்தத்தோடு கலந்த விஷயம் போலிருக்கிறதே?" என்று கூறி விடை பெற்றோம்.

கர்ப்பிணிப் பெண்களும், இருதய நோய், நரம்பு நோய், குறைவான இரத்த அழுத்த நோய் உடையவர்கள் இரத்த தானம் செய்யக் கூடாது. மாதவிலக்கு நிற்கும் வயதுடைய பெண்களும் இரத்தம் தரலாம். ஆனால் ஒவ்வொரு மாதமும் ஏற்படும் மாத விலக்கு சமயம் கொடுக்கக் கூடாது. இரத்த அழுத்தத்தையும், சர்க்கரை வியாதியையும், சில உடற்பயிற்சிகள், யோகா, ஆழ் நிலை தியானம், உணவுக் கட்டுப்பாடு இவற்றால் சீராக்கி வருபவர்கள் கொடுக்கலாம். ஆனால் மருந்து மூலம் கட்டுப்படுத்துபவர்கள் கொடுக்கக் கூடாது.

இது தவிர இரத்தம் வழங்கும் சமயம், சளி, ஜுரம், நெஞ்சு படபடப்பு, வியர்த்தல் ஆகியவை இருப்பினும் அவரிடமிருந்து இரத்தம் பெற முடியாது.

கே: ஆண்களைவிட பெண்கள் குறைவாக இரத்ததானம் செய்ய முன்வருவது ஏன்?

ப: பெண்களும் ஆண்களுக்கு இணையாக ஆர்வத்தோடு இரத்த தானம் செய்ய முன் வருகிறார்கள். ஆனால் அவர்களில் பாதிப் பேர் இரத்த சோகை உடையவர்களாகவோ போதிய ஆரோக்கியம் அற்றவர்களாகவோ இருக்கிறார்கள். வேறு சிலர் இரத்தம் கொடுத்தால் என்ன நேருமோ என்று உள்ளுக்குள் பயப்படுவதால் நாடித் துடிப்பு அதிகமாகி விடுகிறது. இவை காரணமாக இவர்கள் இரத்த தானம் செய்ய இயலாமல் போய் விடுகிறது.

கே: இந்தியாவில் ஒரு நாளில் சராசரியாக எவ்வளவு பாட்டில் இரத்தம் தேவைப்படுகிறது?

ப: எல்லா மருத்துவமனைகளையும் கணக்கில் சேர்த்துக் கொண்டால் 25 நோயாளிகளுக்கு 4 பாட்டில் என்ற விகிதத்தில் இரத்தத்தின் தேவை இருக்கிறது.


கே: ஒரு பாட்டில் இரத்தம் என்பதன் கொள்ளளவு எவ்வளவு?

ப: ஒரு பாட்டில் இரத்தம் என்பது 500 மி.லி. லிட்டர். இது முழுவதும் இரத்தமல்ல. இதில் 75 மி.லி. லிட்டர் பிரிஸர்வேடிவ் திரவம். தானம் செய்பவர் ஒருவரிடமிருந்து சுமார் 250 முதல் 300 மிலி லிட்டர் இரத்தம் சேகரிப்போம்.

கே: ஒரு நபர் எவ்வளவு முறை இரத்தம் கொடுக்கலாம்?

ப: ஆரோக்கியமான உடல்நிலை உடைய ஒருவர் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இரத்தம் கொடுக்கலாம். நடைமுறையில் வருடத்திற்கு ஒருவரிடமிருந்து இரண்டு முறை இரத்தம் பெறுகிறோம். ஒருவரே எவ்வளவு முறை வேண்டுமானாலும் இரத்தம்

* அன்பு ரமேஷ்



இரத்தம் எங்கு கிடைக்கும்?

ஒரு விபத்து நேர்ந்தால் உடனடியாக இரத்தம் தேவைப்படும். அதேபோல சில சமயங்களில் அபூர்வ இரத்தப் பிரிவு உடையவர்க்கும் இரத்தம் தேவைப்படும். தனியார் மருத்துவமனைகளில் இரத்த சேமிப்பு வங்கி இருக்காது. இந்நிலையில் யாரை அணுகுவது? எங்கு உடனே இரத்தம் கிடைக்கும்? கீழ்க்கண்ட இடங்களில் இலவசமாகவே இரத்தம் கிடைக்கும்.

1. வாலண்டரி ஹெல்த் ஸர்வீஸில் இரத்த சேமிப்பு வங்கி உள்ளது. இவர்களைத் தொடர்பு கொண்டால் உடனே தேவையான பிரிவு இரத்தம் அனுப்பி வைக்கப்படும்.

முகவரி: வாலண்டரி ஹெல்த் ஸர்வீஸ்
டாக்டர் கே.எஸ். ரங்கநாதன் பிளட் பேங்க்,
அடையாறு, சென்னை—600 113.

2. அடுத்து சிறந்த முறையில் இயங்கி வருவது சென்னை அரிமா சங்கத்தினர் நடத்தும் இரத்த சேமிப்பு வங்கி. தரமான இரத்தம் உடனடியாகக் கிடைக்கும்.

3. அடுத்தது மெட்ராஸ் வாலண்டரி பிளட் பாங்க். இதன் உறுப்பினர்கள் இரத்ததானம் செய்யத் தயாரான நிலையில் இருப்பார்கள். இவர்களை அணுகினால் உறுப்பினர்களை அணுகி, இரத்தம் பெற ஏற்பாடு செய்வார்கள்.

4. ஆர்எஸ்எஸ், ஹெச்எஸ்எஸ் (RSS, HSS) அமைப்பு. இதில் உள்ள அனைத்து உறுப்பினர்களுமே மிகத் தீவிரமாக இரத்த தானம் பற்றி மக்களிடையே பிரசாரம் செய்து வருகிறார்கள். சென்னையைத் தவிர, இரத்தம் தேவைப்பட்டால் வெளியூர்களுக்கும் சென்று இரத்த தானம் செய்கிறார்கள். பெரிய பட்டியலில் அனைத்து உறுப்பினர்கள் பெயர், முகவரி, இரத்தப் பிரிவு, கடைசியாக எப்போது இரத்தம் கொடுத்தார் போன்ற விவரங்கள் இவர்களிடம் உண்டு. உடனடி உதவி இவர்களிடம் நிச்சயம் கிடைக்கும்.

கொடுக்கலாம். எனக்குத் தெரிந்த பலர் பல ஆண்டுகளாக இரத்தம் கொடுத்து வருகிறார்கள்.

கே: இரத்தம் கொடுப்பதால் நம் உடல் நிலை பாதிக்கப்படுமா?

ப: நிச்சயமாக இல்லை. ஒருவர் தானம் செய்த இரத்தம் சுமார் 48 மணி நேரத்திற்குள் அவர் உடம்பில் ஊறிவிடும். இரத்தம் கொடுத்தபின் களைப்பு ஏற்படாது. அன்றே அலுவலகத்திற்குச் சென்று பணி புரியலாம். ஆயினும் பேருந்து ஓட்டுனர், புகைவண்டி ஓட்டுனர், விமானி, ஏணியில் ஏறி வேலை செய்பவர்கள் அரை நாள் ஓய்வு எடுக்க வேண்டும். அரசாங்கமே இரத்த தானம் செய்பவர்களுக்கு சம்பளத்துடன் கூடிய ஒரு நாள் விடுமுறையை அளிக்கிறது. மேலும் இரத்த தானம் செய்தவர்கள் விசேஷமான உணவையோ, மருந்தையோ சாப்பிடத் தேவையில்லை.

"ஒரு நாள் விடுமுறை உண்டு!"

கே: இரத்தத்தில் பல பிரிவுகள் உள்ளனவே? எந்தப் பிரிவு இரத்தம் மற்ற பிரிவோடு சேரும்?

ப: இரத்தத்தை ஓ பாஸிடிவ், ஓ நெகடிவ் (O +ve, O −ve,) ஏ பாஸிடிவ், ஏ நெகடிவ் (A +ve, A−ve) பி பாஸிடிவ், பி நெகடிவ் (B +ve B −ve) ஏபி பாஸிடிவ், ஏபி நெகடிவ் (AB +ve, AB−ve) என்று எட்டு வகையாகப் பிரிக்கலாம். பாட புத்தகங்களில் ஓ பிரிவை யூனிவர்ஸல் டோனர் என்று குறிப்பிட்டாலும் ஓ நெகடிவ் மட்டுமே எல்லாப் பிரிவோடும் சேரும். சாதாரண சமயத்தில் ஓ நெகடிவைக் கொடுப்பதில்லை. ஒரு விபத்தில் அடிபட்ட நிலையில் ஒருவருக்கு உடனடியாக இரத்தம் செலுத்த வேண்டும். அவர் இரத்தப் பிரிவைக் கண்டுபிடிக்கக் கூட நேரமில்லை என்னும் நிலையில் அவசர சிகிச்சைக்காக ஓ நெகடிவைச் செலுத்துவார்கள். மற்றபடி அந்தந்த இரத்தப் பிரிவுக்காரர்களுக்கு அந்தந்த பிரிவு இரத்தத்தைத்தான் செலுத்த வேண்டும்.

கே: எந்தப் பிரிவு இரத்தம் மிகக் குறைவான எண்ணிக்கை மனிதர்களிடம் உள்ளது?

ப: ஏபி பிரிவு இந்திய ஜனத்தொகையில் சுமார் 3% மக்களி

சினிமாவில் இரத்த தானம்!

டமே உள்ளது. ஓ பிரிவு மக்கள் சுமார் 30% to 40%, ஏ பிரிவு மக்கள் 25% to 30% என்ற அளவில் உள்ளனர். ஆர்ஹெச் நெகடிவாக உள்ள இரத்தப் பிரிவினர் சுமார் 6.8% சதவீதம் மக்களே.

கே: இரத்த தான முகாம்களை நடத்தும்போது எவ்வாறு இரத்தத்தை சேகரிக்கிறீர்கள்? என்னென்ன சுகாதார முறைகள் மேற்கொள்ளப்படுகிறது?

ப: முதலில் முகாம் நடக்கும் கட்டடம் சுகாதாரமான சூழ்நிலையில் இருக்க வேண்டும். அறைகள் காற்று, வெளிச்சம் உடையதாகவும், தூசு, அழுக்கு அற்றதாகவும் இருக்க வேண்டும். தானமளிப்பவரின் உடல்நிலையைச் சோதிக்க வேண்டும். காமாலை, டைபாயிடு போன்ற நோய்கள் வந்துள்ளதா என்ற விவரத்தையும் கேட்க வேண்டும். அவர் தகுதியான உடல் நிலையில் இருந்தால் மட்டுமே அவரை இரத்தமளிக்க அனுமதிக்க வேண்டும். அதன்பின் அவரை வசதியாகப் படுக்க வைத்து எந்தக் கையில் இரத்த நாளம் நன்றாகத் தெரிகிறது என்பதைக் கண்டறிந்த பின் லிக்விட் சோப்பால் கழுவி, அதன் பிறகு ஆன்டி செப்டிக் ஸ்பிரிட்டைத் தடவ வேண்டும். பிறகு அந்த இடம் மட்டும் மரத்துப் போகும் மருந்தைச் செலுத்த வேண்டும். பிறகு ஒவ்வொருவருக்கும் தனித்தனியான ஊசி, குழாய், சேமிக்கும் கலன் இவற்றைப் பயன்படுத்தி இரத்தம் சேமிக்கப்படுகிறது. ஒருவருக்குப் பயன்படுத்திய ஊசி, குழாய், சேமிக்கும் கலன் அதன் பிறகு மீண்டும் பயன்படுத்த முடியாது. ஊசியும் நன்றாக ஸ்டெரைல் செய்யப்பட்டிருக்கும். இந்த உபகரணங்களை டிஸ்போஸபிள் செட் என்கிறோம்.

கே: பணம் தேவைப்பட்டால் இரத்தம் கொடுப்பதாகக் கதைகளிலும், சினிமாவிலும் வருகிறதே? நடைமுறையில் இது சரியா?

ப: இது ஒரு முக்கியமான கேள்வி. ஒருவர் தாமகவே மனமுவந்து இரத்தம் அளிப்பதற்கும், வறுமை காரணமாக இரத்தம் அளிப்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. முதல் வகையைச் சேர்ந்தவர் நல்ல சத்துணவு உண்பவராகவும், தேக ஆரோக்கியம் உடையவராகவும், குறிப்பிட்ட கால இடைவெளியில் மட்டுமே இரத்தம் அளிப்பவராகவும் இருப்பார். வறுமை காரணமாக இரத்தம் அளிப்பவர் ஏழ்மையில் இருப்பதால் இரத்தத்தில் போதிய ஊட்டச் சத்துக்கள் இருப்பதில்லை. இவர் பணம் தேவைப்படும்போதெல்லாம் வெவ்வேறு பெயர்களில் இரத்தம்

"இடது கை கொடுப்பது வலது கை அறியாது"

பெண்கள் இரத்த தானம் செய்கிறார்களா? என்ற வினாவோடு சென்றபோது டாக்டர் சரோஜினி ஹரிஹரன் பற்றிய செய்தி காதில் தேனாய்ப் பாய்ந்தது. "தாங்கள் 30 தடவைகள் இரத்தம் கொடுத்திருக்கிறீர்களாமே? இது ஒரு சாதனை இல்லையா?" என்ற போது அவசர அவசரமாக அதனை மறுத்தார். "நான் ஒரு மருத்துவராக இருப்பதால் எனக்கு வாய்ப்பு கிடைத்தது. மற்றபடி இதில் பெருமைப்பட என்ன இருக்கிறது?" என்று சாதாரணமாகக் கேட்கும் அவரது அடக்கம் நம்மை மேலும் அசர வைக்கிறது.

1967 ம் ஆண்டு முதல் இரத்த தானம் செய்து வருகிறார். இவர் கொடுக்கும் இரத்தம் யாருக்குப் போகிறது என்பது இவருக்குத் தெரியாது. அதேபோல பெறுபவரும் இவரை அறிய வாய்ப்பு இல்லை. அப்படியும் ஒருமுறை ஒரு பெரியவர் இவரைப் பற்றி தெரிந்து கொண்டு இவருக்கு நன்றி சொல்ல வந்துவிட்டாராம். அதன்பிறகு இவரைச் சந்திக்கும்போதெல்லாம் மிகுந்த மரியாதையோடும், அன்போடும் நலம் விசாரிப்பாராம்.

வாலன்டரி ஹெல்த் சர்வீஸில் குடும்ப நலப் பிரிவில் மருத்துவ அதிகாரியாக விளங்கும் இவர் "பெண்கள் தாராளமாக இரத்தம் கொடுக்கலாம். இதனால் உடல் பலவீனமடையாது. எவ்வித உடல் நலக் குறைவும் ஏற்படாது. இன்னும் பல பெண்கள் ஆண்டுக்கு ஒருமுறையாவது இரத்தம் கொடுப்பது என்னும் கொள்கையோடு செயல்பட்டால் போதிய இரத்தம் மருத்துவமனைகளுக்குக் கிடைத்து விடும்" என்கிறார்.

“இரத்த தானம் செய்தால் தொத்து வியாதி வருமா?”

அளிப்பதால் இரத்தத்தின் தரம் குறைவாக இருக்கும். மேலும் எங்கே பணம் கிடைக்காமல் போய்விடுமோ என்ற பயத்தில் தன் நோய்களை மறைத்து விடுகிறார். இத்தகைய இரத்தத்தை நோயாளிக்குச் செலுத்தினால் அவர் நிலை என்ன ஆகும் என்று எண்ணிப் பாருங்கள்.

கே: டாக்டர், இரத்த தானம் செய்தால் அதனால் தங்களுக்கு தொத்து வியாதி வரும் என மக்கள் அஞ்சுவதன் காரணமென்ன?

ப: சில முகாம்களில் ஒரு நபருக்குப் பயன்படுத்திய ஊசி, குழாய், பாட்டில் இவற்றையே கழுவி, தூய்மை செய்து மீண்டும் வேறொரு நபருக்குப் பயன்படுத்துவார்கள். இப்படிச் செய்யும் போது சரியாக ஸ்டெரைல் செய்யாவிட்டால் வியாதிகள் வர வாய்ப்பு உண்டு. எங்கள் இலவச இரத்த தான முகாம்களில் டிஸ்போஸபின் செட்டைத்தான் பயன்படுத்துகிறோம். இதனால் மக்கள் தைரியமாக இரத்ததானம் செய்யலாம்.

கே: டாக்டர், இவ்வளவு அரும்பாடுபட்டு சேமிக்கும் இரத்தம் எவ்வளவு நாட்கள் கெடாமல் இருக்கும்? அதை எப்படிப் பாதுகாக்கிறீர்கள்?

ப: இரத்தத்தை ஏசிடி அல்லது சிபிடி (ACD or CPD) என்னும் பாதுகாக்கும் திரவத்தில் சேகரித்து வைப்போம். இதனால் இரத்தம் உறையாமல் திரவ நிலையில் இருப்பதோடு அதிலுள்ள சிவப்பு அணுக்கள் உயிரோடும் இருக்கின்றன. இந்த இரத்தம் + 4° டிகிரி சென்டிகிரேடில் குளிர்ப் பதனப் பெட்டியில் கெடாமல் இருக்கும். ஆனால் நம் நாட்டில் இரத்தம் போதிய அளவு கிடைக்காததால் பத்து நாட்களுக்குள்ளேயே இரத்தம் செலவாகிவிடுகிறது.

கே: சில மருத்துவமனைகளில் சரியாகப் பாதுகாக்கப்படாததால் இரத்தம் கெட்டுப் போய்விடுவதாகக் கூறப்படுகிறதே, இது எதனால்?

ப: வெப்பநிலை, பிரிஸர்வேடிவ் இவற்றில் குறை இருப்பின் இரத்தம் கெட்டுப் போகும். ஆனாலும் இந்த இரத்தத்திலிருந்து இறந்து போன சிவப்பு அணுக்களைப் பிரித்துவிட்டு எஞ்சிய பிளாஸ்மா என்னும் திரவத்தை தீப்புண் ஏற்பட்டவர்களுக்கும், புரதக்குறைவு உடையவர்களுக்கும் மாற்றுத்திரவமாகக் கொடுக்கலாம். எனவே இரத்தம் எந்த நிலையிலும் வீணாவதில்லை.

கே: வழக்கமாக ரத்த தானம் செய்பவர்களோடு நீங்கள் தொடர்பு எப்படி வைத்துக் கொள்கிறீர்கள்?

ப: நாங்கள் மாதத்திற்கு மூன்று முறை முகாம்கள் நடத்துகிறோம். பல்வேறு நிறுவனங்கள், வங்கிகள், கல்லூரிகள் இம் முகாமில் ஆர்வத்தோடு பங்கு கொண்டு தானம் செய்கிறார்கள். சுமார் 50 முதல் 120 பேர் வரை இரத்த தானம் செய்கிறார்கள். சிலர் தங்களது பிறந்த நாள், திருமண நாள், தலைவர்கள் பிறந்த நாள் போன்ற நாட்களில் எங்கள் மருத்துவமனைக்கே வந்து தானம் செய்கிறார்கள். இதைத் தவிர ஆயிரக்கணக்கானவர்கள் தானமளிக்கும் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களின் முகவரி, மற்றும் இரத்தப் பிரிவு போன்ற பல விவரங்கள் எங்களிடம் இருக்கும். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இவர்கள் இரத்தம் தருவார்கள். நெருக்கடி ஏற்படும்போது எந்த ஒரு உறுப்பினரையும் அணுகினால் அவர் மகிழ்வோடு இரத்த மளித்து உதவுவார்.

பேட்டி: **லக்ஷ்மிசங்கர்**

பூரி பொரிக்கும் போது, மாவில் தொட்டுக் கொண்டு இடாமல், எண்ணெயில் மாவுருண்டையைத் தொட்டு இட்டுப் பொரித்தால் எண்ணெய் கலங்காமல் இருக்கும். இடும் கல்லிலும், குழவியின் நடுவிலும் எண்ணெய் தடவி விட்டு, பிறகு வேலையைத் தொடங்குங்கள்.

— காயத்ரி.

அமோக விளைச்சலுக்கு,
விவசாய நண்பர் வெள்ளைச்சாமி
நம்பும் ''செய் நேர்த்தி''களில்
ஒன்று... நிப்போ!

"நிப்போவை நம்பினோர் கைவிடப் படார்"



திரு. வெள்ளைச்சாமி. அவரது கிராமத்திலேயே முற்போக்கு விவசாயி. ''வேளாண்மைப் பண்டிதர்'' என்று பெயர் பெற்றவர். நிறைய நில புலன்கள். தமது வயல்களைக் கண்ணின் மணிபோலக் காப்பதில் மிகுந்த அக்கறை கொண்டவர்.

''இருகரங்களைப் போல சக்தி தருகிறது என் நிப்போ ஸ்பெஷல் — டிரான்சிஸ்டரில் போட்டு, எனக்கு அவசியமான பண்ணைச் செய்திகள் கேட்—கிறேன். இரவு நேரத்தில் வயல் வெளிக்கு வேலைக்கும், காவலுக்கும் உற்ற துணையாக என் டார்ச்சில் உபயோகிக்கிறேன்.''

சீரான, நம்பிக்கையான சக்தி. பளிச்சென வெளிச்சம். துல்லியமான ஒலி — எப்போதும்.

நிச்சயமில்லாத உழவுத் தொழிலில் நிச்சயமாக நான் நம்புவது — நிப்போ.



''ஆம்!
நிப்போவை
நம்பினோர்
என்றும்
கைவிடப்படார்''.

INL/7/85/TAM

NIPPO
Batteries

நிப்போ பாட்டரிகள்: நேஷனல்-ஜப்பானின்
தொழில் நுட்பத்தில் தயாரானவை

விளம்பரமும் களேபரமும்

ஆயிரம் முட்டைகளை அனாயாசமாக ஆற்று நீரின் அடியில் அடுத்தவர்க்குத் தெரியாமல் இடுகிறது ஆறங்குல நீளமே உள்ள மீன் ஒன்று. இவ்வளவு பெரிய ஒரு சாதனையை வெளி உலகுக்குத் தம்பட்டம் அடிக்கத் தெரியவில்லை அதற்கு. ஆனால் ஒரே ஒரு முட்டையை மட்டும் இட்டுவிட்ட பெட்டைக் கோழி, கூரை மேல் ஏறி நின்று கொக்கரிக்கிறது; பாருக்குப் பறை சாற்றுகிறது, 'நான் ஒரு முட்டை இட்டுவிட்டேன்' என்று!

விளம்பரம்தான் வியாபாரத்தின் ஜீவ நாடி. உண்மை. ஆனால் பொய்யையும், உண்மையை மிகைப்படுத்தியும் (உண்மை மிகைப்படுத்தப்பட்டால் அதுவும் பொய்தான்!) அதாவது வாய்மையையும் பொய்மையையும், இரண்டறக் கலந்து, விளம்பரங்களில் பிரிக்க முடியாமல் திரித்து விடுகிறார்களே, தகராறு எல்லாம், பொது மக்களுக்குத் தீங்கு எல்லாம், அங்கேதான்.

உங்கள் பணம் உழைப்பால் வந்தது. மணி பர்ஸில் சிறைப்பட்டிருக்கும் அதை 'ஜிப்'பின் வாயைத் திறந்து கொண்டு வெளிவர, அவ்வளவு சீக்கிரம் அனுமதிக்க மாட்டீர்கள். ஆனால் எல்லா விளம்பரங்களின் கண்களும், சூழுற்றிருக்கும் அந்த மணி பர்ஸ் மீதுதான் என்பது என்னவோ வாஸ்தவம். பணத்துக்குத் தக்க பொருளைப் பெற வேண்டுமானால், சிறிது உள்நோக்கமும், மனப்பயிற்சியும் தேவை. டி. வி. யில் கண்டு ரசிக்கும் விளம்பரங்களுக்குப் பின்னாலும் பார்க்கவும், மற்றும் புத்தகங்களில் அச்சிடப்பட்ட விளம்பரங்களின் வரிகளின் இடையில் அச்சிடப்படாத வரிகளையும் படிக்கவும் கற்றுக் கொண்டால், எவ்வளவோ ஏமாற்றங்களைத் தவிர்க்க முடியும்.

திடீரென்று காளான்கள் போல மூலைக்கு மூலை முளைத்து வரும் விளம்பர ஏஜென்ஸிகள் பற்றி வியந்த நான், ஓர் ஏஜென்ஸியின் தலைவரை இதுபற்றி விசாரித்தேன். "இது எதனால்? இவ்வளவு விளம்பரங்கள் தேவைதானா?" என்பது பற்றி.

அவர் கூறினார்: "விளம்பரங்கள் இன்றைய வாழ்வின் ஒரு 'தேவையான கெடுதல்' (Necessary Evil). நிரந்தரமாக டிமாண்ட் உள்ள பொருட்களுக்கு விளம்பரமே வேண்டாம். அரிசியையும், புளியையும், மிளகாய், பருப்பையும் யாரும் விளம்பரம் செய்வதில்லை. ஆனால் மற்ற பொருட்களை வைத்துக் கொண்டு விளம்பரம் செய்யாமல் இருப்பது இருட்டில் நடிப்பது போலாகும். நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியுமே தவிர மற்றவர்கள் அறியார். ஆகையால் வெளிச்சம் என்னும் விளம்பரம் தேவைப்படுகிறது.

இன்று பத்துக் கம்பெனிகள் ஃபிரிட்ஜ்கள் தயாரிக்கின்றன. இருபது கம்பெனிகள் மிக்ஸியும், முப்பது கம்பெனிகள் டி. வி. யும், நாற்பது கம்பெனிகள் பிரஷர் குக்கர்களும், தயாரிக்கின்றன. போட்டியில் மினுக்க வேண்டுமானால், கொஞ்சம் பொய் என்னும் அரிதாரமும், கொஞ்சம் உண்மையை மிகைப்படுத்தும் மேல் பவுடர் மேக்கப்பும் தேவைப்படுகின்றன. விளம்பரங்கள் — அதிலும் டி. வி. யில் செய்யப்படுபவை — ஏற்கெனவே உள்ள மார்க்கெட்டை வலுப்படுத்துகின்றன. விளம்பரத்தால், இன்னும் கேட்டால், இல்லாத மார்க்கெட்டைக் கூட உருவாக்க முடியும்.

முதல் வகைக்கு உதாரணம்; ஒரு பிரபல வாஷிங் பவுடர். இதில் முக்கால் பங்குக்கு மேல் வெறும் வாஷிங் சோடா என்று பரிசோதனைச் சாலையின் ஆராய்ச்சிகள் கூறுகின்றன. ஆனால் விளம்பரம் பணத்தை அள்ளி வாரிக் கொட்டுகிறது. மற்றொன்று ஒரு பிரபல வெற்றிலைப் பாக்கு மசாலா. இது சில வருடங்களுக்கு முன் வட இந்தியாவின் சில நகரங்களில், டப்பாக்களில் மட்டும் கிடைத்து வந்தது. இன்று விளம்பரத்தின் மூலம் நாட்டின் பட்டி தொட்டிகளில் எல்லாம் சிறிய கைக்கடக்கமான பைகளில் கிடைக்கிறது.

இல்லாத மார்க்கெட்டை உண்டு பண்ணுவதில் (creating market when there is none) திடீர் உணவுகள் பற்றிக் கூறலாம். இன்று புதுப் புது திடீர் உணவு வகைகள் கடையில் திமிலோகப்படுகின்றன. இப்பொருட்கள் தோன்றுவதற்கு முன் யாரும் பட்டினியில்லை. சாப்பிட்டுக் கொண்டுதான் இருந்தோம். ஆனாலும் நம் பாட்டிமார்களின் சாதாரண கூழ் வற்றல், ஜெர்மன் மிஷின்களின் மூலம் கைபடாமல் பிழியப்பட்டு, அங்கே திரையில் ஒரு மாடர்ன் பெயருடன் பாட்டுடன் கலந்து கூத்தாடும் போது, அதை வாங்க விழைகிறோம். காரணம், விளம்பரத்தின் உந்தல்!"

ஒரு முறை இதே போல விளம்பரத்தைப் பார்த்துவிட்டு 'சக்தி வாய்ந்த புதிய ஃபார்முலா' பாட்டரி செல் இரண்டு, முன் பின் தெரியாத கடையில் வாங்கினேன். 'சீலை'யும் நான்தான் உடைத்தேன். ஆனால் போட்ட நாளிலிருந்தே 'மினுக் மினுக்'


என்றுதான் லேபிள் எரிந்தது.' ஒரே வாரத்தில் பிராணனையும் விட்டுவிட்டது. அடுத்த முறை வாடிக்கையான கடையில் வாங்கினேன். கண்ணைப் பறிக்கும் 'பளிச்.' கடைக்காரரிடம் இந்த மாற்றத்தைப் பற்றிக் கேட்டபோது அவர் சொன்னார்: "பாட்டரி செல்களின் ஒரு விசேஷம், அவை உற்பத்தி செய்யப்பட்ட நாளிலிருந்தே அவற்றின் சக்தி குறைந்து கொண்டே வரும் — சீல் செய்யப்பட்ட நிலைமையிலும் கூட அவைகளின் காத்து நிற்கும் தன்மை (Shelf-life) பற்றி எதுவும் நிச்சயமில்லை. ஆதலால் மற்ற பொருட்களைப் போல உற்பத்தி தேதியை கம்பெனிகள் செல்களின் மீது அச்சடிப்பதில்லை. ஆனால் கடைக்காரர் அறிவார் எது பழைய ஸ்டாக், எது புதிய ஸ்டாக் என்று. புதியவை நிரந்தரமான, மற்றும் பழைய வாடிக்கைக்காரர்களுக்குச் செல்கின்றன. பழைய ஸ்டாக் செல்களை முன் பின் தெரியாத கஸ்டமர்கள் பெறுகிறார்கள். பின்னே இவ்வளவு விலை உயர்ந்த ஒரு பொருளை எங்களால் தூர எறியவா முடியும்?"

பெரிய (லார்ஜ்) சைஸ் என்று பெயர். அடுத்த பெரிய சைஸ் எகானமி சைஸ், அதனினும் பெரிது ஃபாமிலி சைஸ்!" என்றார். ஆகையால் கம்பெனி கொடுக்கும் பெயரைக் கண்டு மயங்காமல், அது 40 கிராமா, அல்லது 200 கிராமா என்று எடையைக் கவனித்து வாங்குவதுதான் புத்திசாலித்தனம்.

அனுபவம் ஒரு சிறந்த ஆசான். இப்போது விளம்பரங்களின் வரிகளின் இடையிலும் படிக்கக் கற்றுக் கொண்டு விட்டேன்!

'புதிய கவர்ச்சிகரமான பாக்கிங்' என்றால் உள்ளே பொருள் அதுவேதான் உரித்தெறியப்படும், காகிதம், அட்டை, பிளாஸ்டிக், உறைகளில்தான் முன்னேற்றம். இதற்காக நீங்கள் அதிகப் பணம் கொடுக்க வேண்டும் என்று பொருள்.

'புதிய' கைக்கடக்கமான பாட்டில்' என்றால் பாட்டிலின் நடுவில் வயிற்றை வழித்து எடுத்துவிட்டு 'மின்னல் இடை'யாக செய்து விட்டார்கள் என்று அர்த்தம்.





ஆக, இவ்விளம்பரம் புகட்டிய பாடம். விளம்பரத்தை மட்டும் நம்புவதுடன் கூட, நாணயமான கடைக்காரரையும் நம்புவது பயன் அளிக்கும்.

'பாக்' செய்யப்பட்ட பொருட்களை வாங்கும் போது, பல 'பிராண்டு'களின் தரத்தையும் விலையையும் ஒப்பிடுகிறோமே தவிர, கூடவே எடையையும் நம்மில் அநேகர் ஒப்பிடுவதில்லை.

"எங்கள் 'பெரிய சைஸ்' பற்பசையின் விலையே ரூ. 4.50 தான்!" என்ற விளம்பரத்தைப் பார்த்துவிட்டு அதை ஒருமுறை வாங்கப் போனேன். கடைக்காரர் எடுத்துப் போட்டது என்னவோ சுண்டு விரல் நீள ஒரு 40 கிராம் ட்யூப். "இதுதான் பெரிய சைஸ் என்றால் சிறிய சைஸ் எது?" என்று கேட்டேன். "இந்தப் பேஸ்ட்டில் சின்ன சைஸே கிடையாது. கடைசிபட்ச சைஸுக்கே

'புதிய ஃபார்முலா' என்றால் விலை ஏற்றத்துக்குத் தயாராக இருங்கள். அடுத்த 'புதிய ஃபார்முலா வரும்வரையில்' என்று கொள்ளலாம்.


'புதிதாக சிந்தவே செய்யாத ஷாம்பூ பாக்கிங்' என்றால், உருண்டையான பாட்டிலைத் தட்டையாக்கிவிட்டுக் கழுத்தை மட்டும் நாரையைப்போலப் பார்வையாக நீட்டியிருக்கிறார்கள் என்றும் பொருள்.

இன்றைய விளம்பரங்கள் நெல்லும் பதரும் கலந்த குவியல்.. இதிலிருந்து நெல்லையும், பதரையும், பிரித்தெடுக்கத் தெரிந்த வாடிக்கைக்காரருக்கு என்றும் வெற்றியே அன்றி தோல்வியில்லை! காலத்தின் கோலம் அப்படி!

— எஸ். டி. ராகவன்

நியூட்ராமுல் சக்தி





க்ரீம் வளம்கொழிக்கும் அமுல் பால். சுலம் தரும் மால்ட். இன்சுவைமிக்க கோக்கோ. சும்மாகும்! இவற்றின் நற்பயன்களைத் தான் வலியூட்டுகிறது நியூட்ராமுல். எதனுடனும் மிஞ்சமுடியாத சுவையிலேயே கிடைக்கிறது!

	1000 gms.	500 gms.	Refil.
நியூட்ராமுல்	37.21	19.29	–
மால்டோவா	43.75	24.65	22.79
பூஸ்ட்	–	24.89	23.06
போர்ன்விடா	47.48	24.67	22.81

Prices as on 1st January, 1987. Local taxes extra.



அமுல் வழங்கும்

நியூட்ராமுல்

விளங்குங்கள் நியூட்ராமுல் வஸ்தாத்தாக

தயாரிப்பாளர்:
குஜராத் கோ-ஆபரேட்டிவ் மில்க்
மார்க்கெட்டிங் ஃபெட., லிட்.,
ஆனந்த் 388 001.

உலகக் கவிஞர்கள் மாநாடு இந்த முறை சென்னையில் நடைபெற்றது. பல நாடுகளில் இருந்தும் இருபதுக்கும் மேற்பட்ட பெண் கவிஞர்கள் இதில் கலந்து கொண்டார்கள்.

"அவர்கள் தமிழ்நாட்டை, தமிழ் இலக்கியத்தை, கலாசாரத்தைப் பார்த்துப் பார்த்து வியந்து போனார்கள். போர்க் களத்தில் இறந்து போன தன் மகனைப் பார்த்து, ஐயோ நாளைக்குப் போர்க் களம் அனுப்ப எனக்கு இன்னொரு மகனில்லையே' என அழுத வீரத் தாய் பற்றித் தங்கள் இலக்கியப் பாடல்கள் கூறுகின்றன என்றார் ஒரு பெண்மணி. அதேபோல நம் சங்ககாலப் பாட்டொன்று கூறுகிறது என்று சொன்னபோது அவர் அழுதே விட்டார்! மேன்மையான மனித உள்ளங்கள் உலகமெல்லாம் ஒரே மாதிரிதான் சிந்திக்கின்றன என்றார்கள்.

"இங்கே லட்சக்கணக்கில் 'அபார்ஷன்' செய்து கொள்ளும் பதினாறு வயதுப் பெண்களோ, முக்கால் நிர்வாணப் பெண்களோ இல்லை. எங்கேயோ ஒரு சிலர் இருப்பதை வைத்து இந்தியாவை மதிப்பிடக் கூடாது. உங்கள் நாட்டின் கலாசாரத்திற்கு நாங்கள் தலைவணங்குகிறோம். உலகிற்கு ஏதாவது ஒரு நாடு வழிகாட்ட முடியுமென்றால் அது இந்தியாவாகத்தான் இருக்க முடியும்!'' என்று அத்தனைக் கவிஞர்களும் வியந்து பாராட்டினார்கள்'' என்கிறார் இம்மாநாட்டின் தலைவர் நீதிபதி மோகன் அவர்கள்.





புடவை கட்டிய...

ரோஸ்மேரி வில்கின்சன்
(Rosemary Wilkinson)

இவர் உலகக் கலை கலாசார நிறுவனத்தின் தலைவர். அமெரிக்காவைச் சேர்ந்த பெண் கவிஞர். இவருடைய கணவர் வியாபாரத்தில் ஈடுபட்டு இருக்கிறாராம். ஒவ்வொரு ஆண்டும் கவிஞர்கள் மாநாடு நடக்கும் போது அதில் கலந்து கொள்ள வேண்டும் என்பதுதான் இவருடைய எண்ணமாம். 'கவிதை எழுதுவது பொழுது போக்கிற்காகவோ, அல்லது வயிற்றுப் பிழைப்புக்காகவோ அல்ல. எனது ஆன்மாவுக்கு அது சுகமாகப் படுகிறது. எனவேதான் கவிதை எழுதுகிறேன்' என்கிறார் இவர்.

இந்தியப் பெண்களை இவருக்கு ரொம்பவும் பிடித்து இருக்கிறதாம். தழையத் தழைய பட்டுப் புடைவையைக் கட்டிக் கொண்டு

காட்சி தரும் பெண்களைப் பார்க்கும் போது தேவதைகளைப் பார்க்கிற மாதிரி இருக்கிற தாம்.

எஸ்தர் கிரீஸ் (Esther Gress)

டென்மார்க்கில் ஒரு நாளிதழ் பத்திரிகைக்கு இவர் ஆசிரியராக இருக்கிறார். டென்மார்க்கில் நடைபெறும் கலை விழா, இலக்கிய சர்ச்சைகள் இவைகளைத் தொகுத்து வெளியிடும் பொறுப்பு இவருடையது. பத்திரிகைக்காரர்களுக்கும் அங்கு விடுமுறை விடுவார்களாம். விடுமுறை நாட்களில் உலகப் பயணத்தை மேற்கொள்கிறார். இவருடைய மகன் கிளெஸ்கிரீஸ் ஓர் ஓவியர். இவர் எழுதிய கவிதைகளுக்குக் கூட அவர் ஓவியம் வரைவதுண்டாம்.

இந்திய மக்கள் பிராணிகளிடம் காட்டும் அன்பு இவருக்குப் பிடித்திருக்கிறது. 'அன்பு ஒருவருக்கு ஒருவர் பரிமாறிக் கொள்ள வேண்டியது. ஒருவரின் வளர்ச்சிக்கு இன்னொருத்தர் காட்டும் அன்புதான் காரணம். அன்புதான் வாழ்க்கையில் எல்லாம் — என்பது இவருடைய ஆணித்தரமான எண்ணம்.

பாண்டிச்சேரி கடற்கரையும், அரவிந்தர் ஆசிரமமும் இவருக்குப் பிடித்திருக்கிறது.

எட்டித் ருஸ்கோனி கல்டோவிச் (Edith Rusconi Kaltovich)

இவர் அமெரிக்காவில் உள்ள நியூ ஜெர்சியில் சின்னக்குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியை.

அமெரிக்கக் குழந்தைகளின் அறிவுக்குக் கொஞ்சமும் குறைந்ததல்ல இந்தியக் குழந்தைகளின் அறிவு என்கிறார். இந்தியக் குழந்தைகளிடம் தான் பார்த்த மட்டும் பாசம் இயற்கையிலேயே அரும்பி இருக்கிறது என்கிறார். இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் பல கவிஞர்கள் பிறந்து அமரத்துவம் நிரம்பிய கவிதைகளைத் தந்திருப்பதைப் பாராட்டுகிறார். சிதம்பரம் கோவிலுக்குப் போய் தூக்கிய பாதத்தோடு நிற்கும் நடராஜப் பெருமானைக் கண்டதும் அந்தக் கலை எழிலில் சொக்கிப் போய்க் கண்ணில் நீர் வந்து விட்டதாம்.

பல நாட்டுக் கொடிகள் பல வண்ணத்தில் இருக்கலாம். ஆனாலும் அந்தக் கொடிகள் நட்பை வளர்க்கும் பட்டொளியாகவே இருக்க வேண்டும் என்பது இவருடைய எண்ணமாம். உலகமெங்கும் போரே இல்லாத நிலை வேண்டும். அதற்கு நாம் எல்லோரும் உறுதி பூண வேண்டும் என்கிறார் இந்தக் கவிஞர்.





பெண்ணைப் பார்த்தால்

ஈவிலெனி வால்டெங் (Evelyne Voldeng)

கனடாவில் வசிக்கும் கல்லூரிப் பேராசிரியை இவர். தனக்குக் குழந்தைகள் இல்லையே என்கிற கவலையை, இவருடைய மாணவ மணிகள் போக்கி விடுகிறார்களாம். ஹைகூ கவிதைகளில் இவருக்கு நாட்டம் உண்டாம்.

தொகுப்பு:

கீழாம்பூர் சங்கரசுப்பிரமணியன்

புகைப்படங்கள்: **பிரபுசங்கர்**

டாக்டர் பதில்கள்

பி. சாந்தி, தஞ்சாவூர்.

என் வயது இருபத்தாறு. எனக்கு 79 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. நான் கருத்தரித்து ஐந்தாவது மாதம் டாக்டரிடம் சென்று காண்பிக்கும் போது இரத்தப் பரிசோதனையில் என் இரத்தம் 'பி' குரூப் ஆர். எச். நெகட்டிவ் என்றும் என் கணவரின் இரத்தம் 'பி' குரூப் ஆர். எச். பாஸிட்டிவ் என்றும் தெரிந்தது. இதைப் பார்த்து விட்டு டாக்டர் குழந்தை பிறந்தவுடன் இரத்தம் எடுத்துப் பார்த்து குழந்தை பாஸிட்டிவ் ஆக இருந்தால் ஊசி போட வேண்டும் என்று கூறினார்கள். நான் பிரசவத்திற்குப் பிறந்த வீட்டிற்கு வந்து வேறு டாக்டரிடம் காண்பித்து 80 ஆம் ஆண்டு பெண் குழந்தை அழகாகப் பிறந்தது. குழந்தைக்கும் எனக்கும் இரத்தம் எடுத்துப் பரிசோதனை செய்துவிட்டு இருவருக்கும் பாஸிட்டிவ் என்று ரிசல்ட் கொடுத்தார்கள். அதை டாக்டர் பார்த்து விட்டு ஊசி போட வேண்டாம் என்றுகூறிவிட்டார்கள். அதனால்ஊசிபோடவில்லை. இதன் பின் எந்தவிதப் பிரச்னையுமில்லை.

84 இல் ஒருடி & சி செய்து கொண்டேன். அப்போது இரத்தப் போக்கு இருந்து கொண்டே இருந்தது. எந்த மருந்திற்கும் நிற்கவில்லை. அப்போது டாக்டரிடம் பழைய பரிசோதனையைக் காண்பித்தேன். அதைப் பார்த்த டாக்டர், 'உங்களுக்கு இரத்தம் முன்பு நெகட்டிவ் என்றும் பின் பாஸிட்டிவ் என்றும் கொடுத்து உள்ளார்கள். தவறாக உள்ளது. அடுத்து குழந்தை பிறக்கும் போது இரத்த குரூப்பைப் பார்க்க வேண்டும்' என்று கூறிவிட்டு மருந்து கொடுத்தார். இரத்தப் போக்கு நின்றது.

86 லே கருத்தரித்தேன். டாக்டரிடம் காண்பித்தேன். அவர் அபார்ஷன் ஆகாமல் இருப்பதற்கு ஊசி போட்டு மாத்திரை கொடுத்தார். இரத்தப் பரிசோதனைக்கு எழுதிக் கொடுத்தார். இரத்தப் பரிசோதனையில் நெகட்டிவ் என்று இருந்தது. மாதம் ஒரு முறை டாக்டரிடம் பரிசோதனைக்குச் சென்று வந்தேன். பிரசவம் ஆகும் சமயம் வயிற்றில் குழந்தையின் அசைவு தெரியவில்லை. மிகுந்த சிரமத்தின் பிறகு அக்குழந்தை இறந்து பிறந்தது. குழந்தைக்கு எந்தவிதக் குறையுமில்லை. இந்த டாக்டர் முதல் பிரசவத்தில் ஊசி போடாததால் இனிமேல் கருத்தரித்தாலும் நடுவில் இதே போலத்தான் ஆகும். அதனால் குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷன் செய்து கொள்ளும்படி சொல்கிறார். இனிமேல் எனக்குக் குழந்தை பிறப்பதற்கு வாய்ப்பில்லையா?

உங்கள் கடிதத்திலிருந்து உங்கள் இரத்தம் ஆர். எச். நெகட்டிவ்தான் என்று தெரிகிறது.

நீங்கள் கருவுற்றிருக்கும்போது, குழந்தையின் ஆர். எச். பாஸிட்டிவ் இரத்தம் சிறிய அளவில் உங்கள் இரத்தத்துடன் கலப்பதால் உங்களுக்கு ஆர். எச். ஸென்ஸிடைஸேஷன் என்பது உண்டாகிறது. (அதாவது தந்தையுடைய D – Antigen என்ற பொருள் கருவின் மூலம் உங்கள் இரத்தத்துடன் சேர்ந்து விடுகிறது.) இத்தகைய தாயின் கர்ப்பத்தில் உள்ள சிசுவின் இரத்தம் முறிக்கப்பட்டு, குழந்தை கடுமையான சோகை முதலியவைகளுடன் பிறக்கவோ, இறந்து பிறக்கவோ செய்கிறது. பொதுவாக தலைச்சன் குழந்தை இதனால் அதிகம் பாதிக்கப்பட வாய்ப்பில்லை. அதனால் உங்கள் முதல் குழந்தை நன்றாகப் பிறந்துள்ளது.

இத்தகைய தாய்மார்கள் ஆரம்பத்திலேயே தங்களுடைய இரத்த Serum – ஐ எதிர்ப்புப் பொருள்களுக்காக ஸ்கிரீன் செய்து கொள்ள வேண்டும். (Amniocentisis Test) அவ்வாறு எதிர்ப்புப் பொருள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அதற்குச் சிகிச்சையும் எடுத்துக் கொண்டால் குழந்தை உயிரோடு பிறக்க வாய்ப்பு உள்ளது.

எனக்குக் குழந்தை இல்லை. திருமணம் ஆகி ஆறு வருடங்கள் ஆகின்றன. இரண்டு வருடங்கள் முடிந்து டாக்டரிடம் சென்றதற்கு இருவரையும் எல்லாவிதமான டெஸ்டுகளும் செய்து மருந்து, மாத்திரைகள் எழுதிக் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார். அதன்படி சாப்பிட்டு வந்தோம். எனக்கு டி & சி செய்தார்கள். அதன்பிறகும் குழந்தை பிறக்கவில்லை. ஆகையால் நாங்கள் டெஸ்ட்ட்யூப் பேபி பெற்றுக் கொள்ளச் சாத்தியப்படுமா?

எனக்கு இதனாலேயே வாழ்க்கையில் மிகவும் வெறுப்பாக உள்ளது. என்னையும் மீறிப் பலரிடம் எரிந்து விழுகிறேன். மாத விலக்கின் போது மிகவும் ஆத்திரம் அடைகிறேன். எனக்கு ஒரு வழி சொல்லவும்.

உங்கள் வயதையும் உங்கள் கணவர் வயதையும் குறிப்பிடவில்லை. உங்கள் மருத்துவப் பரிசோதனை ரிப்போர்ட்டைப் பார்த்துத்தான் குழந்தை பிறக்க சாத்தியக் கூறு உண்டா என்று சொல்ல முடியும். உங்கள் கணவருக்கு விந்து பரிசோதனை ஆகி இருக்கிறதா என்பது தெரியவில்லை. (விந்துப் பாதை அடைப்பு) ஆக இருந்தால் சாதாரண அறுவை சிகிச்சை மூலம் சரி செய்து விடலாம்.

மாதவிடாயின் போது வரும் கோபதாபங்களை அடக்க Tranquiliser மாத்திரைகள் நல்ல பயன் தரும். டாக்டர் ஆலோசனையுடன் எடுத்துக் கொள்ளவும்.

டெஸ்ட் டியூப் பேபி பெற்றுக் கொள்ள பம்பாயில் வசதி உள்ளது.

பதில்கள் — டாக்டர் ஹைமாவதி
தொகுப்பு: சுபாபாரதி

நமக்குள்ளே ஒரு கடிதம்



யோசியுங்கள்!

பொதுவாக, எல்லா பத்திரிகைகளும் குழந்தை வளர்ப்புப் பற்றி தாய்மார்களுக்கு அறிவுரை கூறும்போது, 'உங்கள் குழந்தைகளை மற்ற குழந்தைகளுடன் ஒப்பிட்டுப் பேசாதீர்கள்' என்று மிகவும் வலியுறுத்திக் கூறுகிறார்கள்.

ஆனால், எத்தனை தாய்மார்கள் அந்த அறிவுரையைக் கடைப்பிடிக்கிறார்கள்?

அதற்காக மற்ற சூடிகையான குழந்தைகளைப் பாராட்டக் கூடாது என்பதல்ல பொருள்.

''அதோ அந்தப் பையன் பரிசு வாங்கி இருக்கான். எவ்வளவு சந்தோஷமாகப் போகிறான் பார்.''

என்பதற்கும், ''அவனைப் பார் பரிசெல்லாம் வாங்கிக்கிட்டு, நீயும்தான் இருக்கியே தண்டச்சோறு'' என்பதற்கும் எவ்வளவு வித்தியாசம் பாருங்கள்.

சரி, எதற்கு இவ்வளவு முன்னுரை என்கிறீர்களா?

ஒப்பிட்டுப்பேசியதால்,வாழ்வையேஇழந்தாள் எங்களுக்கு வேண்டியவர் ஒருவரின் மகள். இதோ:

''சுசிலாவின் சிறிய வயதிலிருந்தே அவள் தாயார் எப்போது பார்த்தாலும் தன் குழந்தைகளைத் தன் நாத்தனார் குழந்தைகளுடனும் ஓரகத்தி குழந்தைகளுடனும் ஒப்பிட்டே பேசுவாள். விடுமுறை நாட்களில் எல்லாக் குழந்தைகளும் விளையாடும் போது, தன் குழந்தைகள் தோற்று விட்டால், போயிற்று. ஆரம்பித்து விடுவாள் புலம்பலை. இது அப்படியே வளர்ந்து அந்தக் குழந்தைகளின் ஆழ் மனத்தில் பதிந்து விட்டது.

வாழ்க்கையில் அந்தக் குழந்தைகள் எவராலும் எந்த உயர்ந்த இடத்தையும் பெற முடியவில்லை.

இதில் பெண் குழந்தையான சுசிலாவிற்கு திருமணமும் நடந்தது. இதோடு விட்டதா?

சுசிலாவின் கணவனுக்கு ஒரு கம்பெனியில் உத்தியோகம். அவனது தம்பி, பி.ஈ. படித்திருந்தான், மஸ்கட்டில் நல்ல வேலையில் இருந்தான். இந்தியா வரும் போது பல பொருள்களை வாங்கி வந்து, தன் செல்வாக்கினைப் பறைசாற்றிக் கொண்டிருந்தான்.

சுசிலாவிற்கோ ஆழ் மனத்தில், தன் கணவன் அப்படிச் சம்பாதிக்கவில்லை என்ற எண்ணம் இருந்து கொண்டே இருந்தது. போதாக்குறைக்கு தாயார் வேறு அதை விசிறி விட்டுக் கொண்டே இருந்தாள்.

போதாதா?

தினமும் சண்டை ஆரம்பமாயிற்று. ''தம்பியைப் பாருங்கள். கொடுத்து வைத்தவர். தம்பி பெண்டாட்டி அப்படி வரம் வாங்கி வந்திருக்கிறாள். நீங்கள் இங்கேயே குப்பை கொட்டுங்கள். எல்லாம் என் தலைவிதி என்று பொழுது புலர்ந்தால் புலம்பல்.

போதாக் குறைக்குப் பெண் குழந்தையும் பிறந்து விடவே, வேதனை பொறுக்க முடியவில்லை சுசிலாவின் கணவனுக்கு!

என்ன தோன்றியதோ! என்ன நினைத்தானோ? சண்டை போட்டுக் கொண்டு தாய் வீடு சென்ற மனைவி வருவதற்குள், வீட்டிலேயே தூக்குப் போட்டுக் கொண்டு இறந்து விட்டான்.

இப்போது மனநிலை பாதிக்கப்பட்டவளாக சுசிலா. எப்போது நன்றாக இருப்பாள், எப்போது படபடப்பாள் என்று யாருக்கும் தெரிவதில்லை. பாவம் அந்தப் பெண் குழந்தை.

சுசிலாவின் கோபம் முக்கியமாக அவள் தாயாரைப் பார்த்தால், தலைமீது ஏறிவிடுகிறது.

பல்லைக் கடித்துக் கொண்டு, புடவை விலகுவது தெரியாமல், ''இப்போ திருப்தியா... திருப்தியா...?'' என்று கேட்டுக் கொண்டே 'ணங்... ணங்...' என்று சுவரில் பிடித்து முட்ட ஓடிவருகிறாள்.

இவ்விஷயத்தைக் கேள்விப்பட்ட என் கணவரின் நண்பரும், மனோதத்துவம் படித்தவருமான ஒருவர் சொன்னார்:

''பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் நிறைய எதிர்பார்ப்பது இயற்கைதான். ஆனால், தாங்கள் பேசும் ஒவ்வொரு சொல்லும், குழந்தைகளின் எதிர்கால நன்மைக்கு மட்டுமே என்ற ஓர் உணர்வை ஊட்ட பல பெற்றோர் மறந்து விடுகிறார்கள். முக்கியமாக ஒப்பிட்டுப் பேசப்படும் குழந்தை வாழ்க்கையில் முன்னேறியதாகச் சரித்திரமே இல்லை. 'இப்படிச் செய்' என்று சொல்ல மட்டுமே பெற்றோர் கற்றுக் கொள்ள வேண்டுமே தவிர, 'அவனைப் போல இப்படிச் செய்' என்று கூறவே கூடாது'' என்றார்.

பெற்றோர்களாகிய நாம் சிந்திப்போமா?

— லட்சுமி நடராஜன்



ராகம் தவறிய

"நந்து! இங்கே காபி, டிபன் சாப்பிட லாமா?" என்று சுந்தரம் சொன்னதும், அவன் காட்டிய பக்கத்தை நிமிர்ந்து பார்த் தாள் நந்தினி.


அது உயர்தரமான ஹோட்டல் வழக்க மாக, நடுத்தர ஹோட்டல்களுக்கே அழைத்

துப் பேரகிறவன், இன்று ஏன் இவ்வளவு உயர்ந்த வகுப்பு ஹோட்டலுக்குப் போக நினைக்கிறான்....?

நந்தினி பின்தொடர, சுந்தரம் முன்னால் கிடந்த டேபிள் வரிசைகளைத் தாண்டி, ஒரு மூலையில் பட்டுத் துணித் திரைகள் சூழ அமைந்திருந்த 'குடும்ப அறை'யில் நுழைந்து அமர்ந்தான்.

''என்ன ஸார் வேணும்?'' என்று விறைப் பாக வந்து நின்றான் சர்வர்.

குறுநாவல்



பாடல்கள்

அய்க்கண்

''குலோப் ஜாமுன், பாஸந்தி — ரெண்டு ஸெட் முதல்லே கொண்டு வா....'' என்ற தும் சர்வர் பறந்தான்.

நந்தினிக்கு அடுத்த ஆச்சரியம்.

''என்னங்க, இன்னிக்கு என்ன ஆச்சு உங்களுக்கு? எப்பவும் ஒரு வடை, காப்பி தானே நம்ம யூஷுவல் மெனு?''

''இன்னிக்கு யூஷுவல் இல்லே. ஸ்பெஷல்! நான் தினசரி வடை, காப்பி சாப் பிடற செலவுக்கு அம்மாகிட்டே பொய் சொல்லுவேன்.''

''என்னன்னு பொய் சொல்வீங்க?''

''வர்ற வழியிலே பணம் தவறி விழுந் திடுச்சு. பாவம், ஒரு பிச்சைக்காரனுக்குச் சாப்பாடு வாங்கிப் போட்டேன். பஸ் நெருக் கடியிலே யாரோ ஒரு ராஸ்கல் பிக்பாக்கெட் அடிச்சிட்டான்... இத்யாதி... பொய் சொல்லலியே. நான் அம்மாகிட்ட வாங்கின பணத்துக்குக் கணக்குச் சொல்லுவேன். ஆனா, இப்போ நம்ம செலவுக்கு இன்னொரு வழி கண்டுபிடிச்சிட்டேன்.''

''அடேயப்பா....! இந்த கொலம்பஸ் கண்டு பிடிச்ச வழி என்னவோ?'' என்று கேலியாக அவனைப் பார்த்துச் சிரித்தாள் அவள்.

''இப்போ எங்க ஆபீஸிலே தினசரி ஓவர் டைம் வேலை பார்க்கிறேன். ஓ.டி. சம்பளத்தை வாரா வாரம் எங்க ஆபீஸிலே கொடுத்திடு வாங்க. இந்த ஓ.டி. பணத்தைப் பத்தி அம்மா வுக்குத் தெரியாது. மாதச் சம்பளம் மட்டும் தான் அவங்களுக்குத் தெரியும்.''

''ஓஹோ... அப்படின்னா, ஓ.டி. சம்பளம் எல்லாம் உங்களுக்கா?''

''இல்லே, நம்மளுக்கு....! இந்தப் பணத் தைச் செலவழிக்க, நான் அம்மாவுக்குப் பயப்பட வேண்டியதில்லை....'' என்று நெஞ்சை நிமிர்த்தி முழங்கினான் அவன்.

அந்த வீர முழக்கத்தைப் பரிதாபமாகப் பார்த்தாள் நந்தினி.

அம்மாவின் கவனத்துக்குள் வராத பணத் தைச் செலவழிப்பதில் எவ்வளவு வீரம் இந்தப் பிள்ளைக்கு....?

எதிரே இருந்த அவனைக் கூர்ந்து பார்த்த படி, மூக்கு நுனியை இடது சுட்டு விரலால் லேசாகத் தடவியவாறு இருந்தாள் அவள்.

''நந்து! நீ இப்படி மூக்கைத் தடவுகிற மேனரிஸம் இருக்கே, அதுவே ஒரு தனி அழகுதான்.... குமிழ் மாதிரி எடுப்பாக இருக் கிற அழகு மூக்கை, உன் அழகான விரலால் தொடறதைப் பார்க்கிறப்போ, எனக்கு என்ன தோணுது தெரியுமா?'' என்று கண் களில் தாபம் சூடாகப் பொங்க, அவளைக் கிறக்கத்துடன் நோக்கினான் அவன்.

''சீய்...! அப்படிப் பார்க்காதீங்க... யாரா வது இதைப் பார்த்தால்'' என்று மெதுவாக, நாணத்தால் குங்குமக் குழம்பான கன்னங் களை மறுபக்கமாகத் திருப்பி, வெளியே பார்த்தாள் நந்தினி.

''இப்படியெல்லாம் பார்த்து, பேசிக் கொள்ள வசதியிருக்கும்னுதானே, இந்த

ஹோட்டலுக்குக் கூட்டி வந்தேன்?'' என்று அர்த்தபுஷ்டியாகச் சிரித்தான் சுந்தரம். ''இங்கே, நாம் மட்டும்தான். இன்னும் நெருக்கமாககூட'' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே, இன்னொரு ஜோடி கலகல என்ற சிரிப்பலைகளுக்கிடையே உள்ளே விஜயம் செய்து கொண்டிருந்தது.

அவனுடைய மயக்கத்தைப் பார்த்ததும் நந்தினியின் மனதில் சட்டென்று ஒரு நினைவு துள்ளி எழுந்தது.

அதை சுந்தரத்திடம் சொல்லிவிடலாமா? வேண்டாமா?

சொல்லத்தான் வேண்டும். அவனுடைய குடும்ப விஷயமாயிற்றே...?

ஏன், நாளைக்கு அவளுடைய குடும்ப விஷயமும்தானே ...?

''சுந்து! உங்ககிட்டே ஒரு முக்கியமான. விஷயம் சொல்லணும்...'' என்று தொடங்கினாள் நந்தினி.

''என்ன நந்து! சொல்லு.''

2

''உங்க தங்கை மாலா விஷயம்தான்.''

''மாலா விஷயமா? என்ன நந்து?'' என்று பதறினான் அண்ணன்.

தங்கை என்றால், அவனுக்கு உயிர் என்று நந்தினிக்குத் தெரியும். அவனுக்கு மட்டுமல்ல, தாய்க்கும் அவள் செல்ல மகள் என்பதையும் அவன் சொல்லியிருக்கிறான்.

கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பி.ஏ. படித்துக் கொண்டிருக்கிறாள் அவள்.

''ரெண்டு நாளைக்கு முன்னாலே, நானும் தம்பியும் பீச் பக்கம் போயிருந்தபோது, அங்கே மாலாவைப் பார்த்தேன்'' என்றாள் நந்தினி.

''அவளோட நீ பேசினியா?''

''நான் போய், பேசுற சூழ்நிலையில் அவள் இல்லை.''

''என்ன சொல்றே, நந்து?'' என்று பரபரத்தான் அவன்.

''யாரோ ஒரு இளைஞனுடன் நின்று பேசிக் கொண்டிருந்தாள்.''

''அவளோட கிளாஸ் மேட்டாயிருப்பான்.''

''காலேஜ்—மேட்'டைவிட, நெருக்கமாக நின்னு பேசிக்கிட்டிருந்தாங்க. ஒரு கூல் டிரிங்கிலே ரெண்டு ஸ்ட்ரா போட்டு உறிஞ்சுக்கிட்டிருக்கிற அளவுக்கு, நெருக்கமான 'மேட்' போலிருக்கு அவன்''

என்று வாதம் செய்த நந்தினியைக் கூர்மையாகப் பார்த்தான் சுந்தரம்

''காதலில் ஈடுபட்டிருக்கிற பெண்கள், இன்னொரு பெண் காதலித்தால், அதைத் தப்பு என்று கண்டிப்பார்கள். காதல் கல்யாணம் செய்து கொண்ட தாய்மார்கள், தங்களோட பிள்ளைகள் காதல் திருமணம் செய்து கொள்ள விடமாட்டார்கள். அடேயப்பா! இந்தப் பெண்களே ஒரு புதிர்தான்...!'' என்று சிரித்தான் அவன்.

''காதல் விஷயத்தில் மட்டுமல்ல, இன்னொரு விஷயத்திலும் பெண்கள் புதிர்தான். தான், திருமணமாகாமல், கன்னியாக இருக்கும்போது, வரதட்சணை என்பது கொடுமை, அநியாயம்னு திட்டுவாங்க — அதே பெண், திருமணமாகி, பிள்ளை பெற்றுத் தாயானதும், தன் பிள்ளைக்கு வரதட்சணை வாங்குறது நியாயம்னு வாதாடிப் பணம் வாங்கு வாங்க....''

''நோ, எல்லாப் பெண்களும் அப்படியில்லே. என் அம்மாவை எடுத்துக்கோ, எனக்கு வரதட்சணை ஒரு பைசா வேண்டாம்னு தீர்மானமாய்ச் சொல்லிட்டாங்களே!'' என்றான் சுந்தரம்.

அந்த நம்பிக்கையில்தான், நந்தினியும் சுந்தரத்தோடு தொடர்ந்து பழகி வந்தாள்.

ஏழை ஆசிரியர் குமாரசாமியின் மூத்த மகள் அவள். அடுத்து ஒரு தங்கை, தம்பி, கடைசித் தங்கை. பெரிய குடும்பம். சிறிய வருமானத்திற்குள் தட்டுத் தடுமாறி ஓடிக் கொண்டிருந்தது.

எஸ்.எஸ்.எல்.சி. முடித்து, மேலே படிக்க வசதியில்லாமல் டைப்ரைட்டிங், ஷார்ட் ஹாண்ட் பழகிக் கொண்டிருந்தாள் நந்தினி.

வரதட்சணைப் பிரச்னையால், கானல் நீராகத் தோன்றும் நந்தினியின் திருமணம், வரதட்சணை இல்லாமல் நடக்கும் என்று உறுதியளித்திருந்தான் சுந்தரம்.

''வரதட்சணை வேண்டாம்னு சொல்றது சரி. ஆனா, தன் மகனுக்கு ஒரு பணக்கார இடத்திலே சம்பந்தம் பண்ணணும்னு அவங்க ஆசைப்படலாம் இல்லையா?'' என்று ஒரு சந்தேகத்தை எழுப்பினாள் நந்தினி.

''அப்படியில்லே.... ஏழையோ, பணக்காரியோ என் மகனுக்குப் பிடிச்சிருக்கிற பொண்ணுதான் வேணும்னு பல தடவை அம்மா சொல்லியிருக்காங்க.''

இருவரும் கிளம்பினார்கள்.

இப்பொழுது விதவிதமான காதணிகள் வந்துள்ளன. அதன் திருகாணி தொலைந்து விட்டால் கவலை வேண்டாம். மெழுகுவர்த்தியை ஏற்றி ஒரு கிண்ணத்தில் தண்ணீர் எடுத்து அதில், எரியும் மெழுகு வர்த்தியை சாய்த்துப் பிடித்தால் பொட்டு வட்டமான அழகான திருகாணிக்குப் பதில் உபயோகப்படுத்தலாம்.


— பாலா.


பேனினால் தலைமுடி உதிரும்
நறுமணம் கமழும் கென்ஸ் தைலத்தை
உபயோகித்து ஈறையும், பேனையும்
அறவே ஒழியுங்கள். தலை முடியை
பாதுகாத்துக் கொள்ளுங்கள்.
கென்ஸ்
'சிறந்த பேன் நாசினி'
ஈறுகளையும் கொல்லும்
பென்சொகெயின் கலந்தது.
தீங்கற்றது.
PHARM PRODUCTS
KENZ
பார்ம் ப்ராடக்ட்ஸ்
பிரைவேட் லிமிடெட்
தஞ்சாவூர் - 613 007
தமிழ்நாடு
விற்பனை விவரங்களுக்கு
எழுதவும்.

PP 274/86/TAM


தபால் மூலம் சித்திரக்கலை !
SANTHANU'S CHITRA VIDYALAYAM
1957 25 1982
SILVER JUBILEE
படம் வரைய,
வர்ணம் தீட்ட வேண்டுமா?
28 வருடங்களுக்கும் மேலாக, தங்கள்
நம்பிக்கைக்கும், திறமைக்கும் பெயர் பெற்ற
சந்தனுவின்
சித்திர வித்யாலயத்தின் மூலம்
தபால் மூலம், தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு,
ஹிந்தி ஆகிய 5 மொழிகளில் வீட்டிலிருந்தபடியே
தங்களின் சித்திர ஈடுபாட்டையும், திறமையையும்
பயனுள்ள முறையில் முன்னேற்றிக் கொள்ளலாம்.
விவரங்களுக்கு 90 பைசா தபால் தலைகளுடன் விண்ணப்பிக்கவும்.
சந்தனுவின் சித்திர வித்யாலயம்
C/o. சித்திரக் குள்ளன் (G), 179 சிங்கண்ண தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-600 002.

"அப்பா, நான் கீழே சறுக்கி வரும்போது, என்னைப் பிடித்துக் கொள்வாயா?"



சுயமாக சறுக்கப் போவதில் உள்ள பரபரப்பு, கீழே விழுந்து விட்டால் அணைத்துக்கொள்ள உங்கள் அன்புக் கரங்கள் இருக்கின்றன என்ற எதிர்பார்ப்பு. இதுவே பாதுகாப்பிற்கு உங்கள் குழந்தை உங்களையே நம்பி உள்ளது என்பதை குறிக்கிறது. விளையாட்டோ, படிப்போ, உங்கள் ஆக்கமும், ஊக்கமும், அரவணைப்பும் அதற்கு எப்போதும் தேவை. உங்களால் அதனை எப்போதும் அளிக்க முடியுமா? அதாவது உயர்படிப்பு, தனி வாழ்க்கை துவக்கம், திருமணம் முதலிய கால கட்டங்களில்—உங்கள் உதவி தொடர்ந்து கிடைத்திட வழி வகை செய்திருக்கிறீர்களா? இன்றே ஆயுள் பாதுகாப்பு செய்து, உங்கள் குடும்பத்தின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள், ஏனெனில் நீங்கள் இன்று இடும் திட்டங்களே நாளைய நல்வாழ்வுக்கு அடித்தளம். ஆயுள் பாதுகாப்பு உங்கள் குடும்பத்தினரிடம் உங்களுக்குள்ள அன்பினைக் குறிக்கும் பொருள் பொதிந்த சின்னம்.

அதிக போனசுடன்கூடிய ஆயுள் பாதுகாப்பு இப்பொழுது நிறைந்த பயனைத் தருகிறது.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா
30 ஆண்டுகள் மக்கள் சேவையில்

NPS/LIC/TA

3

அன்று கல்லூரிக்குச் சென்ற மாலா, மாலை ஆறு மணி ஆகியும் திரும்பவில்லை.

பதறிப்போன தாய் மீனாட்சி, அக்கம்பக்கம் தோழிகள் வீட்டில் தேடிவிட்டு, சுந்தரத்தைக் கல்லூரிக்கு அனுப்பி வைத்தாள்.

சுந்தரம் கல்லூரிக்கு ஓடி வந்து விசாரித்ததில்—அவள் மத்தியானம்முழுவதும்வகுப்புக்களுக்கே வரவில்லை என்றும், மாமல்லபுரத்துக்கு பிக்னிக் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தாள் என்றும், தகவல்கள் கிடைத்தன.

இனி, இரவு எட்டு மணிக்கு மேல், மாமல்லபுரம் போய், மாலாவை எங்கே தேடுவது என்று குழம்பிக் கொண்டிருந்தான் அவன்.

இரவு முழுவதும் மீனாட்சியும் சுந்தரமும் தூங்கவேயில்லை.

தன் செல்ல மகளுக்கு என்ன ஆயிற்றோ என்று, மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருந்தாள் தாய்.

மறுநாள் காலை —

வீட்டுக்குள் நுழைந்தாள் மாலா.

மகளைக் கண்டதும், எரிமலையாகக் கொதித்து வெடித்தாள் தாய்.

"அடிப் பாவி! என்ன காரியம்டி செஞ்சிட்டே? கல்யாணம் ஆகாத பொண்ணு, இப்படி வெளியூர் போய் ராத்திரி தங்கிட்டு வரலாமா? அக்கம்பக்கம் தெரிஞ்சா, நம்மைப் பத்தி என்ன நினைப்பாங்க?"

"அம்மா! நீ வைக்கிற ஒப்பாரியிலிருந்துதான் அக்கம்பக்கம் பூராவும் இது தெரியப் போகுது. அம்மா! என்னைப் பத்தி மத்தவங்க நினைக்கிறதைப்பத்திஎனக்குக்கவலைஇல்லே. இது உங்க காலம் இல்லே. எங்க காலம். நாகரீக காலம். நானும் என் காதலரும் பிக்னிக் போனோம். திரும்பறப்போ, அவரோட கார் ரிப்பேராயிடுச்சு. அதனாலே அங்கேயேதங்கவேண்டியதாயிடுச்சு. இதிலே என்ன தப்பு?"

"மாலா! புரிஞ்சுதான் பேசறியா? கல்யாணத்துக்குமுன்னாலேஒருத்தனோடராத்திரி தங்கின விஷயம் வெளியே தெரிஞ்சா, ஊரிலே எவன் உன்னைக் கட்டிக்குவான்?" என்று பொரிந்தான் அண்ணன்.

"ஊரிலே எவனோ ஒருத்தன் ஏன் என்னைக் கட்டிக்கிறான்? என் காதலர்தான் என்னைக் கட்டிக்கப் போறாரே?" என்று சிரித்தாள் மாலா.

"என்ன சொல்றே மாலா? அவன் சொந்தக் கார் வச்சிருக்கிறவன் என்கிறே. அவ்வளவு பணக்காரப் பையன், நம்ம ஏழை வீட்டிலே சம்பந்தம் வச்சுக்குவானா?" என்று திகைப்புடன் கேட்டான் சுந்தரம்.

"அண்ணா! உனக்குக் காதலைப் பற்றித் தெரியாது. காதல், இந்த மாதிரி ஏழை — பணக்காரன், உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி அந்த மதம், இந்த மதம் என்கிற வித்தியாசமெல்லாம் பார்க்கிறதில்லே..." என்று அண்ணனுக்கு உபதேசம் செய்தாள் மாலா.

"உன் காதலன் பெயரைச் சொல்லு. நாளைக்கு நான் அவனைக் காலேஜிலே பார்த்துப் பேசறேன்" என்றான் சுந்தரம்.

"ஓ.கே. அப்படி ஆக வேண்டிய காரியத்தைப் பார், அண்ணா! அவர் பெயர் ரமேஷ். எக்னாமிக்ஸ் எம்.ஏ. செகண்ட் இயர் படிக்கிறார். நாளைக்கு நானே அவரை காலேஜிலே காட்டறேன்..." என்று லேசாக வெட்கப்பட்டபடி உள்ளே போனாள் மாலா.

பெருத்த நம்பிக்கையுடன் மறுநாள் கல்லூரிக்குப் போய், ரமேஷைச் சந்தித்துப் பேசினான் சுந்தரம்.

"ஆல் ரைட் மிஸ்டர் சுந்தரம்! நான் பழகின பெண்களிலே, மாலா ஒரு மிக நல்ல பெண்தான்! அவளைக் கல்யாணம் பண்ணிக்கிறதிலே எனக்கு ஆட்சேபனை இல்லே. அவள் என்னை மிகவும் விரும்புறதினாலே, நான் அவளையே கட்டிக்கிடறேன். ஆனால் ஒரு கண்டிஷன். என் மம்மி, அவளை மருமகளாக ஏத்துக்கச் சம்மதிக்கணும். நீங்க வாங்க. இப்பவே மம்மியைப் பார்த்து இந்த விஷயத்தைப் பேசிடலாம்..." என்று சுந்தரத்தைக் காரில் கூட்டிக் கொண்டு புறப்பட்டான் ரமேஷ்.

"இதுதான் எங்க வீடு" என்று அவன் இறங்கி நுழைந்த பங்களாவைப் பார்த்ததும் திகைத்துப் போய்விட்டான் சுந்தரம்.

4

பெரிய வீதியில் பெருத்த ஆகிருதியுடன் வீற்றிருந்தது அந்த பங்களா.

பங்களாவின் அளவுக்குப் பொருத்தமான பிரும்மாண்டமான போர்ட்டிகோவின் ஓரத்தில் ஒரு மோட்டார் சைக்கிள் நின்று கொண்டிருந்தது.

முன்னால் இருந்த வரவேற்பு ஹாலில் சுந்

காலையில் செய்த கூட்டு மீந்து விட்டதா? சிறிது பச்சை மிளகாய், இஞ்சி, பூண்டு, வெங்காயம், தக்காளி, நறுக்கி, கரம் மசாலா சேர்த்து எண்ணெயில் வதக்கிப் பின்பு கூட்டையும் சேர்த்துக் கொதிக்கவிட்டு இறக்கினால் மாலை டிபனுக்குக் குருமா ரெடி. புளிப்பு வேண்டுமானால் எலுமிச்சைச் சாறு சேர்த்துக் கொள்ளவும்.


— ரம்யா.



தரத்தை உட்கார வைத்துவிட்டு உள்ளே சென்முன் ரமேஷ்.

வழவழப்பான பளிங்கு பதித்த தரைக்கு 'மேட்ச்'சாக, படாடோபமான, ஃபர்னிச்சர், ஃபர்னிச்சருக்கு 'மேட்ச்'சாக ஆங்காங்கே, அலங்காரக் கலைப் பொருள்கள், கவர்க் கடி காரம், சர விளக்குகள் எல்லாம்...

அந்த இடத்திலே 'மேட்ச்' சாகாமல் தனித்



திருந்தது சுந்தரம்தான்!

வேலைக்காரன் கொண்டுவந்த காப்பியைக் குடித்துவிட்டு, அதன் பணக்கார ருசியை ரசித்து அசை போட்டுக் கொண்டிருந்தான் அவன்.

பட்டாடை சரசரக்க, வைர நகைகள் ஜொலிக்க, பணக்காரக் களை கட்டியங் கூறி வர, கம்பீரமாக உள்ளேயிருந்து வந்து, சோபாவில் ஆரோகணித்தாள் அந்த அம்மாள்.

"மிஸ்டர் சுந்தரம்! நான்தான் ரமேஷின் மம்மி, மிஸஸ் சிவகாமசுந்தரி... நான் எதையும் பளிச்சென்று நேரடியாக வெட்டு ஒன்று துண்டு ரெண்டு பேசுறவள். வழவழாப் பேச்சு பிடிக்காது. நான் சொல்றதுதான் இந்த பங்களாவிலே ஃபைனல். அண்டர்ஸ்டாண்ட்? ரமேஷ் எல்லாத்தையும் என்கிட்டே சொன்னான். அவன் உங்க சிஸ்டரை விரும்புகிறதாகச் சொன்னான். பொதுவாக, நான் என் பையன்களின் விருப்பங்களுக்குக் குறுக்கே நிற்கிறதில்லை. உங்க தங்கையை நான் மருமகளாக ஏத்துக்கத் தயார். ஆனா அதற்கு முன்னாலே என் சம்பந்தியோட ஸ்டேட்டஸ் என்னன்னு தெரிஞ்சுக்கணும்" என்று அவள் கடுமையான குரலில் ஆரம்பித்ததும், சுந்தரம் வழக்கத்திற்கு அதிகமாகவே பயந்து போய்விட்டான்.

அந்த மாளிகையின் வளத்தைப் புரிந்து கொண்ட அவன், மடமட என்று தன் வீட்டின் நிலைமையைப் பற்றிச் சொல்லிவிட்டான்.

அதைக் கேட்டதுமே சிவகாமசுந்தரியின் அகன்ற முகம், சுருக்கென்று சுருங்கிவிட்டது.

சுந்தரத்தை ஓர் அற்பப் புழுவைப் பார்ப்பதுபோல், ஏறிட்டுப் பார்த்தாள்.

''அப்படியா...? உங்க தங்கையை காலேஜிலே பார்க்கிறப்போ, அவள் ட்ரஸ், அலங்காரம், பேச்சு எல்லாம் ஒரு பணக்காரப் பொண்ணு மாதிரி இருந்திச்சுன்னு ரமேஷ் சொன்னானே?''

''அவள் எனக்கு ஒரே தங்கை. செல்லப் பொண்ணு. அவளுக்கு ஏழைங்கிற தாழ்வு மனப்பான்மை ஏற்படக்கூடாதுங்கிறதுக்காக, அவளுக்கு நல்லடிரெஸ், காஸ்மெடிக்ஸ் பாக்கெட் மணி எல்லாம் கொடுப்பேன்.''

''ஓ...! அந்தட்ரெஸ், காஸ்மெடிக்ஸிலேயே உங்க சம்பாத்யம் எல்லாம் போயிடுச்சாக்கும்! ஆல் ரைட் மிஸ்டர் சுந்தரம்! நான் லேடீஸ் கிளப் பிரஸிடெண்ட். அதனாலே அநியாயமாக ஒரு பெண்ணை ஏமாற்றத் தயாராயில்லே. எங்க கிளப்பிலே, யாரும் வரதட்சணை வாங்கக் கூடாதுன்னு தீர்மானம் போட்டிருக்கோம். அதனால நானும் வரதட்சணை பைசா வாங்கமாட்டேன். ஆனால் என் சம்பந்திக்கு சோஷல் ஸ்டேட்டஸ் இருக்கணும்னு நினைச்சிருந்தேன். அதில்லாவிட்டாலும் பரவாயில்லே. ஏழையோட சம்பந்தம் பண்ணின சீர்திருத்த, சமதர்மவாதிங்கற பெயர் எனக்குக் கிடைக்கும். பட் ஒன் திங், மிஸ்டர் சுந்தரம்! என்னோட மூத்த மருமகள் ஐம்பது பவுன் நகை, சீர் சாமான்களோட ஒரு காரும் சீதனமாகக் கொண்டு வந்திருக்கா. இன்னொரு மருமகள் நாற்பது பவுன், வைர நகை, சீரோட புல்லெட் மோட்டார் சைக்கிள் கொண்டு வந்தவ. அதனால் என் மூன்றாவது மருமகள், ரமேஷின் மனைவி அட்லீஸ்ட் நாற்பது பவுன் நகையோடையாவது வரணும். மற்றதை நான் பார்த்துக்கிடறேன். நாற்பது பவுன் நகைகூட இல்லாம உங்க தங்கை இங்கே மருமகளாக வந்தால், மற்ற மருமகள்களின் அந்தஸ்தைப் பார்த்து இன்ஃபீரியாரிடி காம்ப்ளெக்ஸ் வந்திடும். ஸோ, நீங்க என் மருமகளுக்கு நாற்பது பவுனாவது நகை போட்டுக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க முடியும்னா, நான் ரெடி...''

புழுங்கலரிசி, கோதுமை சம அளவு எடுத்து, நல்ல வாசனை வரும் வரை வறுத்து, மிஷினில் அரைத்துக் கொள்ள வேண்டும். இந்த மாவைக் கஞ்சியாகச் செய்து, பால், சர்க்கரை சேர்த்து குழந்தைகளுக்குக் கொடுத்தால் மிகவும் போஷாக்கு தரும். பெரியவர்களும் அருந்தலாம்.

— கௌரி.

சுந்தரம் பிரமித்துப் போய் உட்கார்ந்திருந்தான். என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை.

''மிஸ்டர் சுந்தரம்! எனக்கு ஒரு முக்கியமான எங்கேஜ்மெண்ட்—க்ளப் அனுவல் மீட்டிங் இருக்கு. நீங்க யோசிச்சுப் பதில் சொல்லுங்க. கத்தரிக்காய், காய்கறி வியாபாரம் மாதிரி, பேரம் பேசாதீங்க. சொன்னால் சொன்னதுதான்! நீங்க வீட்டிலே அம்மாகிட்டே கேட்டு முடிவு சொல்லுங்க. யூ மே கோ நவ்'' என்று எழுந்துவிட்டாள் மிஸஸ் சிவகாமசுந்தரி.

ஆழ்ந்த கவலையுடன் வீட்டுக்குத் திரும்பினான் சுந்தரம்.

சிவகாமசுந்தரியின் பங்களாவைப் பற்றிச் சொன்னதும் பூரித்த மீனாட்சி, அந்த மம்மியின் நிபந்தனையைக் கேட்டதும் குறுகிப் போய் விட்டாள்.

எப்பாடுபட்டாவது, அந்த நிபந்தனையை நிறைவேற்றிவிட்டால், தன் செல்ல மகள் பெரிய பணக்கார வீட்டு மருமகளாக செல்வ போகத்தில் வாழ்வாளே என்ற ஆசை, தாயின் மனதிலே துளிர் விடத் தொடங்கியது.

அவனுடைய சேமிப்பு, ஆபீஸ் லோன்,. நண்பர்கள் கடன் எல்லாவற்றையும் வாங்கினால் ஒரு பத்தாயிரம் கிடைக்கும். கிராமத்திலுள்ள பூர்விக வீடு. நிலத்தை விற்றால் எட்டாயிரம் தேறும். இவற்றை வைத்து, கல்யாணச் செலவு, சீர் வகையறுக்களை நடத்திவிடலாம்.

''மாலாவோட நகைகளோட என் நகைகளையும் சேர்த்தா, முப்பது பவுன் தேறும். இன்னும் பத்து பவுன் வாங்க, பணம் வேணும்...'' என்று தாயும் மகனும் சேர்ந்து திட்டம் போட்டார்கள்.

சட்டென்று ஒரு யோசனை தோன்றியது மீனாட்சிக்கு.

''சுந்து! கவலைப்படாதேடா... பத்தாயிரத்துக்கு ஒரு வழி இருக்கு. அடுத்த தெருவிலே, கல்யாணத் தரகர் குப்புசாமி இருக்காரே, அவரைக் கூட்டிக்கிட்டு வா.''

சுந்தரம் திகைத்தான்.

''தரகர்கிட்டே பத்தாயிரம் கடன் வாங்கலாமா? அவ்வளவு வசதியுள்ளவரா அவர்?''

''வசதி இல்லே, ஜாதகங்கள் இருக்கே அவர்கிட்டே? யாரோ ஒரு பெண் வீட்டிலே, உனக்குப் பத்தாயிரம் வரதட்சணை கொடுத்து இருபது பவுன் நகையும் சீரும் செய்கிறதாகச் சொன்னாங்கன்னு போனமாதம் என்கிட்டே சொன்னாரு. நான் சுந்தரத்துக்கு இப்போ என்ன அவசரம்? தங்கச்சிக்குக் கல்யாணம் பண்ணிட்டுத்தான் அவனுக்குப் பண்ணனும்னு சொல்லியனுப்பிட்டேன். இப்போ, உன் கல்யாணத்துக்குப் பிறகுதான், தங்கச்சி கல்யாணம் நடக்கணும்னு இருக்கு!''


திடுக்கிட்டுப் போனான் சுந்தரம்.

''என்னம்மா சொல்றே?''

''ஆமான்டா.... நானும் வரதட்சணையே



பேன் தொல்லையா?
உடனடி நிவாரணம்
மஸ்காரா
பேன் மருந்து
மயிர் கால்களில் பரவி
பேன் மற்றும் ஈறு
பொடுகு ஆகியவற்றை
ஒழிக்கும் சிறந்த மருந்து
மஸ்காரா பேன் மருந்து
இன்றே வாங்கிடுவீர்
எல்லா கடைகளிலும் கிடைக்கும்.
CLEVER ALICE
78, BIG STREET, MADRAS-5.
PHONE : 843128
வியாபார விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன !



கொசுக்களா?
ROOSTER
இரட்டைச் சுருள் எளிதாகப் பிரிகிறது.
எளிதில் உடையாது. அதிக புகை வராது.
உங்கள் குடும்பத்திற்கு இரவு முழுவதும் இனிய
உறக்கத்தைத் தர பாதுகாப்புடன் பலனளிக்கும்
ரூஸ்டர்
உபயோகக் குறிப்பு

வாங்கக் கூடாதுன்னு வைராக்கியமாயிருந்தேன். ஆனா இப்போ? அப்படி வாங்கித்தான் என் மகள் கல்யாணத்தை நடத்த முடியும் போலிருக்கு. அதனாலே என் வைராக்கியத்தை விட்டுட்டு, வரதட்சணை வாங்கப் போறேன். உனக்குப் பத்தாயிரம் ரூபாய் வரதட்சணை வாங்கி, அதை வச்சு மாலாவின் கல்யாணத்தை நடத்திடலாம்'' என்ற தாயின் திட்டத்தைக் கேட்டதும், அவன் திக்பிரமையடைந்து, சிறிது நேரம் பேச நா எழாமல் இருந்தான்.

5

வழக்கமாக நிற்கும் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தாள் நந்தினி.

வழக்கமான நேரத்திற்கு அங்கே வந்த சுந்தரத்தின் முகத்தில், வழக்கமான உற்சாகத்தைக் காணோம்.

''என்னங்க, ஏன் ஒரு மாதிரியாயிருக்கீங்க...? உடம்புக்கு ஏதாவது?'' என்று பதறினாள் அவள்.

''நோ, உடம்புக்கு ஒண்ணுமில்லே. மனசுதான் சரியில்லே'' என்று அவள் முகத்தைப் பார்க்காமல், பார்க்கத் தைரியம் இல்லாமல், வேறெங்கோ பார்த்தபடி நடந்தான் அவன்.

''என்னங்க விஷயம்? சொல்லுங்க.''

''ஒண்ணுமில்லே...'' என்று தயங்கினான் அவன்.

''நீங்க ஒண்ணும் இல்லேன்னு சொல்றதிலேயே, நெறைய இருக்குதுன்னு தெரியுது.''

''இல்லே நந்து! நான் விவரமாகச் சொல்றேன்'' என்று ஆரம்பித்து, மாலாவின் நடத்தை முதல் சிவகாமசுந்தரியின் நிபந்தனை, மீனாட்சியின் திட்டம்வரை, எல்லாவற்றையும் சொன்னான் அவன்.

அவன் பேச்சு முழுவதையும் கேட்டு, சில விநாடிகள் அமைதியாக இருந்த நந்தினியின் நெஞ்சுக்குள்ளிருந்து ஒரு நெடியமூச்சு வெளியேறியது.

''ஸோ... மிஸ்டர் சுந்தரம்! நீங்க பத்தாயிரம் ரூபாய் வரதட்சணை கேட்கிறதுக்கு, ஓர் அருமையான நியாயமான காரணம் இருக்கு. அதனாலே அந்தப் பத்தாயிரம் ரூபாய் வரதட்சணை கொடுக்கிற பெண்ணை நீங்க கல்யாணம் பண்ணிக்கிறதிலே தப்பு இல்லே. அதனாலே இரண்டு லாபம் — உங்களுக்கும் ஒரு பணக்கார மனைவி கிடைக்கிறா. உங்க தங்கைக்கும் ஒரு பணக்கார மாமியார் கிடைக்கிறாங்க...'' என்று சாதாரணமாக, சலனமில்லாத குரலில் அவள் சொன்னதும், சுந்தரம் விக்கித்துப் போய்விட்டான்.

''நந்து! என் நிலைமையைப் புரிஞ்சுக்காம, இப்படி நிர்த்தாட்சண்யமாகப் பேசறியே? என்னாலே அம்மா சொல்றதை மீறவும் முடியலே, சம்மதிக்கவும் முடியலே.''

''எப்போதுமே அம்மா சொல்றபடி நடக்கிற நீங்க, இப்போ அவங்க சொல்றபடி நடக்கிறதுக்கு ஒரு நல்ல காரணமே இருக்கு, மிஸ்டர் சுந்தரம்!''

''நந்து! நீ நினைக்கிறபடி இல்லே, இந்தத் தடவை அம்மாவையே எதிர்த்துப் பேசிட்டேன். பத்தாயிரத்துக்காக நீங்க சொல்ற பெண்ணைக் கட்டிக்க முடியாதுன்னு சொல்லிட்டேன். நான் நந்தினியைக் காதலிக்கிறேன். அவளைத்தான் கட்டிக்குவேன்னு உறுதியாச் சொல்லிட்டேன்'' என்று அவன் தொடங்கியதும் குறுக்கிட்டாள் அவள்.

''சரி, நீ யாரை வேண்டுமானாலும் கட்டிக்கோ. ஆனால் அவள் எனக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுக்கணும்னு உங்க அம்மா சொல்லிட்டாங்க இல்லையா?''

திகைப்புடன் அவளைப் பார்த்தவாறு இருந்தான் சுந்தரம்.

''என் நந்தினியையே உனக்குப் பத்தாயிரம் ரூபாய் வரதட்சணை கொடுக்கச் சொல்றேன்னு சொல்லிட்டு வந்திட்டீங்க இல்லையா?''

வெண்ணெய் எடுக்கும் போது, கையில் ஒட்டாமல் வர, புளித் தண்ணீரில் கையலம்பி அதே கையில் எடுத்தால் ஒட்டவே ஒட்டாது. எப்படி எண்ணெய்க்கு, சீக்காய் எதிரியோ, அதுபோல் வெண்ணெய்க்கு, புளி.

— ரங்கநாயகி.

அவன் முகத்தைப் பார்க்கத் திராணியில்லாமல், தரையைப் பார்த்தவாறே மௌனமாக நின்றான் அவன்.

''மிஸ்டர் சுந்தரம்! என்னை மன்னிச்சுடுங்க. வரதட்சணை கொடுத்து உங்களைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு நான் சொல்லலே. நீங்க கேட்கிற வரதட்சணைப் பணத்தை என்னாலே கொடுக்க இயலாது. அதனாலே, நீங்க அப்படிக் கொடுக்கிற வசதியுள்ள பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்குங்க. என்னை மறந்திடுங்க...'' என்று நிதானமாகச் சொல்லிவிட்டு, அப்போது வந்து நின்ற பஸ்ஸில் அது எந்த பஸ் என்று பாராமலே, ஏறிக் கொண்டு சென்றுவிட்டாள் நந்தினி.

சுந்தரம் திகைப்பில் சிலையாக நின்றான்.

மறுநாள் —

அவன் அலுவலகத்திற்குப் போகாமல் நந்தினி டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட்டுக்குப் போயிருக்கும் நேரம் பார்த்து, அவளது வீட்டுக்குச் சென்றான்.

முன் அறையில் ஒரு துணி ஈஸிசேரில் உட்கார்ந்தபடி, கட்டுரை ஏடுகளைத் திருத்திக் கொண்டிருந்தார் குமாரசாமி.

''ஸார் வணக்கம்'' என்று கும்பிட்டபடி வரும் இளைஞனை வரவேற்று உட்கார வைத்தார் அவர்.

''ஸார்! என் பெயர் சுந்தரம்... பி.ஏ. படிச்சிருக்கேன். மவுண்ட் ரோடு அருணா கெமிக்கல்ஸ் ஆபீஸிலே யு.டி.ஸி.யாய் வேலை பார்க்கிறேன்'' என்று தொடங்கினான் அவன்.

உள்ளே யாரோ வருவதைக் கண்டு, அடுப்படியிலிருந்து லொக் லொக் என்று இருமியவாறு அங்கே வந்த வள்ளி, வாசற்படியில் வெளியில் நின்றபடி, உள்ளே பேசுவதைக் கவனித்துக் கொண்டிருந்தாள். சுந்தரம் நந்தினியைச் சந்தித்தது முதல் நேற்று அவள் நிர்தாட்சண்யமாகப் பிரிந்தது வரை விவரமாகச் சொன்னான்.

''இதையெல்லாம் என்கிட்டே ஒண்ணுமே சொல்லலியே நந்தினி...''

''அவள் சொல்லமாட்டாள்னு எனக்குத் தெரியும். அதனால்தான், அவளுக்குத் தெரியாம, உங்ககிட்டே நேரடியாகச் சொல்ல வந்தேன். ஸார்...! உங்களால பத்தாயிரம் கொடுக்க முடியுமான்னு யோசிச்சுப் பாருங்க. வேறே நகையோ, சீரோ, சீதனமோ எதுவும் வேணாம். பத்தாயிரம் ரூபாய் மட்டும் போதும்னு எங்க அம்மா எனக்காக ஒப்புக் கொண்டுட்டாங்க. உங்களைப் பத்தியும் எனக்குத் தெரியும்...''

''ஆமாம்பா. நானொரு ஏழை வாத்தியார். என் சம்பாத்யம், என் குடும்பத்திலே வாய்க்கும் கைக்குமே சரியாயிருக்கு. நந்தினி, டைப்ரைட்டிங் முடிச்சு, வேலை பார்த்துச் சம்பாதிச்ச பிறகுதான், அவள் கல்யாணம் பண்ணிக்க முடியும். இந்த நிலைமையில இப்போ என்னாலே என்ன செய்ய முடியும்?'' என்று ஆற்றாமையோடு சொல்லிக் கண் கலங்கினார் ஆசிரியர்.

''ஸார்! முயற்சி செஞ்சு பாருங்க ஸார்! நீங்க சொல்ற பதிலிலே, நந்தினி வாழ்க்கை இருக்கோ இல்லையோ, என் வாழ்க்கை அதில்தான் ஸார் இருக்கு. நான் வர்றேன். நான் வந்த விஷயம் அவளுக்குத் தெரிய வேண்டாம். இரண்டு நாள் கழித்து மறுபடி வர்றேன்'' என்று சொல்லிவிட்டுச் சென்றான் சுந்தரம்.

அவல் உப்புமா செய்யும்பொழுது, கேரட்டையும், உருளைக் கிழங்கையும் துருவி வெங்காயத்துடன் போட்டு வதக்கி, பின் அவலைப் போட்டு கிளறி இறக்கினால், உப்புமா ருசியாகவும், மணமாகவும் கிச்சடி போன்றும் இருக்கும்.

— பாலா.

சிந்தனையில் ஆழ்ந்த குமாரசாமியின் முன்னால், லொக் லொக் என்று இருமியவாறு வந்து நின்றாள் வள்ளி.

''என்னங்க, பையனைப் பார்த்தா, ரொம்ப நல்ல பையனாத் தெரியுது. நகை நட்டு சீர் ஒண்ணும் வேணாம்கிறான். வெறும் பத்தாயிரம் ரூபாய்தானே கேக்கிறான்? எப்போ செஞ்சாலும் இதைவிட அதிகமாத்தானே ஆகும்? இப்பவே இந்தப் பையனுக்கு முடிச்சிட்டா என்ன?'' என்று யோசனை சொன்னபடி, கீழே உட்கார்ந்தாள்.

''பையன் நல்லவன்தான். ஆனால் பத்தாயிரத்துக்கு எங்கே போறது?'' என்று தலையில் ஆங்காங்கே இருந்த தலைமுடிகளிடையே விரலை நுழைத்துக் கோதிக் கொண்டார் அவர்.

சட்டென்று நினைவு வந்தது வள்ளிக்கு.


''என்னங்க, உங்க ஸ்கூல் ஹெட்மாஸ்டர் தனியாத்தானே ஏழெட்டு வருசமாயிருக்கார்? செலவு கிலவு ஒண்ணும் இருக்காதே. நிறையச் சேர்த்து வச்சிருக்க மாட்டார்? போய், அவர்கிட்டே நிலைமையைச் சொல்லிக் கேளுங்களேன்?''

''வெரிகுட், நல்ல யோசனைதான். இப்பவே போறேன்'' என்று கிளம்பினார் குமாரசாமி.

6

குமாரசாமி விஷயத்தைச் சொன்னதும், தலையை ஆட்டினார் ஆசிரியர் மாணிக்கம்.

''சேவிங்க்ஸ்னு பைசா வைக்கவிட மாட்டாங்க என் புத்திரசிகாமணிகள்! மாதா மாதம் ஒவ்வொருத்தனும் வந்து அழுது அடம் பிடிச்சு, என்கிட்டே மீதியிருக்கிறதை வாங்கிக்கிட்டுப் போயிடுவானுங்க. கடைசி காலத்தில ஏம்ப்பா தனியே இருந்து கஷ்டப்படறீங்க? என்னோட வந்து இருங்கன்னு ஒருத்தனும் கூப்பிடமாட்டான். ஒவ்வொருத்தனுடைய ஊரும் எனக்கு ஏன் பிடிக்காது, கிளைமேட் ஏன் ஒத்து வராதுன்னு புதிசு புதிசாய்க் காரணம் கண்டுபிடிச்சுச் சொல்லிக்கிட்டிருக்கானுங்க! சரி, அது கிடக்கட்டும் மிஸ்டர் எம்.கே.! என் பையன்களுக்குத் தெரியாம, பத்தாயிரம் ரூபாய்க்கு ஒரு இன்ஷுரன்ஸ் பாலிஸி எடுத்துப் பணம் கட்டிக்கிட்டு வர்றேன். அந்த பாலிஸி இந்த டிசம்பர் ஒண்ணாம் தேதி முடியுது. டிசம்பர் பத்தாம் தேதிக்குள்ள பத்தாயிரம் வந்திடும். அதை அப்படியே உங்ககிட்டே தந்திடறேன். ஜாம்ஜாம்னு கல்யாணத்தை நடத்திடுங்க. அந்தப் பணத்தை நீங்கத் திருப்பித் தர வேண்டாம். என் கடைசிக் காலம் வரை, ஏதோ கஞ்சியோ கூழோ எனக்கு ஊத்தி, செத்தவுடனே மகன்களுக்குத் தந்தி கொடுத்து வரவழைச்சுத் தூக்கிப் போட்டுடுங்க. போதும்...'' என்றார் மாணிக்கம்.



KCUB—Where a royal welcome awaits you !

Step into any one of our branches and avail of our growth oriented saving schemes, geared to suit individual saving capacity and need!

We offer:

- Monthly savings
- Cash Certificates.
- Vamana Viswarupa Deposit.
- Fixed Deposit.

KCUB

THE KUMBAKONAM CITY UNION BANK LTD.,

Registered Office: Kumbakonam-612 001

KCUB—The Bank that's committed to growth — your growth.

MCS KCUB 220

"இவ்வளவு உதவி செஞ்ச உங்களை, தெய்வமாய் நினைச்சுக் கும்பிட்டு, நாங்க காப்பாத்துவோம் ஸார்!" என்று நன்றியுணர்வில் குரல் தழுதழுக்கச் சொன்னார் குமாரசாமி.

அடுத்த நாள் சுந்தரத்திடம் செய்தியைச் சொன்னார் அவர்.

மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிய அவன், தலைமையாசிரியரை மானசீகமாகக் கும்பிட்டுவிட்டு, தாயிடம் ஓடி விஷயத்தைத் தெரிவித்தான்.

ஜோசியர் வீட்டுக்குப் போனார்கள் இருவரும்.

"டிசம்பர் பதினைந்தாம் தேதிதான் கடைசி முகூர்த்தம். அதற்குப் பிறகு மார்கழி வந்துடறது" என்று புருவத்தைச் சுருக்கினார் அவர்.

மகனுடைய திருமணத்தைச் சீக்கிரம் முடித்துவிட வேண்டும் என்று அவசரப்பட்டாள் மீனாட்சி.

"டிசம்பர் பத்தாம் தேதிக்குள் பணம் வந்திடும் இல்லையா? அப்படின்னா, பதினைஞ்சாம் தேதி முகூர்த்தமே வச்சுக்கலாம்" என்று ஒப்புக் கொண்டாள் அவள்.

இரு வீடுகளிலும் திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

டிசம்பர் ஆறாம் தேதி, தலைமையாசிரியர் மாணிக்கம் வீட்டுக்குப் போன குமாரசாமியின் தலையிலே ஒரு பெரிய இடி விழுந்தது.

சில நிமிடங்களுக்கு முன், திடீரென்று மாரடைப்பால் மாணிக்கம் காலமாகிவிட்டார்.

மகன்களுக்குத் தந்திகள் பறந்தன. அவர்களும் பறந்து வந்து, பிணத்தைத் தூக்கிப் போட்டுவிட்டு, இருந்த பணத்தையும் சொத்துக்களையும் பிரித்து அள்ளிக் கொண்டு போய்விட்டார்கள்.

நடந்ததைக் கேள்விப்பட்டு, மீனாட்சி திடுக்கிட்டுப் போனாள்.

"கல்யாணத்தை நிறுத்தி விட வேண்டியதுதான். இனிமே, அந்த வாத்தியார் பத்தாயிரம் ரூபாய் எப்படிக் கொடுப்பார்?" என்று சந்தேகப்பட்டாள் அவள்.

"எப்படியாவது, சீக்கிரமாய் நான் பத்தாயிரத்துக்கு ஏற்பாடு பண்ணிடறேம்மா! இப்போ கல்யாண நாள் வச்சு, இன்விடேஷன் அடிச்சு, எல்லாருக்கும் கொடுத்து அழைச்சு, இத்தனை ஏற்பாடும் நடந்த பிறகு, கல்யாணம் நின்னு போயிட்டா, அந்த அவமானத்தை எங்களால தாங்க முடியாது. குடும்பத்தோட தற்கொலை பண்ணிக்கிட வேண்டியதுதான். தயவு செஞ்சு, கல்யாணத்தை நடத்தி வச்சிடுங்கம்மா! எப்படியாவது யார் காலிலே விழுந்தாவது கடன் வாங்கி, பத்தாயிரம் ரூபாய் உங்களுக்குத் தந்திடறேன்" என்று அவள் காலில் விழாத குறையாகக் கெஞ்சினார் குமாரசாமி.

மீனாட்சியின் பெண் மனம், அதற்கு மேலும் கல்லாக இருக்க முடியவில்லை.

"சரி கல்யாணம் நடக்கட்டும். ஆனால் கல்யாணம்தான் நடந்திட்டதேன்னு நீங்க அசிரத்தையாயிருந்திடக் கூடாது. எனக்குப் பத்தாயிரம் ரூபாய் அவசரமாய்த் தேவை. ஞாபகம் வச்சுக்குங்க" என்று சம்மதித்தாள் மீனாட்சி.

திருமணம் சிறப்பாக நடந்து, நந்தினி திருமதி சுந்தரமாக அவன் வீட்டுக்குள் வலது காலை எடுத்து வைத்து நுழைந்தாள்.

மாமியாருக்கு, மருமகள் மேல் எந்த வெறுப்பும் இல்லாவிட்டாலும், நாத்தனாருக்கு அவளைச் சுத்தமாகப் பிடிக்கவில்லை.

பத்தாயிரம் ரூபாய் கொண்டு வராமல், தன் திருமணம் தாமதாவதற்குக் காரணமானவள் என்ற நினைப்பில், நந்தினி மேல் மாலாவுக்கு ஆத்திரம், நாளாக ஆக வளர்ந்து கொண்டே வந்தது.

நந்தினி, நாத்தனாரின் மனப்போக்கைப் புரிந்து கொண்டு, எவ்வளவோ பொறுமையாக நடந்து கொண்டாலும், மாலா சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் அவளைச் சீண்டிக் கொண்டே இருந்தாள்.

பத்தாயிரம் ரூபாய் கொடுப்பதற்கு நாள் கடந்து கொண்டே போனதால், மாமியாருக்கும் மருமகள் மேல் வெறுப்பு தோன்றத் தொடங்கியது.

"என்ன நந்தினி! கல்யாணம் முடிஞ்சு, மகளுக்குக் கன்னி கழிஞ்சிருச்சு என்கிற எண்ணத்திலே, உங்க அப்பா கம்முனு இருக்காரா? பணம் கொடுக்கிற நினைப்பே இல்லியா அவருக்கு?" என்று தினசரி, பொழுது விடிந்து, பொழுது போனால், நச்சரித்துக் கொண்டிருந்தாள் மீனாட்சி.

திருமணம் முடிந்து, மூன்று மாதங்களாகியும், குமாரசாமியால் பத்தாயிரம் ரூபாய் கொடுக்க முடியவில்லை.

அந்த மூன்று மாதத்தில் ஒவ்வொரு நாளும் நெருப்பின் மேல் இருப்பது போல், வாழ்ந்து செத்துக் கொண்டிருந்தாள் நந்தினி.

மாலாவின் வெறுப்பைப் பற்றிக் கணவனிடம் சொல்லிப் பார்த்தாள் அவள்.

"பாவம்! அவளும் உன் மாதிரி பெண் தானே? காலாகாலத்திலே, தனக்கும் கல்யாணம் நடக்கணும்னு அவளுக்கும் ஆசையிருக்காதா? அவள் நிலைமையிலே, உன்னை வச்சுப்பார். அவளோட உணர்வுகள் உனக்குப் புரியும்!" என்று கடுகடுப்புடன் சொல்லி விடுவான் சுந்தரம்.

ஆனால் மூன்றாவது மாதக் கடைசியில், குமாரசாமி திடீரென்று மாரடைப்பால் காலமாகிவிட்டார்.

செய்தி வந்ததும் திடுக்கிட்டுத் துடித்த நந்தினியிடம், மீனாட்சி சொன்ன வார்த்தைகள் அதைவிடத் திடுக்கிட வைப்பதாக இருந்தன.

(அடுத்த இதழில் முடியும்)

'ஸ்கை டைவிங்' என்னும் 'வானப் பாய்ச்சல்' உலகத்தின் பல நாடுகளில் வீர விளையாட்டாகப் பரவிக் கொண்டிருக்கிறது. 'வானப் பாய்ச்சல்' என்றால் என்ன? 'பாராச்சூட்'டை முதுகில் கட்டிக்கொண்டு பாய்ச்சல் வீரர்களும் வீராங்கனைகளும் விமானத்தில் ஏறிக் கொள்வார்கள். விமானம் கிளம்பி, தரையிலிருந்து சுமார் 2500 மீட்டர், உயரத்தில் சீராகப் பறக்கும் போது, நீச்சல் குளத்தில் 'டைவிங் போர்டி'லிருந்து குதிக்கிற மாதிரி வெளியே விண்ணில் ஒவ்வொருவராகப் பாய்வார்கள்!


'பாராச்சூட்'டை உடனே இயக்கி விரித்துக் கொள்ளாமல், விமானத்திலிருந்து சுமார் 1300 மீட்டர் கீழே தாய் நிலத்தை நோக்கி வெறுமனே விழவேண்டும். இப்படி, மணிக்கு சுமார் 200 கி. மீ. வேகத்தில் விழும்போது, கால்களையும் கைகளையும் பரப்பியும் சுருக்கியும், உயர்த்தியும், தாழ்த்தியும், காற்றின் தடுப்பு விசையை உபயோகித்து, விழும் வேகத்தையும் திசையையும் கொஞ்சம் மாற்றிக் கொள்ள முடியுமாம்.

முதலில் குதித்தவரிலிருந்து, தொடர்ந்து பாய்ந்த மற்றவர்களும் கடைசியாகக் குதித்தவர் தங்களோடு வானவெளியில் சம உயரத்தில் சேர்ந்து கொள்கிற வரை 'வீழ்ச்சி'யைக் கட்டுப்படுத்தித் தங்களை நிலைப்படுத்திக் கொள்வார்கள். இன்னும் அதிக உயரத்திலிருந்து குதிக்கும்போது வான்வெளியில் எல்லோரும் கூடி கைகளைக் கோத்துக் கொண்டு 'மனிதக் கோலம்' போட்டு விளையாடிக் கொள்ளவும் முடியுமாம்.

தரைக்கு 1200 மீட்டர்களே இருக்கும் போது, பாய்ச்சல்காரர்கள் தனித்தனியாகப் பிரிந்து அவரவர் 'பாராசூட்'டை இயக்கி விரித்துக் கொள்வார்கள். அதன்பின் நிலம் நோக்கிய பிரயாணம் அத்தனை வேகமான வீழ்ச்சியாக இருக்காது. 'பாராச்சூட்'டுடன் உறவாடும் காற்றின் இலேசான இரைச்சலைத் தவிர, மிக அமைதியான சூழ்நிலையில் பறவைகளைப் போல ஊர்ந்து கொண்டு தரையில் தங்களின் இலக்கை நோக்கி ஒருவர்பின் ஒருவராய் இறங்குவார்கள்.

டில்லியில் 'இந்திய ஏரோ கிளப்' ஏற்பாடு செய்திருந்த ஒரு 'ஸ்கை டைவிங்' நிகழ்ச்சியின்போது, ஸஃப்தர்ஜங் விமான நிலையத்தின் மேலே 3000 மீட்டர் உயரத்தில் பறந்த விமானத்திலிருந்து குதித்து, தரையிலிருந்து சுமார் 1000 மீட்டர் உயரமே இருக்கும்போது பாராச்சூட்டை இயக்கி, பறவைகளாக ஊர்ந்து, பார்வையாளர்கள் மத்தியில் பத்திரமாக இறங்கிய ஆறு பேர்களுள் திருமதி ரெய்ச்சல்லும் ஒருவர். பாரதி இன்று இருந்திருந்தால், 'காற்றில் ஏறி விண்ணையும் சாடி' அவரின் எதிர்பார்ப்புகளை மிஞ்சிவிட்ட இந்தப் பெண்மணியின் வீரத்தைப் பற்றி அதிகமாக மகிழ்ந்து போவது அவராகத்தான் இருக்க முடியும்!

— கண்ணைபிரான்



காற்றில் ஏறி...



13

துன்பம் நேர்கையில்..

வித்யா சுப்ரமணியம்

"என்ன சித்ரா வர வர வேலைக்குப் போறேன் பேர்வழின்னு என்னை மறந்தே போய்ட்டே?" முரளி லேசான கோபத்துடன் கேட்டான்.

சித்ரா சிரித்தாள்.

"அதுசரி, நம்ப விஷயத்தை நீ எப்போ உங்கம்மா கிட்ட சொல்லப் போறே?"

"சொல்லிட்டாப் போச்சு."

"போ முரளி இதே மாதிரி ஆயிரம் தடவை நான் கேட்டாச்சு. நீயும் சொல்லிட்டா போச்சுன்னு ரெண்டாயிரம் தடவை சொல்லியாச்சு."

"ஆனா சொல்லத்தான் மாட்டேங்கறே. பேசாம நானே வந்து சம்பா மாமிகிட்டே எல்லாத்தையும் சொல்லிட்டு உன்னைக் கல்யாணம் பண்ணிக்கலாமான்னு யோசிக்கறேன்."

"அம்மா தாயே நீ அப்படி எதுவும் செஞ்சு வைக்காதே. நானே சமயம் பார்த்து அம்மா கிட்ட சொல்றேன். இவ்ளோ நாள் பொறுத்துண்டாச்சு. இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக்கலாமே."

"இவ்வளோ நாள்னு சொல்லாதே. 452 நாட்கள் ஆயாச்சு. அதாவது ஒண்ணே கால் வருஷம் ஓடிப் போச்சுன்னு சொல்லு. அது சரி, இன்னும் கொஞ்ச நான்னு எவ்ளோ வருஷம் முரளி?"

"அறஞ்சேன்னா எப்படி இருக்கும் தெரியுமா? கிண்டலா பண்றே?" கையை பொய்க் கோபத்துடன் ஓங்கினான்.

"பின்னே என்னவாம். நீயும் உங்க விட்ல சொல்ல மாட்டேங்கற. என்னையும் எங்க விட்ல சொல்லவிட மாட்டேங்கறே. உன் மனசுல நீ என்னதான் நினைக்கறன்னு புரியவே மாட்டேங்கறது."

"சரி சித்ரா. இன்னும் ஒரே ஒரு வாரம் டைம் குடு. எப்படியாவது அம்மாகிட்ட சொல்லி நம்ப கல்யாணத்துக்கு பர்மிஷன் வாங்கிடறேன் ஓ.கே."

"செஞ்சா சரிதான். சரி போலாமா? லேட்டாயிடுத்து" புடவையில் ஒட்டிக் கொண்டிருந்த மணலை உதறிவிட்டு எழுந்து கொண்டாள்.

எப்படியாவது அம்மாவிடம் விஷயத்தை சொல்லிவிட வேண்டும் என்ற தீர்மானத்துடன் வீட்டுக்குப் போன முரளிக்கு ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

"என்னம்மா சொல்றே நீ?" நம்ப முடியாமல் கேட்டான் முரளி.

"ஆமாண்டா. நீ மறச்சா விஷயம் எனக்குத் தெரியவே வராதோ.... முதல்லயே சொல்லி இருந்தா நான் என்ன வேண்டான்னு சொல்லப் போறேன்?"

"மொதல்ல விஷயத்தைப் புரியும்படியா சொல்லும்மா."

"நீ யாரையோ காதலிக்கறே? கரெக்ட்டா?" அதிர்ந்தான் முரளி.

"அது.... அது எப்..டிம்மா உனக்குத் தெரியும்?"

"எப்படியோ- தெரியும். நீ காதலிக்கற பொண்ணை. எனக்கு நன்னாத் தெரியும். நல்ல பொண்ணுதான். உங்கண்ணாவ மாதிரி ஊர் பேர் தெரியாதவளைப் போய் நீ லவ் பண்ணிடப் போறயோன்னுதான் முதல்ல நான் பயந்தேன். அன்னிக்கு உமா வந்து சொன்னாளே அது ஒப்புக்குன்னு எனக்குத் தெரியாது."

"என்ன சொன்னா உமா?" உண்மையிலேயே குழம்பினான் முரளி.

"விமலாவைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி உன்னை துளைச்செடுத்தப்போ அவளும் நான் சொல்றதுல என்ன தப்புன்னு கேட்டாளே ஞாபகமிருக்கா?"

"ஆமாம்."

"அப்பவே நீ சொல்லியிருக்கலாம்."

"என்னத்தைச் சொல்லியிருக்கலாம்?"

"உமாவைத்தான் நான் லவ் பண்றேன்னு சொல்லி இருக்கலாங்கறேன். உமாவைப் போய் யாராலும் மாட்டுப் பொண்ணு வேண்டாம்னு சொல்லுவாளோ?"

நீட்டி முழக்கி அம்மா பேசியதும் உண்மையிலேயே அதிர்ந்து போய்விட்டான் முரளி. என்ன சொல்வது என்று புரியாமல் வாயடைத்துவிட்டது அவனுக்கு. அம்மா திடீர்னு இப்படி ஒரு விஷயத்தைப் பேசும்படியா என்ன நடந்திருக்கும் என்று யோசித்தவன் கண்ணில் கூடத்தின் ஒரு ஓரமாய் வைக்கப்பட்டிருந்த பழமும் பூவும் கண்ணில் பட்டன.

"யாரும்மா வந்திருந்தா..." என்று கேட்டான் பேச்சை மாற்ற நினைத்து.

"உமாவோட அப்பாதான் வந்திருந்தார்."

"எதற்காம்?"

"புரியாத மாதிரியே பேசறயே. உமாவும் நீயும் ஒருத்தரை ஒருத்தர் நேசிக்கறேன்னு தெரிஞ்சு மனுஷன் கல்யாணம் பேச வந்திருந்தார்."

"என்னம்மா சொல்றே நீ? நாங்க ரெண்டு பேரும்.... அவருக்கு எப்படித் தெரியுமாம்?"

"எப்படித் தெரிஞ்சிருக்கும். உமாதான் சொல்லியிருப்பா. சரியான பிள்ளை நீ.



அவளுக்கிருக்கும் தைரியம் கூட உனக்கில்லையே.''

''போதும் நிறுத்தும்மா'' கத்தினான் முரளி.

சட்டென்று பயந்துபோய் அவனைப் பார்த்தாள் சம்பா.

முரளியால் சுத்தமாக நம்ப முடியவில்லை. விமலாவைப் பண்ணிக் கொள் என்று மனப்பூர்வமாகக் கெஞ்சியவள், தான் வேறு ஒரு பெண்ணை நேசிக்கிறோம்என்றுசொன்னபோது ஆச்சரியப்பட்டு பிறகு கல்யாணம் செய்து கொண்டு செட்டில் ஆகிவிட வேண்டியதுதானே என்றுகேட்டவள். அவள் தன்னை விரும்புவதாக அவள் அப்பாவிடம் கூறியிருக்கிறாளா? சுத்தமாக நம்ப முடியவில்லை அவனால். எங்கோ தவறு நடந்திருக்கிறது. உமா அப்படித் தன்னிடம் நேருக்கு நேர் கேட்காமல் அப்பாவை அனுப்பும் பெண்ணல்ல என்று அவனுக்குத் தெரியும்.

இருந்தாலும் அடிக்கடி அம்மாவை, அவளைப் பண்ணிக்கோ இவளைப் பண்ணிக்கோன்னு இனி பேச வைக்கவே கூடாது என்று முடிவு பண்ணினவன் அந்த உறுதி தொனிக்கும் குரலுடனேயே,

''அம்மா இதோ பாரு. யாரோ ஏதோ உளறியிருக்கா. அதை நம்பிண்டு உமாவோட அப்பாவும் வந்திருப்பா. ஆனா நான் சொல்றேன். நானோ உமாவோ, ஒருத்தரை ஒருத்தர் விரும்பறோம்கறது எல்லாம் சுத்தப் பொய். நான் ஒரு பெண்ணை நேசிக்கிறேன். ஆனா அது உமா இல்லை.''

சட்டென்று முகம் சுருங்கிவிட்டது சம்பாவிற்கு. என்ன சொல்றான் இவன்? இவன் உமாவை விரும்பலையா? அப்படியானா பத்தாயிரம் ரூபாய் வரதட்சணையும் அறுபது பவுன் நகையும்லட்சரூபாய்சீர் வரிசையும் ஆபட்ஸ்பரியில் கல்யாணமும் கனவுதானா? அந்த மனுஷன் எவ்வளவோ பவ்யமா பேசினார். உமாவுக்காக தான் எவ்வளவு வேண்டுமானாலும் செய்வதாகக் கூறினாரே. ஒரு நிமிடத்தில் கோட்டை கட்டினதெல்லாம் வெறும் காய்ந்த மண்ணிலா? அவளுக்கு ஆத்திரமாக வந்தது. தனக்கு இப்போது நேரம் சரியில்லை என்றே நினைத்தாள். தான் நினைப்பதெல்லாம் நடக்காமல் தான் ஏமாந்து போகிறோம் என்றபோது அவளுக்கு என்ன செய்வது என்று புரியாமல் கோபம் மட்டும் வந்தது.

''யாரதான் நீ லவ் பண்ற? சொல்லித் தொலை'' என்றாள் சிடுசிடுத்த குரலில்.

''இந்தப் பொண்ணும் உனக்குத் தெரிஞ்சவதாம்மா. நம்ப ஈஸ்வரி மாமி பொண்ணு சித்ராவைத்தான் நான்...'' முடிக்காமல் நிறுத்தினான்.

''ஓஹோன்னானாம். அப்டியா சேதி. இதுக்குத்தான் நல்ல பிள்ளையாட்டம் எனக்கு ஒத்தாசை பண்ற சாக்குல அவ வீட்டுக்கு அடிக்கடி மூஞ்சிய தூக்காம போனயாக்கும். உன்னை மாப்பிள்ளையா வளைச்சுப் போட்டுக்கத்தான் அவ பொண்ணை தறுதலையாட்டம் வளர்த்திருக்காளா? நடக்காதுடா. நடக்க விட மாட்டேன். அப்பன் பேர் தெரியாத பொண்ணுக்கு அந்தஸ்தா மாப்பிள்ளை பிடிக்கலாம்னு திட்டம் போடறாளா அந்தச் சிறுக்கி. நான் உசிரோட இருக்கிற வரைக்கும் நடக்கவிட மாட்டேன்.''

''ஏம்மா உமா, விமலா இவாள்ளாரையும் விட சித்ரா உனக்கு அப்படி எந்த விதத்துல குறைச்சலாத் தெரியறா?''

''குறைச்சல்தாண்டா. விமலாகிட்ட அம்பதாயிரம் ரூபாய் பணமும் முப்பது பவுன் நகையும் இருக்கு. அவ அண்ணா துபாய்ல இருக்கான். போறுதா?

''உமாவுக்கு வரதட்சணையா பத்தாயிரம் ரூபாய் தருவார் அவ அப்பா. ஒரு லட்ச ரூபாய்க்கு சீர் செய்வார். தவிர அறுபது பவுன் நகை போட்டு ஆபட்ஸ்பரியில கல்யாணம் பண்ணித் தரேன்னு சொல்றார். போதாதா? இதெல்லாம் அந்த ஈஸ்வரியால் முடியுமா?'' இளக்காரமாகக் கேட்ட போது முரளிக்குக் கோபம் வந்தது.

''ஏம்மா இப்படி பணம் பணம்னு அலையற? நீ சொல்ற மாதிரி விமலாகிட்டயும் உமா கிட்டயும் பணம் இருக்கலாம். ஆனா சித்ராகிட்ட என் மனசை அவளை நேசிக்க வைக்கிற சக்தி இருக்கு. எனக்குச் சித்ராதான் முக்கியம். பணமில்லை.''

''அப்ப நீ என்னதான் சொல்ற?''

''கூடிய சீக்கிரம் எனக்கும் சித்ராவுக்கும் கல்யாணம் பண்ணி வைக்கிற வழியப் பாருன்னு சொல்றேன்.''

''சரி, பண்ணி வெக்கறேன். உனக்கும் அந்தச் சித்ராவுக்குமே கல்யாணம் பண்ணி வெக்கறேன். ஆனா ஒரு கண்டிஷன்...'' நிறுத்தினாள்.

''என்ன?''

சுண்டைக்காய் மார்புச் சளியைப் போக்கும். கபத்தை நீக்கும். வயிற்றில்உள்ளகிருமிகளைக்கொல்லும். வாத நோயைக் குணப்படுத்தும்.

— ஆர். ஜெயலட்சுமி.

குடிநீருக்கு மண்பானைத் தண்ணீரே மகத்தானது. அதில் கொஞ்சம் துளசியையும் போட்டு வையுங்கள். மணமாயிருப்பதுடன் சளியும் பிடிக்காது.

— ஆர். ஜெயலட்சுமி.



ப்ரீதி
சிறந்த சமையலறை சாதனம்
அதிக பட்ச விலை
ரூ. 1,200
• ½ மணி விடாமல் இயங்கும்சக்தி வாய்ந்த 450 வாட்ஸ் மோட்டார்
• 2 வருட உத்திரவாதம்,
• ஆயுள் கால இலவச சர்வீஸ்
PREETI
HEAVY DUTY MIXER GRINDER
ஏதோ ஒரு மிக்ஸி அல்ல—இது ஒரு ttk தயாரிப்பு

"உமாவுக்கு அவ அப்பா செய்யறேன்னு சொன்ன எல்லாத்தோடயும் சித்ரா இந்த வீட்டுக்குள்ள வரதா இருந்தா எனக்கு ஒண்ணும் ஆட்சேபணையில்லை."

"இது ரொம்ப அநியாயம்மா! அவ்னோத்துக்கு ஈஸ்வரி மாமி எங்கே போவா?"

"அநியாயம்னு? ஆசைப்பட மட்டும் தெரியறதே. அப்போ செய்யட்டும்."

"அவ ஒண்ணும் என்னை மாப்பிள்ளையாக்கிக்க ஆசைப்படலை. இந்த விஷயம் அவளுக்கே இன்னும் தெரியாது."

"இப்பவே மாமியாருக்குப் பரிஞ்சுண்டு வரயாக்கும். இதோ பார் முரளி, நான் ஆரம்பத்துலேர்ந்தே எல்லாத்துக்கும் விட்டுக் கொடுத்துண்டு வர்றேன்னு என்னை அடியோட மட்டம் தட்டப் பார்த்தேன்னு அப்புறம் நான் தற்கொலைதான் பண்ணிப்பேன் ஜாக்கிரதை. இந்த விஷயத்துலே நான் விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை. இது என் கௌரவப் பிரச்னை. கஷ்டப்பட்டு பிள்ளைகளைப் பெத்து, பணத்தைத் தண்ணியாக் கொட்டிப் படிக்க வெச்சு நல்ல உத்தியோகத்துக்கும் அனுப்பிச்சிருக்கேன். ஒருத்தனை மலையாட்டம் குடுத்தாச்சு. அடுத்தவனையும் அடுத்த வேளை சாப்பாட்டுக்கே ஆலாய்ப் பறக்கறவ பொண்ணுக்குக் கொடுக்க நான் தயாராயில்லை.


இவதான் உம் மாட்டுப் பொண்ணுன்னு என்னைப் பார்த்துக் கேக்கறவா கேள்வில பெருமை இருக்கணுமே தவிர இளக்காரம் இருக்கக் கூடாது. அதுக்கு என் மனசு சம்மதிக்காது.

இப்போ கூட உன் ஆசைக்குக் குறுக்கே நான் நிக்கலை. நீ சித்ராவையே தாராளமா பண்ணிக்கோ. வேண்டாங்கலை. ஆனா என் கண்டிஷன்படி. இல்லைன்னா என்னை உசிரோட பார்க்க முடியாது. இது சத்தியம். கை நிறைய பணத்தோடேயும் சீரோடேயும் வரவதான் என் மாட்டுப் பெண்" என்றாள்.

மலைத்து நின்றுவிட்டான் முரளி.

(தொடரும்)

அபார பலம். 'காம்பிடான்' பலம்.



அந்த அற்புத உறுதியை உங்கள் வீட்டுக்கு அளிக்கிறது ராம்கோ சிமெண்ட்.

காம்பிடான் மில் மூலம் அற்புத உறுதி ஊட்டப்பட்ட சிமெண்ட் : ராம்கோ.

மிக உறுதியான சிமெண்டை உற்பத்தி செய்ய அதி நவீனமான, மிகச் சிறப்பான கிரைண்டிங் இயந்திரமாகிய "காம்பிடான் மில்லை"த் தென்னகத்திலேயே முதன் முதலாக அமைத்தது—மதராஸ் சிமெண்ட்ஸ் தான்.

அத்தோடு, அல்லும் பகலும் கச்சாப் பொருள்களையும், தயாரான சிமெண்டையும் இடைவிடாது கடும் பரிசோதனை செய்ய 'எக்ஸ்ரே அனலைசர்' எனும் அதி நவீன உபகரணம்.

ஆகவே, என்றென்றும், அற்புத உறுதி கொண்ட காம்பிடான் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது.

மற்றெவரிடமும் இல்லாத தனிச் சிறப்பான தொழில்நுட்ப மேம்பாட்டால் ராம்கோ சிமெண்ட் அபார பலமும், சிறப்பான இறுகும் சக்தியும் கொண்டதாகத் திகழ்கிறது.

ஆம்! சிக்கனமான செலவில், சிறப்பான பலம்மிக்க கட்டிடங்களை அமைக்க ராம்கோ சிமெண்டையே உபயோகியுங்கள்.

நாணயமான எடை, நம்பிக்கையான தரத்திற்கு நிகரில்லாத பெயர்.



MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

ராம்கோ சிமெண்ட்

– அபார பலமும், அற்புத உறுதியும் கொண்ட 'காம்பிடான்' சிமெண்ட்.

தயாரிப்பாளர்கள் :
மதராஸ் சிமெண்ட்ஸ் லிமிடெட்
ராமசாமிராஜா நகர் 626 204
(காமராஜர் மாவட்டம்)

சணல், பாலித்தீன், மற்றும் காகிதப் பைகளிலும் கிடைக்கிறது.

CLARION-M.MCL-17A-R-86-TAM

இம்மாத இல்லத்தரசி



சரஸ்வதி



விசாலாட்சி



உமா



மஞ்சுளா

முதல் பரிசு: ப்ரட் டோஸ்டர்

மல்டி வைட் கூட்டு

தேவையான பொருட்கள்:

மலைச் சுண்டைக்காய் — 2 கையளவு.
உருளைக்கிழங்கு — 1.
வெந்தயக் கீரை — 1 சிறிய கட்டு.
பொன்னாங்கண்ணிக் கீரை — 1 பிடியளவு.
முருங்கைத் தளிர் இலைகள் — 1 பிடி.
புளி — கொட்டை பாக்களவு
உப்பு — தேவையான அளவு.
கடலைப் பருப்பு — 1 டேபிள் ஸ்பூன்.
தனியா விதை — 1 டேபிள் ஸ்பூன்.
மிளகாய் வற்றல் — 2.
எண்ணெயில் வறுத்த பொடி — சிறிதளவு
எண்ணெய் — தேவைக்கேற்ப.
வெல்லம் — கொட்டைப் பாக்களவு.
தாளிக்க கடுகு, உளுத்தம்பருப்பு, கடலைப் பருப்பு; மிளகாய் வற்றல்.
கொத்துமல்லி — அலங்கரிக்க.

செய்முறை: மலைச்சுண்டைக்காய்களை லேசாக நசுக்கிக் கொண்டு ஒரு முட்டை எண்ணெயைச் சூடாக்கி அதில் சற்று வதக்கிக்கொள்ளவும். உருளைக்கிழங்கை முழுதாக தோலோடு தனியாக வேக வைத்துக் கொள்ளவும். வதக்கிய காயில் புளியைக் கரைத்து அளவுடன் விட்டுத் தேவையான உப்பு, மஞ்சள் பொடியைச் சேர்க்கவும்.

காய் நன்றாக வெந்து, பச்சை புளி வாசனை போன பிறகு வெல்லம், மிளகாய்ப் பொடி செய்ததையும் சேர்த்துக் கொதிக்க வைக்கவும். உருளைக்கிழங்கைத் தோல் உரித்து நன்றாக மசித்துக் கொண்டு வேக வைத்த கீரையையும் அத்துடன் கலந்து கொண்டு கூட்டில் கலந்து ½ கிண்ணம் ஜலமும் சேர்க்கவும். தளதள என்று கொதிக்க விட்டு இறக்கவும். கீழே இறக்கிக் கொத்துமல்லித் தழைகளைத்தூவி, கடுகு, உளுத்தம்பருப்பு, கடலைப் பருப்பு, மிளகாய் வற்றல் ஒன்று, தாளித்துக் கொட்டி அலங்கரிக்கவும்.

— சரஸ்வதி ராமமூர்த்தி, சென்னை — 78

இரண்டாம் பரிசு: தட்டு

வெறும் கூட்டு

தேவையான பொருட்கள்:

மொச்சைக் கொட்டை — ½ லிட்டர்.
துருவிய தேங்காய் — 1 கப்.
கடுகு — ½ ஸ்பூன்;
மிளகாய் வற்றல் — 6.
பெருங்காயம், உப்பு — தேவைக்கேற்ப.
கறிவேப்பிலை — சிறிதளவு.

செய்முறை: கொட்டையை நன்றாகக் கழுவிக் கொஞ்சமாகத் தண்ணீர் விட்டு மஞ்சள் பொடியும், உப்பும் போட்டு வேக வைக்கவும். குழையக் கூடாது. தேங்காய்த் துருவல் முதலியவற்றைப் பச்சையாகவே

நைஸாக அரைத்து வைத்துக் கொள்ளவும் கொட்டை நன்ருக வெந்தவுடன் அரைத்து வைத்தவிழுதைப்போட்டுக்கலக்கி, கறிவேப் பிலேயும் போட்டுக் கொஞ்சம் கொதித்த பிறகு கடுகு மாத்திரம் தாளிக்கவும்.

— டி. விசாலாட்சி, கோவை — 9.

மூன்ருவது பரிசு: **மேஜை விளக்கு**

பனங்கிழங்கு கூட்டு

தேவையான பொருட்கள்:

பனங்கிழங்கு — 10.
தேங்காய் — ½ மூடி.
பச்சை மிளகாய் — 4.
கடுகு, உளுத்தம்பருப்பு, கடலேப் பருப்பு, புழுங்கல் அரிசி — ஒவ்வொரு ஸ்பூன்.
பெருங்காயம் — சிறிதளவு.
உப்பு — தேவையான அளவு.
கறிவேப்பிலே, கொத்துமல்லி—சிறிதளவு.

செய்முறை: பனங்கிழங்கைத் தோல் நீக்கி விட்டு, நுனிப் பகுதியை வெட்டிவிட்டு, தலேப் பகுதி குக்கருக்குள் இருக்கும்படி வைத்து, குக்கரில் தேவையான நீர் ஊற்றி, சிறிது உப்பும், மஞ்சள் பொடியும் சேர்த்து, குக்கரை மூடி, ஸ்டீம் வந்ததும் வெயிட் போட்டு, மூன்று விசில் வந்தவுடன் குக்கரை இறக்கி வைக்கவும்.

தேங்காயைத் துருவி, பாதியை அரைத்து பால் எடுத்துக் கொள்ள வேண்டும். மீதி பாதியுடன் சிறிது அரிசி, பச்சை மிளகாய் சேர்த்து மைபோல் அரைத்து வைத்துக் கொள்ளவும்.

குக்கரிலிருந்து பனங்கிழங்குகளே எடுத்து, நீரில் கழுவி, இரண்டு மூன்ருக உடைத்து, நார் முழுவதையும் நீக்கி, கூட்டுக்கு வெட்டு வது போல், துண்டுகளாக நறுக்கி, ஒரு பாத்திரத்தில் நீர் ஊற்றி, அதில் போட்டு, மீண்டும் சிறிது வேக வைக்கவும்.

பின்னர், அரைத்து வைத்திருக்கும் விழுதைப் போட்டு, சிறிது உப்பு, பெருங்காயம் ஊற்றிக் கொதிக்க வைக்கவும். ஒரு கொதி வந்ததும் தேங்காய்ப் பாலே ஊற்றி, கறிவேப் பிலே, கொத்துமல்லித் தழைகளேப் பிய்த்துப் போட்டு இறக்கி வைக்கவும்.

அடுப்பில் வாணலியை வைத்து, சிறிது தேங்காய் எண்ணெய் ஊற்றிக் கடுகு, உளுத் தம்பருப்பு, கடலேப்பருப்பு, புழுங்கல் அரிசி, இவற்றைப் போட்டுப் பொன்னிறமானதும் இறக்கி, அம்மியில் நைசாகப் பொடித்து, கூட்டின் மேல் தூவிப் பரிமாறினல் பிரமாத மாக இருக்கும்.

— உமா நாராயணசுவாமி, சென்னே.

ஆறுதல் பரிசு: **ப்ளவர் வாஸ்**

நெல்லிக்காய் பால் கூட்டு

தேவையான பொருட்கள்:

சிறுநெல்லிக்காய் — 15.
பாசிப்பருப்பு — 50 கிராம்.
வெல்லம் — 100 கிராம்.
கெட்டியான பால் — 1 டம்ளர்.
தேங்காய்த் துருவல் — 1 கப்.
உப்பு, மஞ்சள் தூள் — 1 ஸ்பூன்.
ஏலக்காய் — 2.
உளுத்தம்பருப்பு — 1 ஸ்பூன்.
மிளகாய் வற்றல் — 1.

செய்முறை: முதலில் அரை டம்ளர் பாலுடன் ஒரு டம்ளர் நீர் சேர்த்து, நெல்லிக் காய்களைக் கழுவி அதில் போட்டு உப்பு மஞ்சள் தூள் சேர்த்து வேக விடவும். பாசிப் பருப்பைக் குழையாமல் தனியாக வேக வைத்துக் கொள்ளவும். நெல்லிக்காய் வெந்த தும் கொட்டைகளே நீக்கி உதிர்த்து மீதியுள்ள பாலுடன் சேர்த்துக் கிளறி வைக்கவும்.

அடுப்பில் ஒரு பாத்திரத்தில் சிறிது நீர் விட்டு வெல்லத்தைப் போட்டு அது கரைந் ததும் நெல்லிக்காய், பருப்பு சேர்த்துக் கிளற வும். தேங்காய்த் துருவலேயும், ஏலக்காய்ப் பொடியையும் தூவி அடிப்பிடிக்காமல் கிளற வும். இறக்கியதும், வாணலியில் சிறிது நெய்

பரிசுப் பொருட்கள்:




உங்கள்

இல்லத்திற்கு உறுதுணையானது

மெட்ரோபாலிடன்

மாவரைக்கும் இயந்திரங்கள்



- நீடித்த உழைப்பு
- நிகரற்ற அமைப்பு
- நிசப்தமான ஓட்டம்

அளவுகள் :

1 லிட்டர் முதல் 20 லிட்டர் வரை

ANUREKHA

தயாரிப்பாளர்கள்:

மெட்ரோபாலிடன் இண்டஸ்ட்ரீஸ்

போன்: 32396

72, சாஸ்திரி ரோடு • கோயமுத்தூர்-641 009

வியாபார விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன.

கோவையில் 30 ஆண்டுகளுக்கு மேலாக
மக்கள் சேவையில் புகழ் பெற்ற நிறுவனம்

கமலா ஸ்டோர்ஸ்

16, கிராஸ்கட் ரோடு, காந்திபுரம், கோயமுத்தூர்-641012


போன்: 22489 வீடு: 30778

மங்கையர் விரும்பும் நவீன விதவிதமான
உயர்தர எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும்
பித்தளை தாமிர பாத்திர வகைகள்
வாங்க சிறந்த இடம்

கமலா எவர்சில்வர் பாத்திரங்கள்

எங்கள் பேக்டரியில் தயாராகிறது எல்லாவித ஆர்டர்களும் கவனிக்கப்படும்

பிரஸ்டிஜ் பிரஷர் குக்கர் விற்பனை செய்வதுடன்
சர்வீஸ்சும் செய்து கொடுக்கிறோம்



nutrine
MILK
மீண்டும் மீண்டும்
சுவைக்கத் தூண்டும்
நியூட்ரின்
மில்க் பிஸ்கட்ஸ்
nutrine
BISCUITS
MILK
nutrine
ACIL/005/86-Tam

விட்டு உளுத்தம்பருப்பு, மிளகாய் வற்றலைத் தாளித்து விடவும்.

— வி. ஜெயா, சென்னை — 45.

ஆறுதல் பரிசு: ப்ளவர் வாஸ்

த்ரீ — இன் — ஒன் பொரித்த கூட்டு

தேவையான பொருட்கள்:

பூசணி இலை கொழுந்து — 1 பிடி,
கோவை இலை கொழுந்து — 1 பிடி,
வாத நாராயண இலை — 1 பிடி,
மிளகாய் வற்றல் — 2,
பெருங்காயம் — கொஞ்சம்,
உளுத்தம்பருப்பு — 3 டீஸ்பூன்,
நெய் அல்லது எண்ணெய் — 3 டீஸ்பூன்,
தேங்காய்த் துருவல் — ½ கப்,
உப்பு — திட்டமாக.
துவரம் பருப்பு அல்லது பயத்தம் பருப்பு — 1 கப்.

செய்முறை: மிளகாய் வற்றல், பெருங்காயம், இரண்டு டீஸ்பூன் உளுத்தம்பருப்பு முதலியவற்றைக் கொஞ்சம் நெய்யில் வறுத்துக் கொள்ளவும். தேங்காய்த் துருவலை வைத்து நைசாக அரைத்துக் கொள்ளவும். துவரம் பருப்பு அல்லது பயத்தம் பருப்பை வேகவிட்டுக் கொள்ளவும். பூசணி, கோவை இலைகளை நைசாக அரிந்து கொண்டு அதனுடன் வாதநாராயண இலையைச் சேர்த்து தண்ணீரில் வேக வைக்கவும். வெந்தவுடன் வெந்த பருப்பு, அரைத்த உளுத்தம் பருப்பைத் தாளித்துக் கொட்டவும்.

— மஞ்சுளா ராமசுவாமி, கடலூர் — 1.

சர்க்கரைப் பொங்கலில் சுவை கூட சில யோசனைகள்

* சர்க்கரைப் பொங்கல் செய்ய அரிசியை வேக வைக்கத் தேவையான தண்ணீரில் மூன்றில் ஒரு பங்கு பாலை ஊற்றினால் சர்க்கரைப் பொங்கல் சுவையாயிருக்கும்.

* சர்க்கரைப்பொங்கலுக்குப் பயன் படுத்தும் வெல்லம் சிறிது கறுப்பாயிருந்தாலும் பொங்கலை இறக்கு முன்பு சிறிதளவு பாலில் சிறிது கேசரிப் பவுடரை கரைத்து ஊற்றலாம்.

* முந்திரிப் பருப்புடன் கிஸ்மிஸ் திராட்சையையும் நெய்யில் வறுத்துப் போடலாம். ஜாதிக்காயும் வறுத்து பொடித்துப் போடலாம்.

* பொங்கல் செய்ய பாசிப்பருப்பை வறுக்கும்போது அதனுடன் சிறிது கடலைப் பருப்பை வறுத்து (முழுதாக போடாமல்) பொடி செய்து போட்டால் பொங்கல் சுவையாயிருக்கும்.

* ஏலப்பொடியுடன் சிறிது பச்சைக் கற்பூரம் போடலாம்.

* சர்க்கரைப்பொங்கல் கொதிக்கும் போது அதில் கெட்டியான தேங்காய்ப் பாலை ஊற்றிக் கிளறினால் பொங்கல் சுவையாயிருக்கும்.

* பொங்கலுக்கு வேண்டிய வெல்லத்தை தேவையான அளவு தண்ணீர் ஊற்றி, இளம்பாகு பதமானவுடன் அதில் அரிசியையும் பாசிப் பருப்பையும் களைந்து போட்டு சர்க்கரைப் பொங்கல் செய்தால் மிகவும் சுவையாயிருக்கும். அதிக மணி நேரம் கெடாது.

* சர்க்கரைப் பொங்கலுக்காக பாசிப்பருப்பைவறுக்கும்போது அரிசியையும் சிறிது நேரம் வாணலியில் வறுத்தபின் பொங்கல் செய்தால் சுவை அதிகமாயிருக்கும்.

— விசாலாட்சி

உங்கள் பக்கத்து வீட்டாருக்கு எப்படி?



அண்டை வீட்டாருடன் நீங்கள் 'எப்படி' இருக்கிறீர்கள்? ஒரு சிறு கோடுதான் நட்புறவுக்கும் விரோதத்திற்குமிடையே இருக்கிறது. அதைத் தாண்டாதிருக்கும் வரைதான் நீங்கள் "குட் நெய்பர்" நீங்கள் அந்தக் கோட்டின் எந்தப்புறத்தில் இருக்கிறீர்கள்? பதிலே 'டிக்' செய்து கொண்டே வந்து கடைசியில் உள்ள விடையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள் —

1. புதிதாக ஒரு குடும்பம் பக்கத்து வீட்டுக்கு குடித்தனம் வருகிறது. சாமான் செட்டுடன் வந்து இறங்கினர்கள். நீங்கள் —
   - (அ) அவர்களைப்பற்றி அறிய அக்கம் பக்கம் எல்லாம் அலேவீர்கள்.
   - (ஆ) முதன் முதல் வந்திருக்கிருர்களே என்னு ஒரு சொம்பு காப்பி போட்டுக் கொண்டு போய்க் கொடுப்பீர்கள்.
   - (இ) 'எக்கேடு கெட்டுப் போகட்டும்' என்று இருந்து விடுவீர்கள்.

2. அண்டை அசல் வீடுகளில் அடிக்கடி சம்மனில்லாமல் நுழைந்து புறப்படுகிற பழக்கம் — உங்களிடம்,
   - (அ) நிச்சயமாகக் கிடையாது.
   - (ஆ) உண்டு — ஆனல் நட்புறவுடன்.
   - (இ) எப்போதாவதுதான். அதைஒரு வழக்கமாக வைத்துக் கொள்வது கிடையாது.

3. திடீரென்று உங்கள் வீட்டில் காப்பி பொடியோ, சர்க்கரையோ 'ஷார்டேஜ்' ஆகிவிடுகிறது. உடனே அண்டை வீட்டுக்காரரிடம் 'கடன்' வாங்கக் கிளம்புவீர்கள் —
   - (ஆ) ஆம். அடிக்கடி போகிறேன்.
   - (ஆ) ரொம்ப 'முட்டு' ஏற்பட்டால் தான்.
   - (இ) எப்பேர்ப்பட்ட நெருக்கடியானலும் கேட்க மாட்டேன்.

4. உங்கள் அண்டை வீட்டுக்கு ஒரு புது மணத்தம்பதி குடித்தனம் வரும்போது நீங்கள் —
   - (அ) அவர்களுக்கு உங்கள் அனுபவம், ஆலோசனைகளை நீங்களாகவே போய்வழங்குவீர்கள்.
   - (ஆ) எப்போது வேண்டுமானலும் வந்து கேட்கலாம் என்று உணர்த்திவிட்டுப் பேசாதிருப்பீர்கள்.
   - (இ) அவர்களே சமாளித்துக் கொள்ளட்டும் என்று இருந்து விடுவீர்கள்.

5. அவர்கள் இராத்திரி முழுவதும் சத்தம் போட்டுக் கொட்டம் அடித்து உங்களைத் தூங்கவிடாமல் செய்கிருர்கள் நீங்கள் —
   - (அ) போனில் கூப்பிட்டு ஆத்திரமாகக் கத்திக் கண்டிப்பீர்கள்.
   - (ஆ) மெதுவாகவே அணுகி, நாசூக்காகச் சொல்லி அமைதியாக வாழ வழி திருப்புவீர்கள்.
   - (இ) சகித்துக் கொண்டு இருந்துவிடுவீர்கள்.

6. அதேபோல, நீங்கள் கணவருடன் சினிமா, டிராமா போய்விட்டு நேரம் கழித்து இரவு வீடு திரும்பி, 'அமர்க்களம்' செய்கிறீர்கள். பக்கத்து வீட்டுக்காரர், உங்களை டெலிபோனில் அழைத்து புகார் செய்கிருர். நீங்கள் —
   - (அ) அவர்களை வரச் சொல்லி பேசிச் சமாளிப்பீர்கள்.
   - (ஆ) மன்னிப்புக் கோருவீர்கள்.
   - (இ) கோபத்துடன் பதிலுக்குக் கத்துவீர்கள்.

7. பக்கத்து வீட்டுக்கு, கணவர் வீட்டில் இல்லாத போது, ஒரு கார் அடிக்கடி வந்து வாசலில் நிற்கிறது. ஒரு புது ஆள் இறங்கி உள்ளே சென்று, ஒரு மணி நேரம் இருந்து விட்டுத் திரும்பச் செல்கிருர். நீங்கள் —
   - (அ) அவளுடைய உறவுக்காரன் போலிருக்கு என்று நினைப்பீர்கள்.

(ஆ) 'கள்ளக்காதலன்' என்று முடிவு செய்து விடுவீர்கள்.

(இ) வீட்டைச் சுற்றிச் சதா கண்காணிப்பீர்கள். (உள்ளே என்ன நடக்கிறது என்று கண்டறியத் துடிப்பீர்கள்.)

8. பக்கத்து வீட்டில் வசிப்பவர் ஒரு வயதான பெண்மணி. அவரை இரண்டு நாட்களாகக் கண்ணிலேயே காணவில்லை. நீங்கள் —

(அ) 'உடம்பு கிடம்பு சரியில்லையா?' என்று கவலைப்படுவீர்கள்.

(ஆ) கூப்பிட்டு, 'என்ன கண்ணிலேயே காணோம்' என்று விசாரிப்பீர்கள்.

(இ) கவலையே படாமல் இருந்துவிடுவீர்கள்.

9. மொத்தத்தில் அண்டை வீட்டாருடன், நீங்கள் —

(அ) பரஸ்பர நம்பிக்கையுடன் நட்புறவுடன் இருக்கிறீர்கள்.

(ஆ) அதிகமாக அலட்டிக் கொள்வதில்லை.

(இ) பேச்சு வார்த்தையே இல்லாமல் இருக்கிறீர்கள்.

(ஈ) அவர்கள் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது.

உங்கள் விடையை 'டிக்' செய்துவிட்டீர்களா?

இதோ ஸ்கோர் போர்டு: (1) அ 1 ஆ 3 இ 5 மார்க். (2) அ 5, ஆ 1, இ 3. (3) அ 1, ஆ 3, இ 5. (4) அ 1, ஆ 3, இ 5. (5) அ 5, ஆ 5, இ 2. (6) அ 5, ஆ 4, இ 2, (7) அ 3, ஆ 5, இ 1, (8) அ 4, ஆ 2, இ 5, (9) அ 5, ஆ 4, இ 3, ஈ 4.

உங்கள் ஸ்கோர் உங்களைப் பற்றி அளிக்கும் 'சித்திரம்' இது:

பத்துக்குக் கீழ்: நீங்கள் உதவும் மனப்பான்மையுடைய, நட்புறவுடன் கூடிய நல்ல 'அண்டை வீட்டுக்காரி'யாக நினைத்துக் கொண்டு இருக்கிறீர்கள். திடுக்கிடாதீர்கள். அக்கம்பக்கத்தில் உங்களைப் பற்றிய நிஜமான எண்ணம் என்ன தெரியுமா? நீங்கள் அதிகப்பிரசங்கித்தனமாக மூக்கை நுழைக்கிறீர்கள் என்பதுதான்.

10 லிருந்து 20 வரை: நல்ல எண்ணத்துடன் கூடிய நிஜமாகவே உதவுகிற பெண்மணி நீங்கள். நட்புறவுடன் பழகுகிறவர். ஆனால் அதைத் தவறாகப் பிறர் புரிந்து கொள்ள இடமளித்து விடாதீர்கள்.

30 க்கு மேல்: நீங்களே சரியான 'குட் நெய்பர்' அவார்டைப் பெற உரிய பெண்மணி. கண்ணியமும், அன்பும் கொண்டு, அவசரப்படாமல் செயல்படுகிற பெருந்தன்மையான பெண்மணி நீங்கள்.

— அருந்ததி

மங்கையர் மலர் போட்டியோ போட்டி!

'புதுமொழி'

* சான் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை என்பது ஆண்களைப் பற்றிப் பெருமையாகக் கூறப்படும் பழமொழி. ஆனால்... இன்று... பெண்கள்... ஆண்களுக்குச் சமமாக... எல்லாவற்றிலும் ஈடுகொடுக்கின்றனர். ஆகவே... பெண்களைப் பற்றிப் பெருமைப்படும்படியாக 'புதுமொழி'களைப் படையுங்களேன்... சுவையானவற்றைப் பிரசுரித்துச் சன்மானமும் அளிக்கிறோம்...

விரதத்தில் சங்கடம்!

* பெண்களும் விரதமும் சகோதரிகள் எனப் பெரியவர்கள் கூறுவதுண்டு. அப்படியொரு நெருக்கம் அவர்களிடையே உண்டு. உண்ணா விரதம் இருக்கும் போதோ, மௌன விரதம், வேறு ஏதேனும் விரதம் இருக்கும் போதோ எதிர்பாராமல், பிரச்னைகள் முளைப்பதுண்டு. அப்படி எழுந்த பிரச்னைகளில் சுவையானவற்றை, எங்களுக்கு எழுதலாமே...!

உங்கள் கணவர் எப்படி?

* சிலருடைய கணவர்கள்.. புத்திசாலிகளாகவும்... சுறுசுறுப்பாகவும்... அசமந்தமாகவும்... சிடுமூஞ்சிகளாகவும்... சந்தேகப் பிறவிகளாகவும் அமைந்து விடுவதுண்டு.

உங்களுடைய கணவர் எப்படி? எப்படி அவரைச் சமாளிக்கிறீர்கள்? அவரைப் பற்றிய சுவையான ஒரு சம்பவத்தை, வாசகிகளுடன் பகிர்ந்து கொள்ளலாமே...!

சாதனை படைத்த எங்களூர்ப் பெண்மணி

* சாதனை என்றவுடன் பி. டி. உஷாவோ... சகுந்தலா தேவியோதான் நினைவுக்கு வரவேண்டுமா? உங்களுடைய ஊரிலும் அமைதியாக, ஏதாவது ஒரு குறிப்பிட்ட பிரிவில், சாதனை புரிந்து கொண்டிருக்கும் பெண்மணிகள் இருக்கலாமே... அவர்களைப் பற்றி, புகைப் படத்துடன் சுருக்கமாக எழுதலாமே...!

(கருத்துக்கள்: கிருத்திகா)

இதற்கு



கும்பகோணம், முருகேசன்.

என்னுடன் உடன் பிறந்த தங்கைகள் ஐவர். அவர்களின் திருமணச் செலவு முதல் சீர் சிறப்புகள் வரை கடன் வாங்கி நானே செய்து வருகிறேன். எனது தாயாருக்கு சாப்பாட்டுச் செலவு, இதர செலவுகளுக்குப் பணம் கொடுத்து வருகிறேன். எனது தந்தை 1956 க்குமுன் இறந்து விட்டார். அவர் இறந்த பொழுது நாங்கள் ஆறு பேரும் மைனராக இருந்தோம். தந்தையின் சுயசம்பாத்தியச் சொத்து சிறிதளவு புன்செய் நிலம் உள்ளது. அந்தச் சொத்தில் எனக்குள்ள உரிமை பற்றியும், தாய், சகோதரிகளுக்கு உள்ள உரிமை பற்றியும் சரியான விளக்கம் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுடைய தந்தை 1956 க்கு முன் இறந்துள்ளதால் அவருடைய சுயசம்பாத்திய சொத்தில் உங்களுக்கும், உங்களுடைய தாயாருக்குமே உரிமையுண்டு. முழுமையாக உங்களுக்கே கிடைக்காது.

சென்னை — 35, மைதிலி மணியன்.

கடந்த இருபது ஆண்டுகளாக நந்தனம் சி. ஐ. டி. நகரில் நாங்கள் வாடகை வீட்டில் வசித்துவருகிறோம். வீட்டுக்காரர் நல்லவராக இருந்தும், அவருக்கு மெட்ராஸில் இதைத் தவிர வேறு சில வீடுகள் இருந்தும் இந்த வீட்டை விற்று விட்டதாகக் கூறி எங்களைக் காலி செய்யும்படி கூறுகிறார். வீட்டுக்காரருக்கு விற்க வேண்டிய சூழ்நிலை இல்லை. வாடகையை ஒழுங்காகச் செலுத்தி வரும் எங்களை, இருபது வருடங்களாக ஒரே வீட்டில் இருந்து வரும் எங்களை, திடீரென்று காலி செய்யச் சொல்ல வீட்டுக்காரருக்கு உரிமை உண்டா? மிகவும் நல்ல வசதியில் இருக்கும் வீட்டுக்காரர் மேல் நாம் ஏதாவது நடவடிக்கை எடுக்க வழி உண்டா? இத்தனை வருடங்கள் இருந்த எங்களுக்கு ஏதாவது பணம் கிடைக்க வழி உண்டா?

ஒருவர் வாடகை கொடுத்துக் கொண்டு ஒரு வீட்டில் குடியிருப்பாரேயானால் அவர் எப்பொழுதும் வாடகைதாரர்தான். எத்தனை வருடங்களானாலும் அந்த வீட்டின் மீது உரிமை கொண்டாட முடியாது.

ஆனால் வீட்டின் சொந்தக்காரரும் திடீரென்று வீட்டைக் காலி செய்ய சொல்ல முடியாது. தகுந்த கால அளவில் முன்கூட்டியே சொல்ல வேண்டும். தவிரவும் வாடகைதாரர்களை காலி செய்யச் சொல்லத் தகுந்த காரணங்களும் இருக்க வேண்டும். வாடகை சரியாகத் தராவிட்டாலோ, வீடு நியாயமான காரணங்களுக்காக அவருக்கே வேண்டியிருந்தாலோ, வீட்டை முழுவதும் புதுப்பித்தாலோதான் அவர் வாடகைதாரரைக் காலி செய்யச் சொல்ல முடியும்.

உங்கள் வீட்டின் சொந்தக்காரர் வசதி படைத்தவர் என்று சொல்கிறீர்கள். சட்டத்தின் முன் வசதி படைத்தவர், வசதியில்லாதவர் என்ற பேதமே இடையாது. அனை

என்ன செய்வது?

